அம்பையின் கதை

பாலகுமாரன்

அம்பையின் கதை
பாலகுமாரன்

1

அவள் கோட்டையின் உச்சிக்கு ஏறி அங்கு வெகுகாலம் தொங்கி இருந்த மாலையை எடுத்து தன் கழுத்தில் போட்டுக் கொண்டாள்.

வானத்தில் வட்டமிட்டிருந்த கருடன் கீச்சுக்குரலில் அவளை ஆசிர்வாதம் செய்தது. அவள் மாலை அணிந்த நேரம் நல்லநேரம் என்று சொல்லாமல் சொல்லியது. அவள் கோட்டையின் உச்சியிலிருந்து வானம் பார்த்தாள். கைகூப்பினாள். மெல்ல தலையை இறக்கி தொலைதூரம் அஸ்தினாபுரம் இருந்த இடம் பார்த்து பல் கடித்தாள். கால் உதைத்தாள். வலக்கையில் இருந்த கத்தியை எடுத்து காற்றில் வீசினாள். மறுபடியும் இடுப்பில் சொருகிக் கொண்டாள். இடையறாத கோபத்தோடு அஸ்தினாபுரம் திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு சிகண்டி என்று பெயர்.

பாஞ்சாலம் - ஐந்து நதிகள் பாய்கின்ற தேசம். சேறான ஆற்றுப்பகுதியும், நீண்ட கால்வாய்கள் போகின்ற வயல் வெளிகளும், சிறுசிறு குன்றுகளும் இருக்கின்ற தேசம். மேற்குப்பக்க கடலிலிருந்து கிளம்பும் மேகங்கள் இமய மலையைத் தாக்கி, பின்னடைந்து, பாஞ்சால தேசத்தில் மழையாகப் பெய்கிறது. கொல்லும் குளிர் இமய மலையிலிருந்து வீச, வாழ்வு அந்தக்குளிரினால் ரம்மியமாய் மந்தமாய் இருக்கிறது. பசுக்கள் நிழலுக்கு ஒதுங்காமல் எப்பொழுதும் வயல்வெளியில் மேய்ந்து கொண்டிருக்கும். நிறைய உண்பதால் நிறைய பால் கொடுக்கும். மிதமிஞ்சி பால் இருப்பதால் விதம் விதமாய் பால் பண்டங்களை சாப்பிட்ட பாஞ்சால தேசத்து இளைஞர்கள் பலம்மிக்கவர்களாகவும், போர் செய்வதில் ஆர்வம் மிக்கவர்களாகவும் இருந்தார்கள்.

பாஞ்சாலதேசத்து யுவதிகள் சிறுவயதிலேயே வலிவுள்ளவர்களாகவும், அழகாகவும், கட்டிளங் குமரிகளாகவும் காட்சியளித்தார்கள். அவர்கள் சிரிப்பும், சந்தோஷமும் ஒவ்வொரு கிராமத்தையும் அதிரடித்தன. அவர்கள் செய்யும் குறும்புகளை ஊர்மக்கள் ரசித்தார்கள். காதல் வசப்பட்டும், காமவசப்பட்டும் ஆண்களைச் சீண்டினார்கள். சிறுசிறு சண்டைகளை மூட்டி விட்டார்கள். பாஞ்சாலம் எப்பொழுதும் படபடப்பாகவும், பரபரப்பாகவும் இருந்தது.

பசுக்களையும், பயிர்த்தொழிலையும், நம்பியிருந்த தேசமாதலால் வசந்தகாலத்தில் வேலைகள் அதிகமிருந்தன. இந்தக் குளிர்காலத்தில் பண்டிகைகள் கொண்டாடினார்கள். இரவு தீப்பந்தங்களை கொளுத்திவிட்டு பாட்டு கேட்டார்கள். நடனங்கள் பார்த்தார்கள். பெரிய போர்வீரர்களின் கதைகளை பெரிய வர்கள் சொல்ல கேட்டார்கள்.

பிற்பகல் நேரம் வெய்யில் இருந்தது. குளிரும் இருந்தது. அந்த நேரம் கனத்த குரலுடைய பாடகர்களை உட்காரவைத்து அமைதியான ராக ஆலாபனைகளை செய்யச் சொல்லி அதில் மனம் கரைந்தார்கள். மாலையில் குளிர் அதிகமாக, எகிறிக் குதித்து உடைகள் சுழல நடனமாடினார்கள். பட்டையான கத்திகள் போலுள்ள இரும்புத் தகட்டில் வளையங்கள் பொறுத்தி அதைத் தட்டி சத்தம் எழுப்பி அந்த தாளத்திற்கேற்ப ஆண்கள் நடனமாடுவதை பெண்கள் கண்டுகளித்தார்கள்.

உயரமும், கட்டுமஸ்தான அகலமான மார்பும், கறுத்த தாடியும், பருத்த தொடைகளும் உள்ள ஆண்கள் குனிந்து வளைந்து நடனமாடுவதைப் பெண்கள் உற்சாகமோடு பார்த்தார்கள். ஐயோ என்று சிலிர்த்து எழுந்தார்கள். மறுபடியும் அடங்கி உட்கார்ந்தார்கள்.

சுருண்டு சுருண்டு வரும் மேற்கத்திய கடல் அலை போல எல்லாப் பெண்களுக்கும் இடைவிடாது காமம் அடிக்கடி வந்து கிளர்ச்சியடைய வைத்துக் கொண்டிருந்தது. அந்தக் காமத்தால் ஏற்பட்ட முகச்சிவப்பை, நாணத்தை ஆண்கள் வெட்கமின்றி ரசித்துக் கொண்டார்கள். ஆனால், முற்றி முதிர்ந்த பெண்களுக்கு இளம்பெண்கள் பண்ணுகின்ற கூத்துகள் என்ன வென்று நன்கு தெரிந்திருந்தது.

அடியேய்... அதிகம் மாரை நிமிர்த்தாதீர்களடீ. ஏற்கனவே பிடுங்கிக் கொண்டு தெரிகிறது. போவோர், வருவோர் அத்தனை பேரும் முறைத்துப் பார்க்கிறார்கள். இன்னும் திமிறித் திமிறி நின்றீர்களானால் அந்த ஆண்கள்தான் பாவம். என்ன செய்வார்கள் அவனவன் வயலில் வேலை செய்ய வேண்டாமா உங்களைப் பார்த்தே பல்காட்டிக் கொண்டிருந்தால் மற்ற வேலைகளை யார் செய்வது என்று அதட்டினார்கள். அதேசமயம் பெண்களைக் கவனிக்காமல் வேலையே மும்முர மாய் இருக்கின்ற ஆண்களையும் கோபித்துக் கொண்டார்கள்.

“நீயும் எருமையும் ஒன்றா. எப்பொழுதும் வயல்வெளியில் தான் கிடப்பாயா. வீடு என்று இருப்பதை மறந்துவிட்டாயா. ஒருநாள்கூட உன்னை ஆட்டத்தில் பார்த்ததில்லையே. வாய் திறந்து என்றாவது நீ பாடியிருக்கிறாயா. என்ன ஜென்மம் நீ. குதிர் குதிராய் பெண்கள் இருக்கிறார்கள். எவளோடாவது வாய் திறந்து பேசேன். மனம் திறந்துப் பழகேன். உன் வயலை யார் எடுத்துக் கொண்டு போகப் போகிறார்கள். அது இங்கேதான் கிடக்கும். காலங்காலையிலேயே வயலோடு கிடக்காதே” என்று அதட்டினார்கள்.

ஆண்களும், பெண்களும் அதிகம் கூடி, நிறைய குழந்தைகள் பெற்று பாஞ்சாலத்தை வலிவுமிக்க தேசமாகச் செய்ய வேண்டும் என்பதில் அந்த

கிழவிகளுக்கு மிகுந்த அக்கறை இருந்தது. ஒரு தேசம் செழிப்பாக வேண்டுமென்றால் வெறும் வயல் வெளிகளும், எருமைகளும், ஆடு மாடுகளும் போதாது. பலமுள்ள இளைஞர்கள் வேண்டும். திறமைமிக்க பெண்கள் வேண்டும். ஒரு தம்பதியினர் குறைந்த பட்சம் பன்னிரெண்டு பிள்ளைகளாவது பெற வேண்டும். குழந்தைகள் பிறக்கப் பிறக்கத்தான் ஒரு தேசம் வலிமையுள்ளதாகும். பிறந்த குழந்தைகள் ஆரோக்கியமாக இருந்துவிட்டால் அந்த தேசம் நிச்சயம் மிகப்பெரிய வெற்றி பெறும்.

துருபதன் என்கிற அரசன் பாஞ்சாலத்தை ஆண்டு கொண்டிருந்தான். அவன் நல்ல அரசன். சத்புத்திரர்கள் வேண்டுமென்று ஆசைப்படுகிறவன். அதற்காக நியமங்களோடு ஹோமங்களைச் செய்பவன். பக்தியுள்ளவன். பித்ருக்கள் மீது மரியாதை உள்ளவன். வனங்களில் உள்ள தேவதைகளையும், வயல்களில் உள்ள சாமியையும் விடாது கும்பிடுபவன். இந்திரனுக்கு விழா எடுப்பவன். அந்தணர்களை மதிப்பவன். அறிவாளிகளோடு கலந்து பழகுபவன். போர் மறவர்களை உற்சாகப்படுத்துபவன். விவசாயிகளோடு விவசாயியாக வயலில் இறங்கி வேலை செய்கிறவன். எங்கு விவசாயிகளைக் கண்டாலும் தேர்விட்டு இறங்கி நின்று அந்தப் பக்கத்து விவசாயம் பற்றி, பயிர் பாதுகாப்பு பற்றி அக்கறையாக விசாரிப்பவன். பெண்களிடம் மிகுந்த பிரியமுள்ளவன்.

உன் கிராமத்தில் அழகான பெண் இருந்தால் சொல்லேன். நான் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கிழவிகளோடு கைகோர்த்து சிரிக்கிறவன்.

இது விளையாட்டுத்தான். கிழவிகளுக்குத் தெரியும். ஆனால் மன்னர் நமது கிராமத்தில் பெண் எடுக்கமாட்டாரா என்று பல பெண்கள் சிந்திப்பார்கள்.

குழந்தைகளை கவனித்து அக்கறையாக வளர்ப்பார்கள். அருமையாக அலங்காரம் செய்வார்கள். இதனால் கிராமத்திலுள்ள எல்லாப் பெண்களுமே கவர்ச்சியாய் கண்களுக்கு விருந்தாய் வளர்ந்தார்கள். ஆண்களைக் கவர அவர்களுக்கு தெரிந்திருந்தது.

இது மன்னர் கொடுத்த உற்சாகம். மன்னர் என்பவர் எங்கோ வானத்தில் மிதப்பவரல்லர். கோட்டை கட்டி உயரே வாழ்ந்து தனக்கும், தனது கீழுள்ள பிரஜைகளுக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்று கிடப்பவரல்லர்.

துருபதன் மக்களோடு மக்களாகக் கலந்து எல்லா மக்களுக்கும் தன்மீது ஈடுபாடு வரச்செய்து, அதேபோல தன் ஈடுபாட்டை எல்லா மக்களிடமும் காட்டிய மகோன்னதமான அரசன்.

அரசன் 'எனக்கு நல்ல பெண் கிடைக்காதா' என்று கிராமத்தில் தேடுவதை சாக்காகக் கொண்டு கிழவர்களும் பேச ஆரம்பித்தார்கள்.

“ஏய்... இந்தக்குட்டி எனக்குத்தான்” என்று ஐந்து வயது பெண்ணைப் பார்த்து நாற்பத்தைந்து, ஐம்பதுவயது ஆள் தொடை தட்டுவான். பத்து வயது பெண்ணைப் பார்த்து என்னைத் திருமணம் செய்துகொள். பார் எப்பேர்ப்பட்ட புஜவலிமை என்று கையை மடக்கிக் காண்பிப்பான். தொடையை தட்டிக் காட்டுவான். அவளைத் தூக்கிக் கொண்டு தலைக்கு மேல் சுற்றி கீழே இறக்குவான். ஆணின் தொடலாலும், சீண்டலாலும் பெண்கள் சிவந்து மனதும், உடம்பும் கனிந்து பேரழகிகளாக வளர்ந்தார்கள். ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் சார்ந்து இருப்பதுதான் இயல்பு. அதுதான் நல்லது. பெண்களைக் கண்டு ஆண் அஞ்சி ஓடுவதும், ஆண்களைக் கண்டு பெண் குலை நடுங்குவதும் அபத்தமான விஷயம்.

பெண்களை மிரட்டுவது வெறும் பெட்டை கம்பீரம். ஆண்களைக் கண்டு அருவெறுப்பது ஆரோக்கியமற்ற விஷயம். நோய்த்தன்மை. நீச்சமான எண்ணம் உள்ளவளே ஆணை வெறுப்பாள். ஆண் வேண்டாமென்ற பெண்ணுக்கு, பெண்ணின் அணைப்பு முக்கியமாகிவிடும். பிறகு இயற்கைக்கு எதிர்மறையான கோளாறான விஷயங்கள் ஏற்பட்டுவிடும்.

ஆனால், பாஞ்சாலம் அப்படியில்லை. பெண்களை விரும்புகின்ற ஆண்களும், ஆண்களை நேசிக்கின்ற பெண்களும் நிரம்ப இருந்தார்கள். அதனால் தேசம் வளமாக இருந்தது.

அங்கே சிகண்டி என்று ஒருத்தி இருந்தாள் என்பதும், அவள் துருபதனின் ஆதரவில் வளர்கிறாள் என்பதும் யாருக்கும் தெரியாமல் இருந்தது. சந்தோஷமான அந்த தேசத்தில் சிகண்டி யாரோடும் ஒட்டாமல் வாழ்ந்து வந்தாள்.

ஆட்டம் பாட்டம் அதிகமாக இருக்கின்ற குளிர்காலத்தில் அவள் வனம் நோக்கிப் போய்விடுவாள். இரவு நேரங்களில் வனத்திலுள்ள குகைகளில் படுத்து உறங்குவாள். பகல் நேரங்களில் வனம் முழுவதும் ஓடி மரங்களின் மீது ஏறி இறங்கிக் கொண்டிருப்பாள். அந்த வனத்தின் பலமரங்களில் 'பீஷ்மர்' என்று பெயர் செதுக்கப்பட்டிருக்கும். செதுக்கப்பட்ட இடம் அம்புகளால் துளைக்கப்பட்டிருக்கும். ஈட்டியால் குத்தப்பட்டிருக்கும். வாளால் வெட்டப்பட்டிருக்கும். பச்சைப்புற்களால் உயரமாக ஒரு பொம்மை செய்து அதற்கு காய்ந்த புற்களால் தாடியும், தலைமயிரும் வைத்து பீஷ்மர் என்று பெயர் எழுதி அதை வெறிபிடித்தது போல் தாக்கினாள்.

தான், ஒருநாள் முழுவதும் புல்லால் செய்த உருவத்தை ஓரிரு நிமிடங்களில் கிழித்துப் போட்டாள். வெறியோடு

மிதித்தாள். புல்லால் செய்தால் பிய்த்து விடுகிறோம் என்று கல்லால் செய்த உருவங்களை கைமுட்டியில் தாக்கினாள், மரத்தால் உருவங்களை செய்து சேணமில்லாத குதிரையில் ஏறி ஓடும்பொழுதே இரண்டு மூன்று அம்புகளால் அந்த மரபொம்மையை தாக்கினாள். திரும்பவும் விரைவாக வந்து ஆறேழு அம்புகளால் அடித்தாள். மறுபடியும் வேகமாக அடித்து இருபது அம்புகளால் துளைக்க முடியுமா என்று இடைவிடாது முயற்சி செய்தாள். எல்லா உயிர்நாடிகளிலும் அம்புகள் தாக்கப் படவேண்டுமென்று ஆசைப்பட்டாள். வெறுமே இருதயத்தைப் பார்த்து அம்புவிட்டுக் கொல்வதல்ல என் வேலை. உடம்பு முழுவதும் துளைக்க வேண்டும். ஒவ்வொரு அங்கமும் பிய்க்கப்படவேண்டும். ஒவ்வொரு தசையும் அசைக்கப்பட வேண்டும். துடிதுடித்து துடிதுடித்துச் சாகவேண்டும் என்று வெஞ்சினத்தோடு பல் கடித்தாள். உரக்கக் கூவினாள். செவ்வகமாக உருவம் வரைந்து பீஷ்மர் என்று சொல்லி அதை எட்டி உதைத்தாள். துப்பினாள். ஒவ்வொரு நாளும் மனத்தில் அக்னி வளர்த்து, அந்த அக்னியில் ஆறுமுகக் கடவுளை வரவழைத்து அவருக்கு தன் விரல் நுனியை கிழித்து ரத்தம் கொடுத்தாள். இழந்த ரத்தத்தை மீண்டும் உடம்பில் தோற்றுவிப்பதற்காக நல்ல பழங்களை உண்டாள். பக்குவமான மாமிசத்தை சாப்பிட்டாள்.

“நீ பெண்ணாயிற்றே. உனக்கு ஹோமம் செய்ய எந்த அதிகாரமும் இல்லையே” என்று காட்டு வழியே போன சில அந்தணர்கள் சொன்னபோது, தான் பெண் இல்லை ஆண் என்றாள்.

“உன் பெயர் அம்பை. நீ காசி தேசத்து மன்னனுக்கு மூத்த பெண்ணாகப் பிறந்தவள். இதுதான் உன் சரிதம். நீ எப்படி ஆணாக முடியும்” என்று அந்தணர்கள் வினவினார்கள்.

“அம்பை செத்துப் போய்விட்டாள். குணமும், அழகும், பாட்டும், ஆட்டமும், குதூகலமும் நிறைந்த அந்தப் பெண் இறந்து போய்விட்டாள். இப்போது நான் சிகண்டி என்கிற ஆண்.” அந்தணர்கள் மௌனமாக அவளை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“இது என்ன.”

அவள் ஒரு கருங்கல்லை நீட்டினாள்.

“கல்” என்று சொன்னார்கள்.

“இது என்ன.”

அவள் ஒரு மரத்துண்டை நீட்டினாள்.

“மரம்” என்று சொன்னார்கள்.

“இது என்ன.”

அவள் பறித்த கொடியை நீட்டினாள்.

“கொடி” என்று சொன்னார்கள். “

இதை எப்படி சொல்வீர்கள். இதை ஏன் நீங்கள் மரம் என்று சொல்வதில்லை” என்று சுட்டிக்காட்டினாள்.

“அதனுடைய தன்மையால் அது கொடி. இதன் தன்மையால் இது மரம். அதன் தன்மையால் அது கல்.” ஒரு அந்தணர் விளக்கினார்.

“அதுதான். குணத்தை வைத்துத்தான் நீங்கள் பெயரிட்டு அழைக்கிறீர்கள் அல்லவா. இந்தக் கொடி மென்மையாக இருப்பதால் கொடி என்றும், இந்த மரம் அதைவிட சற்று திண்மையாக இருப்பதால் மரம் என்றும், இந்தக்கல் பிளக்க முடியாதபடி உறுதியாக இருப்பதால் இதை பாறை என்றோ, கல் என்றோ சொல்கிறீர்கள். மென்மையாக இருந்த என் குணம் வன்மையாக மாறிவிட்டது. என் உடம்பு வலிமையாக திரும்பிவிட்டது.

எனவே, நான் பெண்ணல்ல. குணத்தால் ஆண். சிகண்டி என் பெயர்.”

பீஷ்மர் என்ற பெயர் பல இடங்களில் செதுக்கப்பட்டிருப்பதும், அது அம்பால் அடிக்கப்பட்டிருப்பதும், வாளால் வெட்டப்பட்டிருப்பதும் பார்த்து சிகண்டியின் நோக்கம் என்ன என்பதை அந்தணர்கள் புரிந்து கொண்டார்கள். சிகண்டியை சமாதானப்படுத்தவே முடியாது என்பதை அவள் உக்கிரமான பார்வையில் புரிந்து கொண்டார்கள். அதே நேரத்தில் சிகண்டி ஜெயிக்க வேண்டும். சிகண்டியின் லட்சியம் நிறைவேற வேண்டும் என்று வாழ்த்தவும் முடியாது என்பதை புரிந்து கொண்டார்கள்.

உலகில் எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு. எவ்வளவு உயர்வான விஷயமாக இருந்தாலும், எத்தனை தாழ்ந்த விஷயமாக இருந்தாலும் அது ஒரு முடிவுக்கு வந்தே ஆக வேண்டும்.

'பீஷ்மரின் முடிவு, இதோ இந்த சிகண்டியின் கையில் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டார்கள். விதி என்று அறிந்து வெறுமே தலையசைத்துவிட்டு மேற்கொண்டு நகர்ந்து போனார்கள். யாரும் வழி மறிக்காமல், யாரும் வாழ்த்தவும் செய்யாமல் விலகி விலகிப் போவதால் சிகண்டியின் மனம் இன்னமும் கடுமையாகியது. அந்த உக்கிரம் அதிகமாகியது. உடம்பு இரும்புபோல் இறுகியது.

தனித்துவிடப்பட்ட சிகண்டி வெறிபிடித்தது போல் மறு படியும் பீஷ்மர் என்ற உருவத்தை தாக்கினாள். அம்புகளால் அந்த மரத்தை சிதைத்துப் போட்டாள்.

உடம்பு முழுவதும் கணுக்கணுவாக வலித்தது. மூச்சடக்க குளத்துச் சேற்றில் அழுந்திக்கிடந்தாள். மூலிகைச்சாறு நிறைந்த சேறு. அவள் உடம்பு முழுவதும் பரவி,

காயங்களை மாற்றி வலியைக் குறைத்து அவளுக்கு புத்துணர்ச்சி ஊட்டியது. மூளையின் கொதிப்பு குறைவதற்காக, அவள் சேறில் உட்கார்ந்து, சிறியதாய் நறுக்கப்பட்ட கேசம் உடைய அவள், தலையில் சேற்றை அள்ளி பூசிக்கொண்டாள். முகம் முழுவதும், உடம்பு முழுவதும் சேறு வழிய வெய்யிலில் உலர்ந்தாள். உடலில் சேறு உலர்ந்து இறுகி அவள் உடம்பு வர்ணத்தை கறுப்பாக மாற்றியது. தோலை முரட்டுத்தனமாய் செய்தது.

காட்டு முயல்களை அடித்துப் பச்சையாகச் சாப்பிட்டதால் அவளுடைய உடம்பில் பூனைமயிர் அதிகம் முளைத்தது. முகத்திலும், முகவாயிலும், காதுகளிலும் முடிகள் வளர்ந்தன. உடம்பின் பல பகுதிகளில் பசுந்தாளாய் இருந்த ரோமம் தழைத்து கருமையாக மாறியது. கனத்து வளர்ந்திருந்த மார்பகங்கள் இடைவிடாத ஓட்டத்தாலும், யுத்த பயிற்சியினாலும் இறுகி திண்மையாய் ஆணினுடைய மார்புபோல இருந்தது. புஜங்கள் கரளை கரளையாக இருந்தன. மலை ஏறி இறங்கி வனங்களில் இடையறாது ஓடி தொடைகள் வலிவு மிக்கவையாய் மாறின. இடுப்பு சிறுத்து மார்புப்படம் பெரிதாகியது. பாதங்கள் அகலமாயின. மரங்களை அடித்து போர் புரிந்ததால் உடம் பெல்லாம் ரத்தக்காயங்கள் இருந்தன. ரத்தக்காயத்தை சேறும், மூலிகைச்சாறும் மாற்றியதால் அவை கனத்த தழும்புகளாயின. ஒரேயொரு சதவீதமாக பெண்மை அவள் கண்களில் தெரிந்தது. மற்றபடிக்கு முழுமையான வெறிகொண்ட ஒரு ஆண்குணத்தோடே சிகண்டி அலைந்து வந்தாள்.

சிகண்டி ஆணா, பெண்ணா.

சிகண்டி பெண். ஆணாக மாறிய பெண்.

ஆணாக மாறியது என்றால் எப்படி?

உள்ளமா... உடம்பா...

உள்ளம் மாற உள்ளத்தின் வேகத்தால் உடம்பும் மாறிற்று.

என்ன காரணம். எதற்காக ஆணாக இவள் மாற வேண்டும். அப்படியென்ன காயம். என்ன நடந்தது.

குளிர் சட்டென்று குறைந்து வெய்யில் உறைத்த ஒரு நாளில் மரங்களிலுள்ள பச்சை இலைகள் நன்கு விரிந்த நாளில், புற்கள் நன்கு வளர்ந்த நாளில், மலர்கள் பலதும் மலர்ந்து மணம் வீசும் நாளில் இன்னும் நான்குமாதம் வெய்யில்தான் என்றும் மாறும் பருவத்தில் சேணம் இல்லாத குதிரையின் மீது ஏறி சிகண்டி துருபதனின் அரண்மனைக்குத் திரும்பினாள்.

வழிமுழுவதும் எல்லா கிராமங்களிலும் குளிர் நீங்கி வெய்யில் வந்ததை மகிழ்ச்சியாக குறிக்கும் வகையில் வர்ணப் பொடிகளைத்தூவி, மலர்மாலைகள் அணிந்து, பட்டாடைகள் உடுத்தி மக்கள் விழாக்கள் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். துரத்தித் துரத்தி ஆண்கள் மீது பெண்களும், பெண்கள் மீது ஆண்களும் வர்ணநீரை ஊற்றியும், பீய்ச்சியும் கொண்டாடினார்கள்.

வெய்யில் நன்கு காய்ந்தது. ஆனால், தண்ணீர் சிலீ, ரென்றது. இந்த இரண்டுவித தன்மைகளையும் ஒரு சேர தாங்கமுடியாமல் ஆண்களும், பெண்களும் நெளிந்து ஓடினார்கள்.

சிகண்டி குதிரையில் கிராமத்தைக் கடக்கும்போது சகலரும் வழிவிட்டார்கள். ஒரு சொட்டு ஜலம்கூட சிகண்டியின் மீது தெளிக்கப்படவில்லை. சிகண்டி யார் என்று புரியவில்லை. அவள் மீது நீர் பீய்ச்ச சில குழந்தைகள் முயற்சி செய்தபோது பெரியவர்கள் பாய்ந்து தடுத்து விட்டார்கள்.

வணக்கம் சொல்லாமல், வாழ்த்துச் சொல்லாமல், மக்களோடு எந்த தொடர்பும் இல்லாமல் தனியே குதிரைமீது போகின்ற சிகண்டியை மெல்லிய கவலையோடும், பரிதாபத் தோடும் பார்த்தார்கள்.

பாஞ்சாலதேசத்து மன்னன் துருபதனுக்கு தன் வருகையை சொல்லிவிட்டு, அந்த அரண்மனையின் ஒதுக்குப்புறமாக உள்ள கட்டிடத்தில் சிகண்டி போய் நுழைந்தாள். கட்டிடம் தூய்மையாக வைக்கப்பட்டிருந்தது. அதை பராமரித்த வேலைக்காரர்கள் சிகண்டியின் முன்வந்து கைகூப்பி வணங்கினார்கள். மனம் கனிந்த வஸந்த ருது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள். சிகண்டி துருபதனிடமிருந்து தனக்கு வந்த மரியாதைகளை பங்கு பிரித்து அவர்களிடம் நீட்டினாள்.

துருபதன் கொடுத்தனுப்பிய துணிகளை கிழித்து கழுத்திலிருந்து முழங்கால்வரை ஒற்றை ஆடையாக அணிந்து கொண்டாள். இடுப்புக்குள் லங்கோடு போல இறுக்கி அங்கம் தெரியாமல் உடுத்திக் கொண்டாள்.

“கார்த்திகேயரை தரிசனம் செய்ய, இந்த வஸந்த ருதுவில் நான் மேற்குக் கரையோரமாக தெற்கு நோக்கிப் போகிறேன். யாரேனும் வருகிறீர்களா” என்று வேலையாட்களை வினவினாள். நன்கு குதிரை ஏறவும், பசிதாங்கவும், வனங்களில் புகுந்து புறப்படவும், துஷ்டமிருகங்களைத் தாக்கி துரத்தவும் வலிமையுள்ள ஆறுபேர் அவளோடு சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் வாலிபமும், மத்திய வயதும் உடையவர்களாயும் இருந்தார்கள்.

துருபதனிடம் விடைபெற்றுக் கொண்டு அவள் திரும்பிவர, அந்தக்குழு கோட்டையை விட்டு வெளியேறி, கிராமங்களைத் தாண்டி, வயல்வெளிகளைத் தாண்டி,

அடர்ந்த தோப்புகளைத் தாண்டி, காடுகள் தாண்டி மேற்குக்கரையோரம் தெற்குத்திசை பார்த்து நகர்ந்தது.

“ஏன் கார்த்திகேயரைத்தேடி நாம் போகிறோம். கார்த்திகேயர் என்ன மாதிரியான தெய்வம்” என்று குழுவில் புதிதாய் வந்தவன் ஒருவன் கேட்க, ஒரு மத்திமவயது மனிதன் அவனுக்கு பதில் சொல்ல ஆரம்பித்தான்.

“எதிரிகளை அழிக்க வேண்டுமென்றால், வெகுநாளைய வன்மத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்றால், மனஉறுதி வேண்டுமென்றால், இடையறாது ஒரு உக்கிரம் தேவையென்றால் கார்த்திகேயரை வழிபடுவது நல்லது. ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும், கைகளில் வேலும், வள்ளி என்ற குறமகளையும், தெய்வானை என்கிற தேவப் பெண்ணையும் மணந்த ஆறுமுகக்கடவுள் தெய்வசேனாதிபதி. தெய்வப்படைகளுக்குத் தளபதி. அவர் சண்டையில் மிகவும் வல்லவர். அவரைத் துதிப்போருக்கு மரணபயமில்லை. காரியங்களில் வெற்றி நிச்சயம். ஆனால் மிகக் கடுமையாக விரதங்கள் இருப்பது முக்கியம். கூடலில்லாத வாழ்க்கை உள்ளவருக்குத்தான் கார்த்திகேய ஸ்வாமி அதிகம் அருள் பாலிக்கிறார் என்று சொல்லப்படுவதுண்டு. கூடல் தீட்டுகள் அந்த பூஜையை, அந்த விரதத்தை குலைத்து விடும் என்றும் சொல்வார்கள். இல்வாழ்க்கை மறுத்தோருக்கு கார்த்திகேய ஸ்வாமி உபாசனை மிகச்சிறப்பாக கைவருகிறது. சிறிதளவும் நெறி பிறழாது வாழ்பவர்கள், குறிப்பாய் சாதுக்கள், சன்னியாசி கள் கார்த்திகேய ஸ்வாமி விரதம் மேற்கொள்கிறார்கள். உக்கிரமான விரதம் மேற்கொள்ள மேற்கொள்ள பலன் நிச்சயம்.”

“இப்போது நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்.”

விரதம் பற்றி விளக்கிச் சொன்னவரிடம், புதிதாய் சேர்ந்த வாலிபன் கேட்டான்.

“குடகு மலைக்கு அருகே சுப்ரமணியா என்கிற இடம் இருக்கிறது. ஒரு ஆற்றின் கரையோரம், அடர்ந்த வனத்துக்கு நடுவே ஒரு பாறை மீது அமர்ந்த கோயில் அது. நாகம்தான் உருவம். ஆனால், கார்த்திகேய ஸ்வாமிதான் அங்கு இறங்கியிருக்கிறது. அற்புதமான குழந்தைகள் பெற வேண்டுமெனில் அந்த இடத்தில் சிலகாலம் தங்கியிருந்து பூஜை செய்வது நல்ல பலன் தரும். ஆனால், இருட்டிய பிறகு அதிகம் நகரக்கூடாது. பாம்புகள் ஏராளமாய் ஊர்ந்து போகும். அயர்ந்து தூங்கும்போது நம்மீது பாம்புகளும் தடவிப்போகும். அந்தப் பாம்புகளின் தடவல்தான் ஒரு மனிதனின் பிள்ளைப் பேறுக்கு உதவி செய்கின்றன. அந்தப் பாம்புகளின் சுவாசம்தான் ஒரு மனிதனுக்குள் மன உறுதியை ஏற்படுத்துகின்றன. சுற்றிலும் அத்தனை பாம்புகளை பகலிலும், இரவிலும் பார்த்தபோது உன்னால் வெறும் கனவில் சஞ்சரிக்க முடியாது. ஏதோ ஒரு சிந்தனையில் மூழ்கியிருக்க முடியாது. நீ உன் புத்தி முழுவதையும் நெருப்பாக மாற்றி எப்பொழுதும் விழிப்போடும், ஒரு விடைப்போடும் தான் இருப்பாய். அந்த விழிப்பும், விடைப்பும் உன்னுள் நன்கு படிந்துவிட்டால் எல்லா நேரமும் உன்னுடைய புலன்கள் தெளிவாய் வேலை செய்யும்.

நான் சிகண்டியோடு இரண்டுமுறை போயிருக்கிறேன். நம்மைப் போன்ற நகர மாந்தர்களுக்கு அது மிகப்பெரிய பலனைக் கொடுக்கிறது. நகரத்திலுள்ள ஒவ்வொரு அசைவையும் நமது மனமும், புத்தியும் உடலிலுள்ள மற்ற பலன்களும் கவனித்து நம்மை ஒரு தயார் நிலையில் வைக்கின்றன. அதனால் பட்டணத்து விஷயங்களில் நாம் வெகு எளிதாக ஜெயிக்கலாம். நான் படைத்தலைவனாக

வந்ததற்குக் காரணமே இரண்டு முறை சுப்ரமணியா போனதுதான். கோட்டைகாவலில் எப்பொழுதும் விழித்திருக்கிறவன் இவன்தான் என்று என்னைச் சுட்டிக்காட்டி பதவி உயர்வு கொடுத்துவிட்டார்கள். எதிரிகளின் வருகையை வெகு தொலைவே விடியல் நேரத்தில் கண்டுபிடித்து விட்டேன் என்று மறுபடியும் பதவி உயர்வு கொடுத்தார்கள். எனக்கு என்ன காரணம் என்று புரிந்துவிட்டது. எனவே, நானாக விருப்பப் பட்டு சிகண்டியிடம் சேர்ந்துவிட்டேன். சிகண்டி இடையறாது இடையறாது விழிப்போடு இருக்கின்ற ஒரு போர்த்தளபதி. எடுத்துக் கொண்ட லட்சியம் தவிர, வேறு எதையும் சிந்திக்காத ஒரு இறுமாப்பு அங்கே இருக்கிறது. அங்கே வேலை செய்வது எளிதல்ல, மிகமிகக் கடினம். அதேநேரம் அங்கு வேலை செய்து பழகிவிட்டால் வேறு எங்கும் போய் வேலை செய்ய முடியாது."

படைத்தலைவன் சொல்லிவரும் போது, அந்தப்புதிய ஆள் அவனையே பார்த்துக்கொண்டு வந்தான்.

“என்னைப் பார்த்துக்கொண்டு வந்தால் மட்டும் போதாது. இந்தச் சூழ்நிலையை பார்த்துக்கொண்டு வா. விழிப்பாக இரு. துடிப்பாக இரு. உன்னை நான் தேர்ந்தெடுக்கவில்லை. நீ சிகண்டியின் தேர்வு. அதற்காகவே நீ பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இதுவே உன்னை மற்ற படைவீரர்களிடமிருந்து ஒருபடி உயர்த்துகிறது. உட்கார்ந்து தூங்குபவனை, நின்று தூங்குபவனை, வெறுமே கற்பனையில் மூழ்கி கிடக்கிறவனை, உணவு பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறவனை,உல்லாசம் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறவனை அவர் அருகே அண்டவிடுவதில்லை. இம்மாதிரியான ஆட்கள் தாங்களும் கெட்டு மற்றவரையும் கெடுத்துவிடுகிறார்கள். வேலை செய்யும் இடத்தில்

இவர்கள் இருப்பு பணியை கடுமையாக பாதிக்கிறது. இவர்கள் ஒழுக்கம் இல்லாத வர்களாகவும், கட்டுப்பாடு இல்லாதவர்களாகவும், கட்டுப்பாடு இல்லாததனாலேயே கயமைத்தனம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். வேலை செய்ய வேண்டும் என்ற ஆவல் இல்லாதவனை ஊரைவிட்டே விலக்கி வைக்க வேண்டும் என்பது சிகண்டியினுடைய கருத்து. ஒரு சோம்பேறி நூறு பேரை வெகுவிரைவில் சோம்பேறியாக்குவான் என்பது சிகண்டியினுடைய எண்ணம். சிகண்டி போர்ப்பயிற்சி செய்வதைப் பார்த்திருக்கிறாயா. குலை நடுங்கும். தாழ்ந்த மரக்கிளையை நோக்கி குதிரையை வேகமாகச் செலுத்தி குதிரை அடியில் போய்விட, வேண்டுமென்றே எழுந்திருந்து தாழ்ந்த மரக் கிளைக்கு மார்பு கொடுப்பவர்.”

“ஏன் இந்த வேகம்.”

“மார்பு கொடுத்து கிளையை உடைக்கவேண்டும் என்று விரும்புபவர். மறுபடி மறுபடி மோதி அந்தக்கிளையை உடைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். அவர் மடித்துக் கொள்வதும், புடைத்துக் கொள்வதும் பார்க்கும்போது நமக்குக் கண்ணில் ரத்தம் வரும்” என்று படைத்தலைவன் சொல்ல, அந்தப் புதிய வீரன் பயத்தோடு அவரைப் பார்த்தான்.

“எதற்கு ஒருவர் தன்னை இப்படி வருத்திக் கொள்ள வேண்டும்.”

“உடம்பை வஜ்ஜிரம்போல் மாற்றிக் கொள்ள வேண்டாமா. உடம்பை உறுதியாக்க வேண்டாமா."

“உண்மையில் சிகண்டி பெண்தானே.”

“ஆமாம் பெண்தான். நாம் ஆறு ஆண்கள் சிகண்டியின் பின்னால் போய்க் கொண்டிருக்கிறோம்.”

“நம்மைப்பற்றி எந்தப் பயமும் இல்லையா.”

படைத்தலைவன் புதியவீரன் கேள்விக்கு வாய்விட்டுச் சிரித்தான்.

“ஏன். என்ன செய்வதாக உத்தேசம்.”

“இல்லை, சிகண்டி எஜமானர். அவரை எதுவும் செய்வதாக எனக்கு உத்தேசம் இல்லை. ஆயினும் ஆறு ஆண்கள் வரும் போது, சிகண்டிக்கு ஒரு பயம் இருக்கவேண்டுமல்லவா.”

“நம்மால் சிகண்டியின் ஒரு ரோமத்தைக் கூட அசைக்க முடியாது.” |

“இருக்கலாம். பலம் பொருந்தியவராக, படைக்கலம் மிக்கவராக இருக்கலாம். ஆனால், குளிப்பதும், உடுத்துவதும் நமக்கு நடுவேதானே செய்யவேண்டும்.”

“இல்லை. சிகண்டி செய்வதில்லை. மாறாக நாமெல்லாம் எழுவதற்கு முன்பே சிகண்டி இந்த விஷயங்களை முடித்து விட்டு தயார் நிலையில் இருப்பதுதான் வாடிக்கை. சிகண்டி குளிப்பதை மட்டுமல்ல. உண்பதைக்கூட உன்னால் பார்க்க முடியாது. சிகண்டி எல்லோருடனும் உட்கார்ந்து உண்ப தில்லை. ஏனெனில், உண்ணும்போது இரண்டு பேரோடு உட்கார்ந்து உணவு பற்றிய பேச்சும், அதனால் ஒரு மனமிருதுவும், ஒரு நட்பும் ஏற்பட்டு விடுகின்றன. சிகண்டி யாரோடும் நட்பாக இருப்பதை விரும்புவதில்லை. எனவே, எவரோடும் சேர்ந்து உண்பதில்லை. தனிமை, இறுகிய தனிமைதான் சிகண்டியினுடைய தவம். இத்தனை பேருக்கு நடுவில் இருந்தாலும் சிகண்டி தனியான ஒரு ஜீவன்.”

“அப்படியென்ன நடந்து விட்டது சிகண்டிக்கு. ஏன் இந்தத் தனிமை. மனிதராகப் பிறந்து விட்டு எதற்கு இந்த ஒதுங்க ல்.”

புதியவீரன் ஆவலோடு கேட்க, படைத்தலைவன் மௌனமாக இருந்தான்.

மறுபடியும் வீரன் ஏதோ கேட்க முற்பட, போதும் நிறுத்து என்பதுபோல் கை காட்டினான்.

அவனைவிட்டு விலகி குதிரையை முன்னே செலுத்திக் கொண்டு வந்தான். விவரம் கேட்ட புதிய வீரனுக்கு ஒருகுழப்பம் ஏற்பட்டது.

கேட்டது தவறோ, மிகப் பெரிய குற்றமோ என்கிற பயம் ஏற்பட்டது.

அவர்கள் மௌனமாக சுப்ரமணியாவிற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

சுற்றிலும் அடர்ந்த வனம். அங்கே விதம் விதமாக பிராணிகள். நடுவே ஒரு பாறைத்திட்டு. வெய்யிலை உள்வாங்கி உஷ்ணம் கக்குகின்ற பாறைகள் அதிகமிருந்தன. அந்தப் பாறைகளுக்கு மேலே பலவிதமான பாம்புகள் நகர்ந்து கொண்டிருந்தன. இரவு நேரத்தில், பாறை இடுக்கில் வந்து படுத்துக் கொண்டன. வெய்யில் ஏற, மெல்ல நகர்ந்து காடுகளூடே போய் ஈரமான மண்ணில் சுருண்டு படுத்து கொண்டன. இலைகள் விழுந்து விழுந்து மிருதுவான மண்ணை எறும்புகள் எடுத்துக்கொண்டு போய் ஆளுயரம் - புற்று செய்ய, அந்தப் புற்றுக்குள்ளே போய் சுகமாக பதுங்கி கொண்டன. கரையான்கள் மரத்தை அரித்து பொந்துகள் உண்டாக்க அங்கும் பாம்புகள் குடியேறின. அணில்கள் எலிகள், முயல்கள், பட்சிகள் என்று பலவற்றையும் வேட்டையாடின. ஈரமும் சொரசொரப்பும் நிறைந்த ஆற்றங்கரை ஓரத்தில் பாம்புகள் தங்கள் இணையோடு கூடி பின்னிப் புரண்டன. விரைத்து எழுந்தன. மெல்ல ஆடின. கூடுகின்ற வேகத்தில் நீண்ட மூச்சுகளை

வெளிவிட்டன. கூடிய பிறகு ஆற்றில் நீந்தின. வேட்டையாடின. பாறையிடுக்கில் படுத்துக் கொண்டன.

சுப்ரமணியாவில் எங்கு பார்த்தாலும் பாம்புகள் நகர்ந்து கொண்டேயிருந்தன. பாறைக்கு நடுவே சுவர் எழுப்பி கல்தளம் போட்டு ஒரு கோவில் இருந்தது. அந்தக் கோவிலுக்குள்ளேயும் நாகம்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. உள்ளிருந்து மூக்கை நெருடுகின்ற, லேசாய் மயக்கம் கொடுக்கின்ற விஷக்காற்று வெளியே வந்து கொண்டிருந்தது.

சிகண்டி அங்கே போய் மூச்சை ஆழ்ந்து இழுத்து அந்தக் காற்றை சுவாசித்து, மெல்ல கைதட்ட உள்ளிருந்து பல பாம்புகள் வெளியே வந்தன. நீர் எடுத்துப்போய் அந்த நாகத்திற்கு அபிஷேகம் செய்து, பூக்களால் அர்ச்சனை செய்து. சிகண்டி அந்தப் பாம்புகளுக்கு நடுவே அசையாமல் உட்கார்ந் திருந்தாள்.

அந்தப் படைத்தலைவன் கைகட்டி நிற்க, மற்றவர்கள் பின்னடைந்தார்கள். சிகண்டி தன் தலையை வலது பக்கம் திரும்பிப் பார்க்க, படைத்தலைவன் மறுபடியும் குனிந்து வணங்கினான்.

என்ன என்பதுபோல் சிகண்டியின் புருவம் வளைந்தது.

“உங்களைப்பற்றி புதிதாய் வந்தவன் கேள்வி கேட்கிறான். சொல்லட்டுமா.”

சிகண்டியின் உடம்பு சிரிப்பில் ஒருமுறை குலுங்கியது.

வலது தொடையிலுள்ள வலதுகை மெல்லத்திரும்பி வானம் பார்த்தது. மேலெழும்பி தரையிறங்கியது. அதற்கு சரி என்று பொருள்.

படைவீரன் மெல்ல நகர்ந்ததும் பாம்புகள் தலை நிமிர்த்தி அவன் போவதைப் பார்த்து மெல்ல ஊர்ந்து, சிகண்டியின் உடம்பைச்சுற்றி தலைக்கு ஏறின. தோள்களில்

தவழ்ந்தன. பாம்பின் மூச்சுக்காற்றும் ஸ்பரிசமும் படப்பட கடும் உறுதி ஒன்று உள்ளுக்குள் படர்ந்தது.

பாம்புகள் இல்லாத எதிர்கரையில் குதிரைகளை நிறுத்தி. அதன் முதுகிலிருந்த சுமைகளைக் கழற்றி, குதிரைகளைச் சுற்றி கருவேல முட்களை வெட்டிப்போட்டு, குதிரைகளுக்கு புல் பிடுங்கிப்போட்டு, வீரர்கள் மூட்டைகளோடு கோயிலில் இருந்த பாறைக்கு ஆறுதாண்டி வந்தார்கள். நெருப்பு மூட்டி அடுப்பு பற்ற வைத்தார்கள். செப்புக் கலயத்தில் நீர் நிரப்பி மேலே வைத்து தினைமாவைக் கொட்டிக் கிளறினார்கள். தானியம் வைத்து பொறி வைத்து விட்டுவர, காட்டுக் கோழிகள் மாட்டிக்கொண்டு கூச்சலிட்டன. அவைகளின் நடமாட்டம் பார்த்து பாம்புகள் தலைதூக்கிச் சீறின. நெருப்பும், புகையும் பார்த்துவிட்டு விலகி ஓடின. மீன்களை ஒருவன் பிடித்துவர, லேசாய் எண்ணெய் தடவி அவைகளை சுட்டார்கள். கோழியை வதக்கினார்கள்.

தினைமாவுக் களியும், கோழியும், மீனுமாய், சாப்பிட்டார்கள். வெகுநாள் கழித்து நிறைவான உணவு கிடைத்த திருப்தியில் அவர்கள் அயர்ந்து உறங்கினார்கள்.

நள்ளிரவு நேரம் மெல்ல சந்திரன் மேலெழும்ப, பாம்புகள் பாதை தெரிந்து நடக்கத் துவங்கின. கோழிகளை சுருட்டி நிறுத்தின. கோழிகளை அடித்து அலற வைத்தன. மரத்தில் ஏறி பறவையின் முட்டைகளை பார்த்து உடைத்துத் தின்றன. பறவைகள் இடைவிடாது அலறின. வீரர்கள் எழுந்து பாம்புகளின் நடமாட்டத்தையும், அவைகள் நடத்தும் வேட்டையை யும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். மின்னல் போல் விரைவாய் பாம்புகள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டு வருவது பார்த்து பயந்து ஒதுங்கிக் கொண்டார்கள்.

இத்தனை பாம்புகளைப் பார்த்தால் தூங்க முடியும் என்று தோன்றவில்லை.

புதிய வீரன் பயத்தோடு சொன்னான்.

“நீ காலையில் கேட்டாயே. அதற்கு பதில் இப்போது சொல்கிறேன்."

படைத்தலைவன் சொல்ல, மற்ற வீரர்களும் நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

தொலைவே கோயில், உள்ளே தீபம். அதற்கு அருகே சிகண்டி. மேலே நிலவு. சுற்றிலும் பாம்புகள். சலசலக்கும் ஓடை. பகல் நேரத்தில் ஏற்றிய அடுப்பிலிருந்து வெளியாகும் புகை என்று அந்த இடத்தை ரம்மியமாய் மாற்றிக் கொண்டிருந்தது. நெருப்பில் அகில் கட்டையைச் சீவி ஒரு வீரன் போட, அகிலின் மணம் அந்த இடம் முழுவதும் பரவியது.

“சிகண்டியின் உண்மையான பெயர் அம்பை. இது போன ஜென்மத்துப் பெயர். முந்தைய ஜென்மத்து விஷயங்கள் அத்தனையும் தெளிவாக தெரிந்து இப்போது உருவெடுத்திருக்கிறாள். பெண்மையினுடைய மென்மை, நளினம், வெட்கம் என்று பல குணங்கள் கொண்ட சிகண்டினியாய், பெண்ணாய் பிறந்தவர். இப்போது வீரமுள்ள ஆணாக, வேகமுள்ள வீரனாக, கோபமுள்ள க்ஷத்திரியனாக தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார்.”

சிகண்டி என்கிற அம்பை போன ஜென்மத்தில் பிறந்த இடம் காசிதேசம். காசிதேசத்து அரசரின் மூத்த மகளாக பிறக்க, அந்த ஊர் அவளை கொண்டாடி வளர்த்தது. அம்பைக்கு இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். அம்பிகை, அம்பாலிகை என்று அவர்களுக்கு பெயர்.

காசிதேசம் மிகச் செழிப்புள்ளவையாக, பல கற்றோர்கள் நிரம்பிய சபையாக, சாதுக்கள் வந்துபோய் கூடுகிற

இடமாக, கோயில்கள் மிகுந்த நகரமாக, பட்டினமாக, நெடுங்காலம் நாகரீகம் வளர்ந்த நகரமாக இருந்தது. காசிதேசம் கலைகளின் பிறப்பிடம். லட்சுமியும், சரஸ்வதியும் போட்டி போட்டுக் கொண்டு ஆட்சி செய்கின்ற இடம். பாபங்களைக் கரைத்து புண்ணியம் பெறுவதற்காக பரத கண்டத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் விதம்விதமான மனிதர்கள் அங்கு வந்து தங்கினார்கள். தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

காசிதேசத்து அரசன் இந்த நகரம் யாத்ரீகர்களின் நகரம் என்பதை நன்குணர்ந்து, யாத்ரீகர்களுக்கு மரியாதை செய்வதை முதல் பணி என்று புரிந்துகொண்டு, அவர்களை ஆதரித்து போஷித்து வந்தான். வெளியூரிலிருந்து வருகின்ற கலைஞர் களை அரண்மனைக்கு வரவழைத்து, அவர்களுக்கு உணவிட்டு அவர்கள் வெளிப்படுத்துகின்ற வித்தைகளை கண்டு களித்து அவர்களுக்கு பரிசு வழங்கி வந்தான். தினந்தோறும் காசிராஜனின் அரசவை கலைஞர்களால் நிரம்பி வழிந்து, அந்த தேசத்து மக்களை குதூகலப்படுத்தியது.

காசிதேசத்து மன்னனின் மகள்களான அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்ற மூவரும் நாள் தவறாமல் அரசவைக்கு வந்து, அந்தக் கலைஞர்களின் ஆட்டபாட்டங்களைப் பார்த்து,

அதேபோல தாங்களும் நடனமாட, பாட்டுப்பாட, வித்தைகள் செய்ய முயற்சித்து, உலகம் பற்றிய தங்கள் அறிவையும், அனுபவத்தையும் பெருக்கிக் கொண்டார்கள்.

யாத்ரீகர்களின் விதம்விதமான உடையை பார்த்து அதே போல தாங்களும் உடுத்தப் பழகினார்கள்.

யாத்ரீகர்களிடமிருந்து நல்லவிலை கொடுத்து நகைகளை வாங்கி தாங்கள் அணிந்து பார்த்தார்கள்.

காசிதேசம் ஒட்டிய யமுனை நதிக்கரையிலுள்ள ஒரு அழகான பகுதிக்கு சால்வன் என்கிற இளைஞன் இளவரசனாக இருந்தான். கல்வி கேள்விகளில் சிறந்த காசிதேசத்து மன்னனின் பெண்களைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவனும் யாத்ரீகனாக வந்து சேர்ந்து, குதிரைமீது அமர்ந்தபடி அரசவைக் கூடத்தில் பல வித்தைகள் செய்து காட்டினான். குதிரையின் சேணத்தின் ஒற்றைக் கொம்பில் உட்கார்ந்து குதிரையைச் செலுத்தினான். குதிரையை வேகமாக விரட்டி தாவி ஏறினான். பின்பக்கமாக குதிரையை அமர்ந்து ஓட்டினான். குதிரையை பின்பக்கமாக நகரச் செய்து வேடிக்கை செய்தான். வாழை மரங்களை அடுக்கிவைத்து குதிரையில் வேகமாக வந்து ஒரேவீச்சில் வாழைமரங்களை வெட்டினான். வாழைமரங்கள் வெட்டுப்படாதது போல் இருந்தன. கூட்டம் ஐயோ பாவம் என்று கூவ, அந்த வாழைமரங்களைத் தள்ளினான். மெல்லிய தாய் வெட்டுப்பட்ட வாழைமரங்கள் மல்லாக்க விழுந்தன. அப்போது தான் வாழைமரம் வெட்டுப்பட்டிருக்கிறது என்பதை ஜனங்கள் புரிந்து கொண்டார்கள்.

துருபதன் அந்த சால்வனின் வீரத்தைப் பார்த்துவிட்டு கைதட்டிப் பாராட்டினான்.

நான்கு பக்கத்திலும் பத்துப்பத்து வில்லாளிகளை வைத்து நடுவே குதிரையை ஓட்டிக் கொண்டுபோய் அரசனின் கையில் ஒரு துணியைக் கொடுத்து, இவன் வேகமாக உள்ளே வர, அந்த வில்லாளிகள் அவனை நோக்கி குறிபார்த்து அடிக்க எல்லா அம்புகளையும் கத்தியால் தடுத்துவிட்டு, அரசனின் கையிலிருந்து

துணியை வெடுக்கென்று பறித்துக்கொண்டு, திரும்பவும் ஓடினான். அவன்மீது சிறுகாயம் கூட படவில்லை.

ஒரு அம்பு பட்டிருந்தாலும் உயிர் போயிருக்கும். மின்னல் வேக குதிரை ஓட்டம்தான் இதற்குக் காரணம் என்று தெரிந்து ஜனங்கள் கை தட்டினார்கள்.

அம்பை வியந்து போய் எழுந்து நின்று ஆஹாரம் செய்து கைதட்டி அவனைக் கொண்டாடினாள். அம்பையின் கவனத்தை ஈர்த்து விட்டோம் என்று தெரிந்து, அவன் வெற்றிப் புன்னகை செய்தான். நண்பர்களைப் பார்த்து கண் சிமிட்டினான்.

உயரத்தில் நீண்ட கயிறுகள் தொங்கவிட்டு அந்தக் கயிறுகளில் மணல் மூட்டையை கட்டிவிட்டு, அந்த மணல் மூட்டைகள் வேகமாக ஆட, குதிரையில் ஏறி நடுவிலே புகுந்து புகுந்து புறப்பட்டான். எந்த மணல் மூட்டையும் அவன் மீது படவில்லை. அவனும் அவன் குதிரையும் குனிந்து, நிமிர்ந்து வளைந்து மணல் மூட்டை வேகத்திலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். மிகத் துல்லியமான கணக்கு, கண்வீச்சு அவனிடமிருந்தது. அரைநொடி தாமதித்தாலும் வேகமாக வரும் மணல் மூட்டை முகத்தைச் சிதறடித்துவிடும். இந்தப் பக்கத்திலிருந்து அரசன் இருக்கும் பக்கத்திற்குப்போய் அரசனின் காலைத் தொட்டு வணங்கி, திரும்பவும் குதிரை ஏறும் முன் ஒருகணம் அம்பையைப் பார்த்து புன்னகை செய்து விட்டு, ஏறி ஓட, மணல் மூட்டைகளிலிருந்து அடிபடாமல் தப்பித்துக் கொள்ள, கடைசி மணல் மூட்டை அவனை நோக்கி வருவதை அறியாது, திரும்ப அம்பையைப் பார்த்து புன்னகை செய்ய, அந்தக் கடைசி மூட்டை வேகமாக வந்து அவனது இடது புஜத்தில் தாக்கி அவனைக் கெந்தி வெளியில் போட்டது. குதிரையிலிருந்து பறந்த அவன் மக்களுக்கு நடுவே விழுந்தான்.

மக்கள் அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். கூட்டம் அலறி எழுந்தது.

இடது பக்கம் முழுவதும் சிவந்து ரத்தம் வழிய, அவன் போர்வை போர்த்திக் கொண்டு உட்கார்ந்தான். மருத்துவர்கள் வேகமாக வந்து முதலுதவி செய்தார்கள்.

அரசன் மணல் மூட்டைகளை நீக்கச் சொல்லி கீழிறங்கி அவனுக்கருகே போய் காயத்தைப் பரிசோதித்தான்.

"எல்லாம் செய்து கடைசி வித்தையின்போது ஒரு சிறிய தவறு செய்து விட்டாயே" என்று விசாரித்தான்.

அம்பையும், அம்பாலிகையும் அருகே போனார்கள். குடிக்கத் தண்ணீர் கொடுத்தார்கள்.

அம்பையின் கையிலிருந்து தண்ணீர் வாங்கிக் குடித்தான்.

"ஆமாம்... பார்வை பிசகிவிட்டது. எல்லா மூட்டையும் முடிந்துவிட்டது என்று தவறாகக் கணக்குப்போட்டு நான் திரும்பி வேறெங்கோ பார்த்துவிட்டேன்" என்று தயங்கிச் சொல்ல, அம்பை அவன் தன்னைப் பார்த்ததால்தான் அடிபட்டான் என்பதை புரிந்து கொண்டு தலைகுனிந்தாள். அவளுக்கு அது புரிந்துபோயிற்று என்று புரிந்து, தெரிந்து, சால்வன் மெல்ல எழுந்தான்.

"எனக்கு பரிசு வேண்டாம் மன்னா. நான் தவறு செய்து விட்டேன். அடுத்த முறை சரியாக செய்து வந்த உங்களிடம் பரிசு வாங்கிக் கொள்கிறேன்" என்று விலகிப் போக, காசி தேசத்து மன்னன் அவனைப் பிடித்து, அவன் கழுத்தில் கனமான தங்கச்சங்கிலியும், கையில் ஒரு பொற்கிழியும் கொடுத்து தலைதடவி, முதுகு தடவி அனுப்பினான்.

"என்னுடைய அண்டைய தேசத்து அரசர்கள் வீரமும், விவேகமும் பொருந்தியிருக்கிறார்கள் என்பது பார்க்க

எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. அடிக்கடி காசி தேசத்திற்கு வரவேண்டும்” என்று வேண்டுகோள் விடுத்தான்.

“நிச்சயம் வருகிறேன்” என்று சொல்லி மறுபடியும் காசி தேசத்து அரசனின் காலைத்தொட்டு சால்வன் வெளியே போனான்.

அம்பை மனமும் அவன் பின்னே ஏக்கத்தோடு போயிற்று.

அடச்சே... என்ன இது இந்தச் சபையில் எத்தனையோ வீரர்கள் எத்தனையோ விஷயங்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். ஆனால், அப்பொழுதெல்லாம் ஈடுபடாத மனம்

இப்போது இவன் பின்னால் போவது. இவன் அழகாக இருக்கிறான் என்பதாலா, அல்லது என்மீது அக்கறை செலுத்துகிறான் என்பதாலா. ஏன் நான் இவனை நாடுகிறேன். இரண்டு தங்கைகளும் ஏன் என்னையே விநோதமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பெண் க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தால் அவள் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. க்ஷத்திரிய வம்சத்தில் பெண்கள் போகப்பொருள் தான். ஏனெனில் வீரமிக்க ஆண்கள் எந்நேரமும் போர் போர் என்று அலைவதால், மரணத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதால், வாழ்வு அல்லது சாவு என்றே இரண்டு இடங்களில் மாறி மாறி அலைவதாலும், இறப்பதற்கு முன்பே எல்லாம் அனுபவித்து விட வேண்டுமென்ற வெறி அவர்களுக்கு அதிகம். நாளைக்கு நல்லபடியாக விடியும் என்கிற சிந்தனை அவர்களுக்கு குறைவு. தான் யுத்தத்திற்குப் போவதால் எப்படி மீள்வோம், எப்போது மீள்வோம் என்று தெரியாது ஒரு தவிப்பிலேயே இருக்கின்ற க்ஷத்திரியர்கள் பெண்ணைக் கண்டதும் உடனே எனக்கு வேண்டுமென்று எந்தக்

காலநியதியும் இல்லாமல், வர்ஜா வர்ஜமில்லாமல் வேகமாக அணுகத் துவங்குவார்கள். எந்த சாஸ்திர தந்திரமும் பெண்ணை அடைவதற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நினைப்பார்கள். பெண்ணின் மனதை புரிந்து கொள்வது என்பது அவர்களுக்கு அறவே இல்லை. பெண்ணின் விருப்பம் என்ன என்று அவர்கள் கேட்பதேயில்லை.

வயதாகி கண்ணின் ரப்பை தளர்ந்து கண்களை மறைத்த போதும் அவர்கள் அந்த ரப்பையை இழுத்துக் கட்டிக்கொண்டு யுத்தத்திற்குப்போக ஆசைப்படுவார்கள். பெரிய யுத்தம், நிறைய உணவு, ஏகப்பட்ட பெண்கள் என்பதே எழுதி வைக்கப்படாத க்ஷத்திரிய தர்மமாக இருந்தது.

ஒரு ஆண் பல திருமணங்களை செய்து கொள்வதும், யுத்தத்திற்குப்போய் வெட்டுப்பட்டு செத்துப்போவதும், அதனால் பல இளம் விதவைகள் உருவாவதும் பரதகண்டம்

முழுவதும் சாதாரணமாக நடந்து வந்தது. ஆண்களின் வேலை யுத்தம் செய்வது. பெண்களின் வேலை பிள்ளைகள் பெறுவது என்ற குறுகிய வட்டத்திற்குள்தான் மக்கள் இயங்கி வந்தார்கள்.

மக்களை ஆள்பவர்கள் இந்த க்ஷத்திரியர்கள் என்பதால் அவர்களை பின்பற்றியே மற்ற ஜாதியினரும் நடக்கத் துவங்கினார்கள். பெண்களை நேசிப்பதும், உள்ளங்கையில் வைத்துப் போற்றுவதும், எங்கோ ஓரிடத்தில்தான் அபூர்வமாக நடந்தது.

அம்பைக்கு தன்னை உள்ளங்கையில் வைத்துப் போற்ற வேண்டும். அப்படிப்பட்ட ஆண்தான் தனக்கு வேண்டும் என்ற பிடிவாதம் இருந்தது. நான் போற்றுவேனே, நான் உள்ளங்கையில் வைத்து என் புருஷனைத் தாங்குவேனே,

அதேபோல அவரும் பதிலுக்குத் தாங்க வேண்டாமா என்ற வேகம் இருந்தது என்னை சால்வன் தாங்குவான் என்ற நம்பிக்கை இருந்தது.

சுயம்வரத்திற்கு முன்னரே சால்வனைத் தெரியும். காசிதேசம் எப்பொழுதும் கேளிக்கைகள் நிறைந்த ஊராக இருப்பதால் பல தேசத்து மன்னர்களும், இளவரசர்களும் கங்கைக் கரைக்கு ஸ்நானம் செய்கின்ற சாக்கில் காசி விஸ்வநாதரைப் பார்க்கின்ற முனைப்பில் கேளிக்கைகளையெல்லாம் இருந்து பார்த்து விட்டுத்தான் போவார்கள். அண்டைய தேசத்து இளவரசர் களாக இருந்தால் காசிதேசத்து அரசன் அவர்களை அரண்மனைக்கு வரவழைத்து உபசரித்து சந்தோஷப்படுத்தி அனுப்புவான்.

தெற்கே வெகுதூரத்தில் திராவிடதேசத்திலிருந்து வாலிபர்களும், யுவதிகளும் பெருமளவில் வந்திருந்தார்கள்.

அவர்கள் கருப்பாக இருந்தாலும் களையாக இருந்தார்கள். விதம் விதமாக தலையலங்காரம். விதம் விதமாக அணிகலன்கள் அணிந்திருந்தார்கள். அவர்கள் சிவபக்தர்களாகவும் விஷ்ணுபக்தர்களாகவும் இருந்தார்கள். கங்கையைப் பார்த்து விட்டு கைகூப்பினார்கள். கதறியழுதார்கள்.

இவ்வளவு பெரிய நதியா... இவ்வளவு பெரிய நதியா... என்று எதிர்கரையை எட்டி எட்டிப் பார்த்தார்கள்.

எதிர்கரையே தெரியவில்லையே என்று வியந்தார்கள்.

அவர்களுக்கு நீச்சல் தெரிந்திருந்தது. ஆனாலும் கங்கையின் வேகம் அதிகம் இருந்ததால், காசிதேசத்து காவலர்கள் அவர்களை கவனமாக இருக்கும்படி உத்தரவிட்டார்கள்.

நெருக்கமாக, அரைவட்ட வடிவமாக மூங்கில் நட்டும், பெண்களும் குழந்தைகளும் குளிப்பதற்கு ஏற்ற வண்ணம் கங்கையின் வேகத்தை மட்டுப்படுத்தி மடுவைப்போல் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க, மிகுந்த சந்தோஷத்தோடு அவர்கள் குதித்துக் குளித்தார்கள். குளித்து முடித்தபிறகு மறுபடியும் அழகாக உடை அணிந்துகொண்டு திருநீறோ, திருமண்ணோ அணிந்து கொண்டு மெல்லியதாய் தம்பூரை மீட்டியபடியும்... தாளங்களை முழங்கியபடியும்... கங்கைக் கரையிலிருந்து வரிசையாக காசி விஸ்வநாதரை தரிசிக்க பாட்டு பாடிக்கொண்டே கிளம்பினார்கள். அவர்களுடைய பாட்டும், குரலும் மிக ரம்மியமாக இருந்தன.

ஊர் ஜனம் அவர்களை பின் தொடர்ந்தது.

திராவிட தேசத்துக் கோயில்களில் கருவறைக்கு அருகே போகக் கூடாதாம். இங்கே எல்லோரும் தொட்டு பூஜை செய்ததைப் பார்த்ததும் மனம் நெகிழ்ந்து காசி விஸ்வநாதரை தொட்டுத் தொட்டு தழுவிக் கொண்டிருந்தார்கள். அங்கேயும் வாய்விட்டு அரற்றினார்கள். கண்ணீர் உகுத்தார்கள்.

எத்தனை மகான்கள் தொட்ட சிவலிங்கம் இது. எத்தனை ஞானிகள் தரிசித்த சிவலிங்கம் இது. அந்த இடத்தில் நானும் நிற்கிறேனா. எவ்வளவு பெரிய கொடுப்பினை. எத்தனை பெரிய பாக்கியம். நீங்களெல்லாம் தினம் செய்கிறீர்களே.... பூஜை செய்கிறீர்களே.... பூஜை செய்கிறீர்களே... நீங்கள் எவ்வளவு பெரிய பாக்கியசாலிகள் என்று தொட்டுத்தடவி சிவலிங்கத்தை யும், சுற்றியுள்ளோரையும் வணங்கினார்கள். பூஜை நேரம் முடிந்து உணவு எடுத்துக் கொண்டு அயர்ந்து உறங்கி, இரவு அத்தனை பேரும் சூழ்ந்து தீப்பந்தங்களுக்கு நடுவே ஆட்டமான ஆட்டம்

ஆடினார்கள். கயிறு கட்டி பின்னர் வேலை செய்தபடியே நகர்ந்து நகர்ந்து கும்மியடித்தார்கள். அதேவிதமாக நகர்ந்து நகர்ந்து அந்தப் பின்னலை பிரித்தார்கள். ஒருவர் கர்வு தவறாக இருந்தாலும் அந்தப் பின்னல் சரியாக வராது.

காசி தேசத்து மக்கள் இந்த அற்புதமான ஆட்டத்தை, கணிதத்தை, ஒருவர்கூட தவறு செய்யாத ஒழுக்கத்தை பார்த்துவிட்டு கரகோஷம் செய்தார்கள். ஜெய் விஜயீபவ என்று கதினார்கள். மறுநாள் விதவிதமாக கோலங்கள் வரைந்து காட்டினார்கள். வண்ணப்பொடிகளை கோலத்தில் தூவி பெரிய தாமரைப்பூவில் வீற்றிருக்கின்ற லக்ஷ்மி, பாறைமீது உட்கார்ந்திருக்கின்ற சரஸ்வதி, சிங்கத்தை வாகனமாகக் கொண்ட துர்கா என்று பலதும் வரைந்து காசிதேசத்து மக்களை பரவசப்படுத்தினார்கள்.

“உங்களுக்கு தரையில் இப்படி கோலம்தான் வரையத் தெரியுமா. துணியில் வர்ணச் சித்திரம் வரையத் தெரியாதா” என்று காசி தேசத்து சிற்றரசர்களும், தனவந்தர்களும் கேட்க நிச்சயம் முடியும் என்று சொன்னார்கள்.

சிவனும், பார்வதியும்... நடுவே கார்த்திகேயனும் இருக்கின்ற படம் ஒன்று வரையப்பட்டது. மரச்சட்டம் அடித்து காசி தேசத்து ஆலயம் ஒன்றில் அவர்கள் மாட்ட, அம்பையும், அம்பிகையும், அம்பாலிகையும் அதைப்போய் பார்த்தார்கள். அம்பையின் தகப்பனார் காசிதேசத்து அரசர், அந்தப்படம் தன்னுடைய அரண்மனையில் மாட்டப்படவேண்டுமென்று ஆசைப்பட்டார்.

அந்தப்படத்தை மிக பத்திரமாக அரண்மனைக்கு எடுத்து வந்தார்கள். அரண்மனையில் பூஜைகள்

செய்யப்படுகின்ற தனித்த இடத்திலே, அதை கிழக்கு பார்த்து மாட்டினார்கள். அம்பையும், அம்பாலிகையும் அருகே போய் பார்க்க சிவபெருமான் தலைக்குமேல் நல்ல உயரத்தில் இருந்தார். சிவனுக்கும், பார்வதிக்கும் நடுவே, இடக்கையை அம்மாவின் மீது வைத்து வலது கையில் வேல் ஏந்தி, கந்தப் பெருமான் குழந்தை உருவமாய் நின்றிருந்தார்.

அம்பை அவரை உற்றுப்பார்க்க... அந்தக்கண்கள் மெல்ல சிரிப்பதுபோல் தோன்றின.

என்ன என்று அருகே போக, ஒரு கண் சிமிட்டி அவளை இன்னும் அருகே அழைத்தது. இன்னும் அருகே போக யாரோ சட்டென்று நெற்றியில் முத்தமிட்டது போல தோன்றியது.

யார் என்று திரும்பிப் பார்க்க கந்தபெருமானின் முகம் இன்னும் ஒளியோடு காட்சியளித்தது.

சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் நடுவே இருக்கின்ற ஸ்கந்த பெருமானைப் பற்றி சொல்லுங்கள் என்று அரண்மனைப் பண்டிதர்களைக் கேட்க, அரண்மனைப் பண்டிதர்கள் அவரைப் பற்றி விதம்விதமான கதைகளைச் சொன்னார்கள்.

ஸ்கந்தபெருமான் இல்லாமல் திராவிடதேசம், திராவிட மொழி இல்லையென்று விளக்கினார்கள். எதனாலோ அந்த ஸ்கந்தபெருமான் மீது அம்பைக்கு அதீத ஈடுபாடு ஏற்பட்டது. தினமும் குளித்துவிட்டு அங்கே அருகே போய் கைகூப்பி நிற்பது வழக்கமாய் இருந்தது.

“ஸ்கந்த பெருமானையா வணங்குகிறாய். சிவனும், பார்வதியும் இருக்க நடுவே ஸ்கந்தன் இருக்கிறார் என்பதால்தான் அந்தப் படத்தைக்கூட நான் பூஜையிலே வைக்க அனுமதித்தேன். உண்மையில் அது சிவன் படம் என்பதால்தான் சரி யென்று சொன்னேன். ஸ்கந்த

வழிபாடு நல்லதல்ல. சேனாபதி உக்கிரமான தெய்வம். ஸ்கந்த வழிபாடு செய்வதென்றால் விரதங்களில் மிகக் கூர்மையாக இருக்க வேண்டும்” என்று அரசவை குரு எச்சரித்தார்.

வேறு ஒரு கங்கைக்கரை பண்டிதரும் இதைச் சொன்னார்.

சிவதீக்ஷை செய்து வைக்கிறேனே என்று மந்திர உபதேசம் சொல்ல முன்வந்தார்.

ஆனால், பிறகு வருகிறேன் என்று மறுத்துவிட்டு, மறுபடியும் ஸ்கந்தனின் எதிரேபோய் அவள் நின்றாள்.

ஸ்கந்தன் கண்சிமிட்டினான். வேல் ஒன்று கிளம்பி அவள் புருவத்தைக் கீறிற்று. நெற்றிக்கு நடுவே துளைத்துக் கொண்டு போயிற்று.

அவள் பயந்து பின்வாங்கினாள். உடம்பு முழுவதும் மாறிப்போயிருப்பதை உணர்ந்தாள். இன்னும் நல்ல நிறமாக இன்னும் அழகாக, இன்னும் நறுமணம் மிக்கவளாக, இன்னும் துள்ளல் மிகுந்தவளாக, கட்டிளங்குமரியாக மாறியிருப்பதும் பேச்சு மிகத் தெளிவாக வருவதும் அவளுக்குப் புரிந்தன.

குளிர்காலம் போய் வேனிற்காலம் துவங்கியது. பூக்கள் மலர்ந்தன. பறவைகள் சுற்றி சுற்றிப் பறந்தன. ஆநிரைகள் புல்வெளி நோக்கி நடக்கத் துவங்கின. பசுக்கள் பால் பொழிந்தன. அவ்வப்போது தூறலும் இருந்து பார்க்கும் இடமெல்லாம் ரம்மியமாக மாற்றிற்று.

அந்த சால்வன் அவன் தேசத்திலிருந்து சிறிய படையோடு வந்து அவர்கள் அரண்மனையில் தங்கி அவளைத் தேடினான். அவள் புரிந்துகொண்டு ஒளிந்து கொண்டாள். அவளைக் கண்டுபிடிக்காததற்கு துக்கப்பட்டு புலம்பிய வண்ணம் அவன் படை வெளியே போயிற்று.

அவனை ஏமாற்றிவிட்ட சந்தோஷத்தில் சகோதரிகளோடு கூடி அவள் ஆனந்தத்தில் குதித்தாள். மறுநாள் காலை தெற்கேயிருந்து சாதுக்கள் வருவதாய்ச் சொல்ல, நன்றாக உடுத்திக் கொண்டு அவர்களை நமஸ்கரிக்கப் போனார்கள்.

வயசாளிகளாய் பதினாறு சாதுக்கள் வந்திருந்தார்கள்.

“ஏதோ புரியாத பாஷையில் பேசினார்கள்.”

கை உயர்த்தி வாழ்த்தினார்கள்.

“அருகே வா குழந்தாய்” என்று ஒருவர் பாலி மொழியில் அழைத்தார்.

அம்பை அருகே போனாள். கமண்டலத்திலிருந்து நீர் எடுத்து மெல்ல தலையில் தெளித்தார். நடக்கட்டும் என்று கட்டளையிட்டார். அத்தனை வெள்ளைதாடிகளும் களையப் பட்டு அங்கே சால்வனுடைய படை இருந்தது.

அவர்கள் அம்பையையும், அவள் சகோதரிகளையும் சுற்றிக் கொண்டார்கள். எத்தனை கதறியும் விடமறுத்தார்கள்.

அம்பையும், அவள் சகோதரிகளும் வாலிபமான அந்த ஆண்களைப் பார்த்து அளவில்லாத சந்தோஷம் அடைந்தார்கள். மிரண்டு ஒடுவது போல நடித்தார்கள். கூச்சலிட்டார்கள். அரண்மனை வீரர்கள் வாள் உருவி யாரோ அன்னியர் என்ற பயத்தில் வாலிபர்களை சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.

சால்வன் என்று தெரிந்ததும் வாய்விட்டுச் சிரித்தார்கள். காவலர்களையும் மீறி அம்பையையும், அம்பிகை, அம்பாலிகையையும் துரத்திக் கொண்டு சால்வனும், அவன் தேசத்து அரசகுடும்பத்து இளைஞர்களும் மடக்கி, வர்ண நீரை வாரி இறைத்து, அந்த கட்டிளம் பெண்கள் சொட்டச் சொட்ட நனைவதை ஆவலோடு வேடிக்கை

பார்த்தார்கள். எல்லோரும் அம்பையையே குறி வைத்தார்கள். ஆறேழு பேர் சேர்ந்து கொண்டு பீய்ச்சும் குழல் மூலமாகவும், சிறிய குடங்களின் மூலமாகவும் நீரை அவள் மீது கொட்ட, அவள் திகைத்து நீரில் நனைந்த பூனைக்குட்டிபோல் பதுங்கினாள். மூச்சுத்திணறி எழுந்து நின்றாள்.

எல்லா இளைஞர்களும் மெல்லப் பின்னடைந்தார்கள்.

சால்வன் அவர்களை கையமர்த்தி இன்னும் விலகச் சொன்னான். அவள் இளமையை விழிவிரித்து ஆசைபொங்கப் பார்த்தான். அவன் பார்வையின் கூர்மை தாங்காமல் அம்பை வெட்கப்பட்டாள்.

மெல்ல அவனைக் கடந்து, பயந்து போகிறவள்போல் நகர்ந்து, சட்டென்று இரண்டு கைகளாலும் பச்சை வர்ணம் எடுத்து அவன் முகத்தில் அடித்தாள். அவன் முகம முழுவதும் பாசி பிடித்த தவளையின் முதுகுபோல் ஆயிற்று.

அவள் செய்கையைப் பார்த்து அரண்மனையே திகைத்து, இது தவறாயிற்றே என்கிற வேதனையோடு நின்றது. வந்திருக்கிற சால்வன் விருந்தாளியல்லவா. ஒரு விருந்தாளியை இப்படி அவமானப்படுத்துவது சரியா. அதுவும் யார் விருந்து தரவேண்டுமோ அந்த இளவரசியே முகத்தில் வர்ணமடித்து அலங்கோலம் செய்வது நியாயம்தானா. காவல் வீரர்களும், மந்திரிகளும், பிரதானிகளும் திகைத்து நின்றார்கள்.

ஆனால், இது பண்டிகைதானே. ஒருவரையொருவர் சீண்டிக்கொள்வது வழக்கம்தானே.

இருக்கலாம். இது அதிகம். பெரிய அத்து மீறல். ஒரு இளவரசனை அந்த தேசத்து இளவரசி இப்படிச் செய்தாள் என்று சால்வனுடைய ராஜ்ஜியத்தில் தெரிந்தால் ஒரு வேளை எடக்காகவும் மடக்காகவும் செய்வார்கள். காசி

தேசத்திலிருந்து போயிருக்கிற பெண்களுக்கு தலையில் வர்ணம் ஊற்று வார்கள்.

உன் தேசத்தில் எங்கள் வீட்டுப் பிள்ளைக்குச் செய்தது போல உனக்கும் செய்கிறோம் என்று ஆத்திரப்படுவார்கள்.

ஒரு இளவரசி இத்தனை துடிப்பாகவும், இத்தனை வேகமாகவும் இருத்தல் கூடாது. விருந்தாளியை விருந்தாளி யாக கவனிக்க வேண்டும். விருந்தாளியே அத்து மீறினால் கூட நாம் விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

இது தவறு. ஒரு வார்த்தை சால்வன் சிணுங்கினால் கூட, காசிதேசத்து அரசர் வேகமாகி விடுவார். மிகுந்த கோபமாகி விடுவார். அரசவை என்றும் பார்க்காமல், தன்னுடைய மூத்த பெண் என்றும் நினைக்காமல் கடும் தண்டனை விதிப்பதற்கு எல்லா விதமான வாய்ப்புகளும் இருக்கின்றன.

அந்தணர்கள் இந்த மாதிரியான நேரத்திற்காக காத்துக் கொண்டிருப்பார்கள்.

இதோ இங்கும் ஒருவர் எழுந்துவிட்டார். எழுந்து நின்று கம்பீரமாக எல்லாம் தெரிந்தவர்போல் சபைக்கு நடுவே வந்து நிற்கிறார்.

“அம்பை நீ செய்தது குற்றம்.”

உரக்கச் சொன்னார்.

சால்வன் அவரைத் திரும்பிப் பார்த்தான்.

அவன் விழிகள் பளபளத்தன. முகத்திலிருந்து வர்ணத்தை வழித்து எடுத்து தரையில் வீசினான்.

அம்பை நடுங்கிக்கொண்டே இருவரையும் பார்த்தாள். “வந்த விருந்தாளியை காசிதேசத்தில் இப்படி அவமானப் படுத்துவது தவறு.”

“யார், யாரை அவமானப்படுத்தினார்கள்.”

சால்வன் திரும்பி அவரைக் கேட்டான்.

“உன் மீது பச்சை வர்ணம் அம்பை அடித்தாளே. தவறு என்கிறேன்.”

“அவர்கள் அடிக்கவேயில்லையே.”

“இல்லை, நான் பார்த்தேனே... நான் இரு கண்களால் பார்த்தேனே.”

மறுபடியும் அவர் உரத்த குரலில் சொன்னார்.

“உங்களில் பிசகு இருக்கிறது. கண்ணால் பார்ப்பது பொய். காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய். நீங்கள் போய் உங்கள் இடத்தில் அமரலாம்.”

சால்வன் கட்டளையிட அவர் தடுமாறினார்.

“நான் என்ன தீர விசாரிக்க வேண்டும். இதை யார் அடித்தார்கள் என்பதே உங்களுக்கு தெரியவில்லை. என் இரு கைகளால் பச்சை வர்ணம் எடுத்து நானே என் முகத்தில் அப்பிக் கொண்டேன். அவர்கள் எதுவும் செய்யவில்லை. இது தான் இங்கு நடந்தது."

சால்வன் பச்சையாய் பொய் சொன்னான். மெய் சொன்ன அந்தணரை பொய் என்று வாதிட்டான்.

அந்தணர் மருகிக்கொண்டு அந்த இடம் விட்டு நகர்ந்தார். தன் இடம் போய் உட்கார்ந்து கொண்டார்.

“இளவரசன் மதிமயக்கத்தில் பேசுகிறான். அங்குபோய் நீங்கள் நிற்பது தவறு. அது இளம்பிள்ளைகள் விளையாட்டு. இதில் என்ன குற்றம் கண்டுபிடிக்கிறீர்கள்.”

மற்ற அந்தணர்கள் சொல்ல, அவர் இன்னும் முகத்தை வீக்கமாக வைத்துக்கொண்டார்.

“எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இந்தச் சால்வன் அவமானப்படப் போகிறான்.”

“எதனால் அப்படிச் சொல்கிறீர்.”

“என்னை அவமானப்படுத்தினான் அல்லவா. இவனும் அவமானப்படப் போகிறான்.”

“சாபம் இடுகிறீரா.”

“அப்படித்தான் கொள்ளுமே.”

“ஒரு அந்தணன் தேவையற்று கோபத்தை தரையில் இறைக்கக்கூடாது. கோபம் என்பது ஒரு சக்தி. அதை மிகக் கவனமாய் காரியமாற்ற செலவழிக்க வேண்டுமே தவிர கண்டபடி வீசியெறியக்கூடாது.”

“எறிந்தால் என்ன ஆகும்.”

பேசிய அந்தணரை நோக்கி இன்னொரு இளைஞரான அந்தணர் ஆவலாகக் கேள்வி கேட்டார். “

குலம் அழியும். கோபத்தால் குலம் நிச்சயம் அழியும்.”

“இதென்ன உங்கள் வியாக்கியானம் புதிதாக இருக்கிறதே.”

“இப்போது இந்த சபையில் இவர் கோபமான வார்த்தைகளை உதிர்த்தார். இவர் யாரென்று இந்த சபையில் உள்ளவர்களுக்குத் தெரியுமா. இந்த சபையில் கூடிய நூறுபேரில் நான்கு பேருக்கே இவர் பெயர் தெரியும். இரண்டு பேருக்கு இவர் வாழ்க்கை தெரியும். மற்றபடி மீதி இருக்கின்ற தொண்ணூத் தாறு பேர்களும் இவரை எப்படி அறிவார். அந்தணர் என்று மட்டுமே. அல்லவா. ஆக, ஒரு அந்தணன் எழுந்து நின்று தொடையை அறைந்து கோபப்பட்டார் என்று அவர்கள் நினைவில் கொள்வார்கள். அந்தணர் என்றால் யார். அவர், நான், நீ இங்குள்ள அத்தனை அந்தணர்களும் அல்லவா. ஆக, இந்த ஒரு மனிதனுடைய கோபம், இந்த

ஒரு மனிதனுடைய தவறான செயல், குலத்தின் மீது வந்து விழுந்து விட்டது. அவப் பெயர் குலத்திற்கு ஏற்பட்டு விட்டது.”

“சரி. நம்மை நாமே க்ஷத்திரியர்கள் சபையில் விமர்சித்துக் கொள்ள வேண்டாம். நம்மை விமர்சிக்க வேண்டுமென்றால் நம்முடைய இடத்திற்குப் போய்விடுவோம். க்ஷத்திரியர் களுக்கு ஆதரவாகவும் இல்லாமல், விலகியும் இல்லாமல், ஒரு தனித்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதுதான் உத்தமமானது. க்ஷத்திரியனுடைய குடை நிழலில் ஒண்டிக் கொண்டிருக்கும்போது அவனை சபிப்பது எங்ஙனம் சரியாக வரும். க்ஷத்திரியர்கள் இல்லாமல் நாம் தனித்து வாழ்வதான சரித்திரம் ஏதும் உண்டா. நாம் அண்டிப் பிழைப்பவர்கள். எனவே பேச்சு மிருதுவாக இருப்பது நல்லது.”

சற்று வயதாளி அந்தணர் சொல்ல, அவர்கள் அமைதியாய் இருந்தார்கள்.

ஆனால், மிகக் கூர்மையாக அந்த சபையை, க்ஷத்திரியர்களுடைய சிரிப்பை, நடவடிக்கையை கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சால்வன் அம்பையோடு பேசுவதையும், பிறகு நண்பர்களோடு பேசுவதையும் அவர்கள் உற்றுப் பார்த்தார்கள்.

“நாம் காசிதேசத்து ராஜாவின் உப்பைத்தின்று வளர்கிறோம். சால்வன் நமது அரசரின் மகளை சுற்றிச்சுற்றி வருகிறான். இவன் சரியான கணவனாக இருப்பானா. இப்படி யாராவது யோசிக்கிறீர்களா.”

ஒரு அந்தணர் சக அந்தணர்களை கேட்டார்.

“ஆஹா... நான் உற்று கவனிக்கிறேன். இவன் சரியாக இருப்பானா... இருக்க மாட்டானா... என்பதை கண்டுபிடித்து விடுவேன். ஆனால், என்ன செய்வது என்று சொல்லும். இவன் சரியான துணைவனாக ஆகமாட்டான் என்று காசி தேசத்து அரசனிடமோ அல்லது இந்தப் பெண்ணிடமோ சொல்லப்படுமா, சொன்னால் கேட்பார்களா. கேட்கின்ற மனோநிலையில் அவர்கள் இருப்பதாய் நினைக்கிறீர்களா.”

“இல்லை, க்ஷத்திரியர்கள் திமிர்பிடித்து அலைகிறார்கள். அவர்கள், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்கிற மமதையில் வாழ்கிறார்கள். எனவே, அவர்களுக்கு எதுவும் சொல்லுவது தகாது.”

சால்வனை முறைத்துவிட்டு, அந்தணர் உரத்த குரலில் சொல்ல மற்றவர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

ஒரு விதத்தில் அவர் சொல்வது உண்மை என்பது அவர்களுக்கு தன்கு தெரிந்திருந்தது. அது மாதிரியான ஒரு காலகட்டம்.

க்ஷத்திரியர்கள் கொடி உயரப் பறந்திருந்தது. அவர்கள் சர்வ வல்லமை படைத்தவர்களாகவும், அற்புதமான ஆயுதங்கள் உடையவர்களாகவும், அந்த ஆயுதங்களை கையாளக்கூடிய தகுதி உடையவர்களாகவும், அந்த ஆயுதங்களை சுடும் தபஸிற்கு பிறகு வாங்கியவர்களாகவும் அவர்கள் விளங்கினார் கள். போட்டி போட்டுக்கொண்டு முன்னேறினார்கள். அடுத்த தலைமுறையை இன்னும் கடுமையாக தபஸ் செய் என்று வற்புறுத்தினார்கள். ஊக்கப்படுத்தினார்கள். வெறுமே குடித்து விட்டு புரளுவதற்காகவா பிறந்திருக்கிறாய். பெண் போகமும், அரசபோகமும் வேண்டுமெனில்

அதற்குண்டான யோக்கியதையை வளர்த்துக்கொள் என்று தகப்பன் சொல்ல, பிள்ளை கூர்மையாய் கேட்டது.

அந்த தேசத்து அரசனுடைய குமாரன் இந்த மாதிரியான ஆயுதம் வைத்திருக்கிறான். இந்த தேசத்து அரசிளங்குமாரன் இப்படிப்பட்ட வித்தை தெரிந்தவனாம் என்று ஒற்றர்கள் வந்து சொல்லச் சொல்ல இளவரசர்கள் இன்னும் கடுமையாக யுத்தம் குறித்தும், போரில் ஜெயிப்பது குறித்தும் கவலைப்பட்டார்கள். தான் கற்ற வித்தையை ஊர் கூட்டி சபைக்கு நடுவே காண்பிப்பதை மிகப் பெருமையாகக் கருதினார்கள். இந்தப் பெருமை சம்பந்தப்பட்ட இளவரசருக்கு மட்டுமில்லாமல் அவன் தகப்பனுக்கும், மற்ற உறவினர்களுக்கும் கூட கர்வத்தைக் கொடுத்தது. எங்கேனும், எவரோடேனும் இடையறாது போர்கள் நடந்து கொண்டிருந்தன. சிறுசிறு சண்டைகளுக்காக மிகப்பெரிய போர்கள் ஏற்பட்டன. சின்ன சின்ன வார்த்தைகளுக்காக, க்ஷத்திரியர்கள் அடித்துக் கொண்டார்கள். எந்தக் காரணமும் இல்லையெனில் பெண்களின் பொருட்டு யுத்தம் நடந்தது. ஒரு அரசனை அவமதிக்க அவனது மகளையோ, அவன் சபையில் நாட்டியமாடும் பெண்டிரையோ, அவனது பசுக்களையோ கவர்ந்து வருவது ஒரு வீரவிளையாட்டு ஆயிற்று.

உன்னுடைய பசுக்களையும் பெண்டிர்களையும் கவர வருகிறேன் என்று தூதுவரை அனுப்பி நாள் குறித்து சொல்லிவிட்டு, அந்தக் குறித்த நாளில் வாசலில் நின்று எக்காளம் ஊதி தன் வருகையை அறிவித்து, அதற்குப்பிறகு மிகப்பெரிய படையுடன் கோட்டையை உடைத்துக் கொண்டு போகிற வீரவிளையாட்டுகளை, இடையறாது, இடையறாது... க்ஷத்திரியர்கள் செய்து கொண்டிருந்தார்கள். அதில் உயிரிழக்கும் போர் வீரர்களைப் பற்றியோ, அதனால் அதிர்ந்துபோகும்

பொதுமக்கள் பற்றியோ எந்தவித அக்கறையும் இல்லாமல் இருந்தார்கள். திமிர் பிடித்த க்ஷத்திரியர்களின் ராஜ்ஜியத்தில் காவல்காரர்களுக்கும், ஒற்றர்களுக்கும் மிகப்பெரிய மரியாதை இருந்தது.

தேர்கள் செய்கின்ற மரத்தச்சர்களுக்கும், ஆயுதங்கள் செய்கின்ற கருமார்களுக்கும், குதிரைகளும், யானைகளும் பழக்குகின்ற வேலையாட்களுக்கும், தேர் ஓட்டிகளுக்கும், நிறைய சன்மானங்கள் தரப்பட்டன. வேளாளர்களும், யாதவர்களும் அதிகம் சிரமப்பட்டார்கள். பசுக்களே மிக முக்கியமான செல்வங்கள் என்கிறபடியால் பசுக்களை பாதுகாப்பது மிகப் பெரிய வேலையாக இருந்தது. அதை பல்கிப் பெருக்குவது மிக முக்கியமான காரியமாக இருந்தது.

ஆனால், பரதகண்டத்திலுள்ள பெண்களின் வாழ்க்கைதான் மிகமோசமாக இருந்தது. இடையறாது உழைக்கின்ற ஆண்கள், இடையறாது போருக்குத் தவிக்கின்ற ஆண்களுக்கு இரவுநேரம் ஈடுகொடுக்க, அமைதி கொடுக்க பெண்கள் தான் தேவைப்பட்டார்கள். ஆடல் மகளிரும், பொது மகளிரும் பேரவஸ்தைக்குள்ளானார்கள். க்ஷத்திரியப் பெண்களின் வாழ்க்கையும் கலவரம் மிகுந்ததாகவே இருந்தது. ஆண்களுடைய கூச்சலும், அதட்டலும் அந்தப்புறத்தில் இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தன. கதவுக்குப் பின்னால் ஓடி ஒளியும் பெண்கள் அதிகம் இருந்தார்கள். நாற்பது வயசு அரசனுக்கு ஐந்து வயது பெண்ணை திருமணம் செய்து கொடுப்பது சர்வசாதாரணமாக நிகழ்ந்தது.

அவன் கண்ணெதிரே வளர்ந்து பூப்பெய்தும் பெண்தான் அவனுக்கு வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, ஐந்து வயது பெண் குழந்தையை அவன் யானையில் வைத்து திரைபோட்டு மூடி எடுத்துப் போவான். யாரும்

கேட்கமுடியாது. பூப்பெய்தியதும் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு வந்து விடச்சொல்லுவான். மறு பேச்சின்றி பெற்றவர்கள் அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் அரசனிடம் விட்டு அங்கு சிறிது நாள் நீராடி உணவு உண்டு பல பரிசுப்பொருட்களோடு ஊர் திரும்புவார்கள். பிறகு அந்தப் பெண் என்ன கதியானாள் என்று நினைத்துப் பார்க்க மாட்டார்கள். நாற்பது மனைவியருள் ஒரு மனைவியாக அவள் அந்தப்புரத்தில் ஏதேனும் ஒரு மூலையில் வாழ வேண்டும். அரசன் அழைத்தால் பெரிய படுக்கை. இல்லா விட்டால் அவளுடைய சிறிய படுக்கை. ஒருவேளை அரசன் மூலம் அவளுக்குக் குழந்தை பிறந்து, அந்தக் குழந்தை சிறந்தான் என்றால், அவளுக்கு அந்த இடத்தில் ஒரு மரியாதை இருக்கும். எனவே க்ஷத்திரியப் பெண்கள் அதிகம் குழந்தை பெறுவதில் ஆர்வம் காட்டினார்கள். 'கணவனால் மரியாதை இல்லை, குழந்தைகளாலாவது மரியாதை வரட்டும்' என்று ஏங்கினார்கள். அரசன் என்ன ஹிம்சை செய்தாலும் அதற்காக பொறுத்துக் கொண்டார்கள். குழந்தை பெற்றதும் அவனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு வசியமந்திரங்கள் பலதும் ஓதி, அவனை தன்னுடைய சொத்தாக இருத்திக் கொண்டார்கள். அவன் புகழடைய வேண்டும். பராக்கிரமசாலியாக ஆகவேண்டும் என்று அவனுக்கு பல்வேறு கதைகள் சொல்லி.... உற்சாகமூட்டி.... அவனை கடுமையான போர் வீரனாக வளர்த்தார்கள். போ... போருக்குப் போ என்று துரத்தினார்கள். இன்னும் இடையறாது பயிற்சி செய் என்று வற்புறுத்தினார்கள். அவன் போருக்குப்போய் மீண்டதும், தானே போரிலிருந்து மீண்டதாக உயிர்ப்பெய்தினார்கள்.

புருஷனின் பராக்கிரமத்தைவிட, பிள்ளையின் பராக்கிரமம் அதிகமாக இருக்க வேண்டுமென்று பெற்ற தாய்மார்கள் விரும்பினார்கள். அந்தப் பராக்கிரமத்தின்

ஒரு பகுதியாக நாடு பிடிப்பதும், ஆநிரை மடக்குவதும், பெண்களை அந்தப்புரத்தில் அடைத்து அனுபவிப்பதும் இருந்தது. அதிக எண்ணிக்கையில் மனைவியரையும், காமக்கிழத்திகளையும் உடையவர் யார் என்று மக்களுக்கு நடுவே பேசப்பட்டது. அப்படிப் பேசுவது பெருமையாக நினைக்கப்பட்டது.

போர்கள் முக்கியமான காலத்தில் கலைஞர்களுக்கு மரியாதை இருப்பதில்லை. சமாதானம் சொல்லுகின்ற கலைஞனை எவரும் மதிப்பதில்லை. எனவே, கலைஞர்களும் போர்வெறியை தூண்டக்கூடிய பாடல்களை, போர்பற்றிய நாடகங்களை... புறமுதுகிட்டு ஓடச் செய்கின்ற விஷயங்களை, வெறிபிடித்து க்ஷத்திரியர்கள் அலைவதை உயர்த்தியாக காட்டினார்கள். கவிதைகளும் அவ்விதமே அரங்கேற்றப்பட்டன.

நண்பர்களை சகமனிதர்களை உழைக்கும் வர்க்கத்தினரை புரிந்து கொள்ளுதல் என்பதே இல்லாதபோது, இன்னும் ஆழமான மனமுடைய பெண்களை புரிந்து கொள்வது எப்படி,

“அது தேவையற்ற வேலை. பெண்கள் போகப் பொருட்கள். சொடுக்கினால் ஆனந்த அனுபவம் கொடுக்க தயாராய் இருப்பவர்கள். அந்த ஆனந்த அனுபவத்தால் அயர்ந்து தூங்கமுடியும். அயர்ந்து தூங்கினால் உற்சாகமாக எழுந்திருக்க முடியும். உற்சாகமாக எழுந்தால் இன்னும் உயர்வாக வித்தைகள் கற்க முடியும். நல்ல வித்தைகள் கற்றோமானால் அதன் மூலம் எதிரியை பயப்பட வைக்கலாம், பலனடையலாம் என்ற கணக்குதான் இருந்தது. அயர்ந்து தூங்குவதற்கே பெண்களோடு உண்டான ஆனந்தம் இருப்பதாய் பேசப்பட்டது. இதனால் பெண்குழந்தைகள் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆண் குழந்தைகளுக்கு

பெரிய மரியாதை இருந்தது. ஆண்வாரிசு இல்லாத காசிதேசத்து அரசவையில் மூத்த மகளாகப் பிறந்த அம்பை ஒரு ஆணைப்போல் வளர்க்கப்பட்டாள். அவளுக்கு விளையாட்டு பொருட்களாக கத்தியும், கேடயமும் கொடுக்கப் பட்டன. பாய்ந்து தாக்குதல் என்பது சிறுவயதிலேயே பயிற்று விக்கப்பட்டது. அம்பிகைக்கும், அம்பாலிகைக்கும் இந்த பயிற்சி கொடுத்தாலும் அம்பையின் சிறப்பைத்தான் எல்லோரும் உற்றுக் கவனித்தார்கள். அம்பிகையும், அம்பாலிகையும் அதிகம் கவனிக்காமல் விடப்பட்டார்கள். அவர்கள், பெயருக்கு கத்தி சுழற்றிவிட்டு ஓய்வெடுக்க, அம்பைமட்டும் மிகக் கூர்மையாய் அதைக் கையாளுவது பற்றி தெரிந்து கொண்டாள். மெல்லிய ஆண்தன்மை ஏற்பட்டதாலோ என்னவோ, வாளேந்தி பயிற்சிகள் செய்த முரட்டுத்தனத்தாலோ என்னவோ, அம்பையிடம் நாணம் குறைவாக இருந்தது. இதனாலேயே அவள் ஆண்களோடு அக்கறை காட்டினாள்.

சால்வன் அவளை சுற்றி சுற்றி வந்தபோது, அவனை விதம் விதமாக ஏய்ப்பதற்கு துணிந்தாள். அச்சப்பட்டோ, நாணப்பட்டோ பின்னடையாமல், பதிலுக்கு பதில் என்று அவனோடு விளையாட்டுகளில் இறங்கினாள். அவன் வர்ணநீரை மேலே பாய்ச்சியதால், வர்ணப் பொடியை எடுத்து முகம் முழுவதும் வீசினாள். அந்தணர்கள் பதறிப்போய் கடிந்து கொள்ள முற்பட்டபோது அதைப்பற்றி கவலைப்படாது மறுபடியும் அவனைப்பார்த்துச் சிரித்தாள். கண்சிமிட்டினாள்.

அந்த கண்சிமிட்டலில் ஒரு அழைப்பு இருந்ததை சால்வன் தெரிந்து கொண்டான். அம்பையினுடைய உற்சாகம் அவனுக்குப் பிடித்திருந்தது.

அன்று இரவு நன்கு மழை பெய்தது. அது மழைபெய்யும் காலமல்ல. இருந்தாலும் பகலில் வெய்யில் நன்கு

காய்ந்ததால் எங்கிருந்தோ மேகங்கள் திரண்டு பூமியை குளிரப் பண்ணுவதற்காக, வெகுவேகமாக காசிதேசம் அடைந்து கங்கையின் குளுமை மேகங்களின் நெஞ்சைத் தாக்கியதால், அவை நெகிழ்ந்து மழையாகப் பெய்தது. வெய்யிலில் காய்ந்து கிடந்த பூமி மழையை முழுவதும் உள்வாங்கிக் கொண்டது. நன்றாய் அனுபவித்தது.

அம்பை அந்தப்புரம் ஒட்டியிருந்த படித்துறையில் இறங்கி ஒரு சிறிய படகு ஏறி வளைந்த கூரைக்கு நடுவே உட்கார்ந்து படகை ஆற்றோடு செலுத்தி, சால்வன் இருந்த திடலுக்கு அருகே போனாள். சால்வன் அங்கு கூடாரமடித்துத் தங்கியிருந்தான்.

அரண்மனைக்குள் வரச் சொன்னாலும் வரமறுத்து விட்டு அரண்மனையை ஒட்டிய இடத்தில் தங்கியிருப்பதுதான் அழகு என்று விளக்கம் கூறி ஒதுங்கியிருந்தான். அடக்கமாகப் பேசினாலும், அவன் இரவுநேரம் குதூகலமாக இருக்க... குடித்துவிட்டு உளற.... அந்தக்கூடாரமே செளகரியமாக அவனுக்கு இருந்தது. ஆடல் மகளிரும், பாடல் மகளிரும் வந்துபோகவும் அந்தக் கூடாரம் வசதியாக இருந்தது. அரண்மனை கட்டிடங்களிலிருந்து சற்றுத் தள்ளியிருந்தான்.

அம்பை அந்த இடம் நோக்கி படகுசெலுத்த எதிரே சிறிய விளக்கோடு இன்னொரு படகு வருவது தெரிந்தது. அது ஆற்றை எதிர்த்து மெல்ல மெல்ல அவள் அந்தப்புரம் நோக்கி வந்து கொண்டிருந்தது. இருட்டில் படகு ஓட்டி பழக்கமில்லை போலும், படகு அலைந்தது. சாலவன் எதிர்வேகத்தில் பட கோட்டுவது மட்டுமல்லாது, எந்த இடத்தில் படகை நிறுத்துவது என்பதில் தடுமாற்றம் உடையவனாக இருந்தான். திடீரென்று எதிரே படகு பார்த்ததும் திகைத்துப் போய் அவனே முந்திக் கொண்டு ஒரு சாதாரண படகோட்டியைப் போல் நடித்தான்

“அந்தப்புரம் எங்கிருக்கிறது.” என்று குரல் மாற்றி, மொழி நடையை மாற்றி கொச்சையான பிராஹிருதத்தில் பேசினான்.

அவள் குரல் கொடுத்தால் பெண் என்பது புரிந்துவிடும் என்பதால், வெறுமே அந்தப்புரம் நோக்கி கைகாட்டினாள். கைத்துணியால் வாயை மறைத்துக் கொண்டு கட்டைக் குரலில் “யார் நீங்கள்,” என்று கேட்டாள்.

அந்தப்புரத்திற்கு தானியம் எடுத்துப் போவதாக அவன் சொல்ல, அவன் படகு அருகே வந்ததும் எட்டிப்பார்த்தாள்.

சால்வன் மிரண்டான்.

சட்டென்று இடுப்பில் வைத்திருந்த பையிலிருந்து காசுகள் அள்ளி அவளிடம் நீட்டினான். –

“தோழரே... வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு அந்தப்புரத்திற்கு வழிகாட்டுங்கள்.” என்று சொன்னான்.

அவள் திடுக்கிட்டு பின்வாங்கினாள்.

கையை நீட்டினால் கையிலுள்ள நெளிமோதிரமும், வளையலும் தெரியுமே என்ன செய்வது என்று பயந்தாள். ஆனால், அவன் வற்புறுத்த, கைகளை மறைத்துக் கொண்டு மேல்துணியை ஏந்தினாள். மேல் துணியில் அவன் பொற்காசுகளைப் போட சட்டென்று வாரி இடுப்பில் முடிந்து கொண்டாள். அவன் படகுக்கு தாவி ஏறினாள். தன் படகை அவன் படகோடு கட்டினாள். அழுத்தி துடுப்பும், கோலும் போட்டு அந்தப்புரம் நோக்கி முன்னேறினாள். மிகச் சந்தோஷமாக அவனும் படகின் புன்புறம் போய் கோல்போட ஆரம்பித் தான். முன்பக்கம் ஒருவர் பின்பக்கம் ஒருவர் என்று துடுப்பு போட படகு வேகமாக நகர்ந்தது.

“நீங்கள் யார்.” என்று சால்வன் உரக்கக் கேட்டான்.

“படகோட்டி.” என்று வாயில் துணியை வைத்துக் கொண்டு சொன்னாள்.

“இளைஞனாக இருக்கிறாய். படகோட்டுவது பரம்பரைத் தொழிலா...”

ஆமாம்... என்று அம்பை தலையசைத்தாள்.

“நான் சால்வன். ஒரு தேசத்தின் இளவரசன். என்தேசம் எங்கிருக்கிறது தெரியுமா.” என்று கேட்க, அவள் ‘தெரியாது' என்று தலையசைத்தாள்.

“மிக உயர்ந்த பரம்பரை. நான் காசிதேசத்துக்கு அவ்வப் போது வருவது வழக்கம். காசிதேசத்து அரசரின் மகளைப் பார்த்திருக்கிறாயா.” என்று அவன் கேட்க, அவள் மூன்று விரலைப் பிரித்துக் காட்டினாள்.

“ஆமாம். மூன்று மகள்கள்.”

“அதில் முதல் மகளைத் தெரியுமா” என்று மறுபடியும் கேட்க 'தெரியாது' என்று அவள் தலையசைத்தாள்.

“அருமையான குட்டி. உயர்ந்த ஜாதி. ஒரு பெண் என்பதைத் தாண்டி புத்திசாலியாக இருக்கிறாள். புத்திசாலியான பெண்ணோடு குடித்தனம் நடத்துவது என்பது எந்த ஆணுக்கும் சிரமமான காரியம். ஆனால், நான் அதை சந்தோஷமாக நினைக்கிறேன். மனைவி புத்திசாலியாக இருந்தால் ஒரு இளவரசனுக்கு அதிகமாக தகுதிகள் வந்துவிடுகின்றன. அவன் சிறந்த அரசனாக இருக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு. உனக்கு ஒன்று தெரியுமா படகோட்டி. நான் அவளைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். அவள் வரச்சொல்லி சைகை செய்தாள். எனக்கு கங்கையில் படகோட்டி பழக்கமில்லை. ஆயினும் காமத்திற்கு கண் ஏது. காதலுக்கு பயமேது. சட்டென்று கிளம்பி விட்டேன். நல்லவேளை நீ வந்தாய். இல்லையெனில் அயர்ந்து

போய் பாதி வழியிலேயே என் இடத்திற்கு திரும்பியிருப்பேன்.”

அவன் உற்சாகத்தோடு சொன்னான்.

“அற்புதமாக துடுப்பு போடுகிறாயே. கங்கையில் நல்ல பழக்கமுண்டா “ என்று அவன் கேட்க, அவள் 'ஆம்' என்று தலையசைத்தாள்.

அவள் கொம்பு தள்ளும்போது, அவள் கெண்டைக்காலும், அதிலிருந்த சதங்கையும் அவன் கண்ணில் பட்டன.

'அட... இது பெண்கள் அணிகின்ற நகையாயிற்றே. பட கோட்டிகள் அணிவார்களா. யாரேனும் பெண்கள் பரிசளித்ததை இந்தப் படகோட்டி அணிந்திருக்கிறானா' என்று காலையே பார்த்துக் கொண்டிருக்க, அந்தக்கால் படகோட்டியின் கால் போல் இல்லாமல் இன்னும் சிருங்காரமாகத் தெரிந்தது. அவன் இன்னும் உற்று கவனிக்க இடுப்பின் அளவு பெரிதாக இருந்தது. இன்னும் உற்றுக் கவனிக்க, இடுப்பு நெகிழ்ந்து நிமிர்ந்து மறுபடியும் நெகிழ்வது தெரிந்தது. ஒரு பெண்ணுக்குத்தான் இடுப்பு இப்படி நெகிழும் என்று சால்வன் கண்டுபிடித்தான்.

எதற்காக ஒரு பெண் இந்த நேரத்தில் படகோட்ட வேண்டும். யாரையாவது காதலிக்கிறாளா.

சட்டென்று அம்பையின் ஞாபகம் வந்தது.

ஒருவேளை என்னைப் பார்க்க அம்பை வந்திருக்கிறாளா. இது அம்பைதானா.

அவள் அவனையே பார்த்துக்கொண்டு படகை செலுத்தினான். அது ஒரு கணம் அம்பை போல் இருந்தது. மறுகணம் சாதாரண படகோட்டி போலும் இருந்தது.

அந்த உருவத்தை யார் என்று தடம் பிடிக்கமுடியாமல் சால்வன் குழம்பினான்.

சட்டென்று கங்கையில் அலைகள் அதிகமாயின. படகு தள்ளாட்டமாய் நகர்ந்தது. வேறெங்கோ பெய்கின்ற மழையில் கங்கையின் நீர்மட்டம் அதிகமாக உயர்ந்தது. இன்னும் அதிகமான அலைகளை ஏற்படுத்தியது. மேலே இடி இடித்தது. சட்டென்று ஒரு குளிர்காற்று வீச, மழை பலமாக பெய்யத் துவங்கியது.

எவ்வளவு தூரம் அந்தப்புரம் இருக்கிறதென்று தெரியவில்லை. இந்த ஆட்டத்தில் எப்படிப் போய் சேரமுடியும் என்று தெரியவில்லை.

சால்வன் மெல்லியதாக பயந்தான். “கரையில் ஒதுக்கு. கரையில் ஒதுக்கு” என்று கத்தினான்.

ஆனால், இந்தக் கரையில் ஒதுங்குவது நல்லதல்ல. சேறு அதிகமிருக்கும் பகுதி. இது அம்பைக்குத் தெரியும். ஆனால் சால்வன் அவளை நோக்கி “கரைக்குத் திரும்பு” என்று கட்டளையிட்டான். ஆனால், அதை லட்சியம் பண்ணாமல் அவள், வேகமாக கோல்போட்டு படகை முன்னே செலுத்திக் கொண்டிருந்தாள்.

சால்வன் படகின் பின்பக்கத்திலிருந்து முன் பக்கம் வந்து வலப்பக்கம் கரைநோக்கி படகைத் திருப்ப கட்டளையிட, அவள் அவனை மெல்ல புறந்தள்ளினாள். புறந்தள்ளும் கைகளில் நீண்ட வளையல் பார்த்துவிட்டு அவன் திகைத்தான்.

“ஏய்... யார் நீ...” நீண்ட அந்தக் கையை இறுக்கப் பிடித்துக் கொண்டான். அவள் அந்தக்கையை விடுவிக்கத் திமிறினாள். அவன் பிடி மேலும் இறுகியது. அவள் இடக்கையால் அவன் நெஞ்சில் ஓங்கி அடித்தாள். அந்தக் கையிலும் வளையல்கள் இருந்தன. அவன் திகைப்பதற்குள் முகத்தில் ஒரு குத்து விழுந்தது. அவன் தடுமாறினான். பலமாக இரண்டு கைகளும்

போர்வைக்குள்ளிருந்து வெளியே வந்து அவன் நெஞ்சில் பதிந்து ஒரு தள்ளு தள்ளின.

படகின் விளிம்பில் இருந்தவன் தடுமாறினான். கால் வழுக்கி உள்ளே விழுவதற்குப் பதிலாய் தடேரென்று கங்கையில் விழுந்தான். அடிவரைபோய் மேலே வந்து படகின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு சிலும்பினான். குளிர்காற்று பிடரியைத் தாக்கிற்று. அம்பை அருகே வந்து அவனுக்காக கை நீட்டினாள். குனியும்போது அது அம்பை என்று சால்வனுக்குத் தெரிந்துவிட்டது.

அவன் கைதர மறுத்தான். அவள் தன் போர்வையை விலக்கிவிட்டு 'தயவுசெய்து மேலே வாருங்கள்' என்று கெஞ்சினாள். அவன் கை நீட்டினான். அம்பை அவன் கையை இறுக்கப் பிடித்துக் கொண்டாள். அம்பை மேலே இழுக்க, அவன் முழு பலத்தோடு அம்பையை கீழே இழுத்தான். அம்பை தலைகுப்புற தண்ணீரில் விழுந்தாள். விழுந்தவளை இறுக்க சால்வன் அணைத்துக் கொண்டான்.

கங்கையின் அலைகள் அவர்களை புரட்டி எடுத்துக் கொண்டு போயிற்று. இருவரும் சற்றுநேரம் ஆற்றோடு போய் கரையேறினார்கள். '

அவள் வழிகாட்ட சேறை அதிகம் மிதிக்காமல் ஒதுங்கியிருந்த மரத்துண்டங்களில் கால்வைத்து, அருகேயிருந்த மரத்துண்டங்களை இழுத்து நெருக்கி பாலமாக்கி அவள் கரையேறினாள். அவன் பின் தொடர்ந்தான். அவள் உடைகளை உதறி பிழித்து கொள்ள, அவன் அவளையே ஆவலோடு பார்த்தான். மெல்ல முன்னேறி அவளை தழுவிக் கொண்டான். என்ன முயன்றும் அவன் பிடியிலிருந்து அவளால்விடுபடமுடியவில்லை. சிறிது நேரத்திற்குப்பிறகு அவளுக்கு விடுபட

விருப்பமில்லாமலும் போயிற்று. புல்மீது தன்னை அழுத்திக் கிடப்பவனைப் பார்த்து அவள் மெல்ல சிரித்தாள்.

“என்னை என்ன செய்வதாக உத்தேசம்.” என்று முணுமுணுப்பாக வினவினாள்.

'இயங்குவதாக' என்று சொல்வதற்கு வாயெடுத்தவன் சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

“உன்னை திருமணம் செய்வதாக உத்தேசம்.” என்று அதேவிதமாய் மிருதுவாய்ச் சொன்னான்.

அந்தப் பேச்சின் மென்மை அவளுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. நம்பிக்கை கொடுத்தது. அவனை அனுமதித்தாள். ஆனால், அவன் பயந்தான்.

“இங்கு நரிகள் அதிகம் இருக்குமோ” என்று தந்திரமாய்ச் சொல்லி விலகினான்.

“இருக்கலாம்.” என்று அவள் சாதாரணமாக பதில் சொன்னாள்.

“இப்போது நீ அந்தப்புரத்திற்கு எப்படித் திரும்புவாய்.” என்று கேட்டான்.

“படகேறித்தான் போகவேண்டும்.”

“ஏன், தரைவழியாகப் போக முடியாதா.”

“போகலாம். நீங்கள் சொன்னதுபோல் நரி, கருஞ்சிறுத்தை, சில சமயம் காட்டு யானைகளும் இருக்கும்.”

“ஏன், இது வனமா.”

“ஆமாம், அரண்மனையை நெருங்கக்கூடாது என்று வனம் வளர்த்திருக்கிறார்கள். வனத்தில் மிருகங்களை உலாவ விட்டிருக்கிறார்கள்.”

“அப்படியானால் படகிலேயே போய்விடலாமே.”

அவன் கங்கையை நோக்கித் திரும்பினான்.

“இன்னும் மழை அதிகம் வரும்போல் மேகங்கள் திரளுகின்றன. கங்கையில் வெள்ளப்பெருக்கு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. அலைகள் மிக உயரமாக வந்து கொண்டிருக்கின்றன. இதில் எதிர்போட்டு இரண்டு படகுகளை செலுத்திக் கொண்டு போவது கடினம். அதற்கு வனத்தினூடே நடந்து போய்விடலாம்.”

“உனக்கு வழி தெரியுமா.”

அவன் அவள் பேச்சுக்கு கேள்வி கேட்டான்.

“எனக்கு திசை கெரியம் “

அவள் நிதானமாக பதில் சொன்னாள்

அவனுக்குத் திகைப்பாக இருந்தது.

அவள் அந்தப்புரம் இருந்த திசைநோக்கி நடக்கத் துவங்கினாள். அவன் வேறு வழியின்றி அவளை பின் தொடர்ந்தான்.

“காட்டிலுள்ள மிருகங்கள் எதிர்பட்டால் என்ன செய்வது.”

“இடுப்பிலுள்ள சிறு கத்தியைத் தவிர தடுக்க வேறு வழி தெரியவில்லை.”

அவன் கவலையோடு நடக்க, அம்பை முட்களில் மாட்டிக்கொள்ளாமல் லாவகமாக குனிந்து நெளிந்து வேகமாக நடந்தாள். புல்வெளி ஒன்று பெரிதாய் விரிந்தது. புல்வெளியில் யானைகள் நின்று கொண்டிருந்தன. ஆவேசமில்லாமல், பகலில் உண்ட உணவை மெல்ல ஜீரணித்தபடி ஒரு மந்தகதியில் நகர்ந்து கொண்டிருந்தன. லேசான தூக்கம் போலும் ஒரு அயர்ச்சியில் நின்றிருந்தன. திடீரென்று யானைகள் அலையத் துவங்கின. கிட்டத்தட்ட வட்டமாயின. சிறிய

குட்டியை உள்ளே இழுத்து வட்டத்திற்குள் தள்ளின. தொலைதூரத்திற்கு சகலமும் தெரியும். அந்தப் புல்வெளியில் அம்பை அசையாது நின்று யானைகளைப் பார்த்தாள்.

“வேறு ஏதோ ஒரு மிருகம் வந்துவிட்டது. அதனால்தான் யானைகள் உக்கிரமாகின்றன” என்று உரக்கச் சொன்னாள்.

அவள் குரலில் பதட்டமும், பயமும் இருந்தன.

சிங்கக் கூட்டமொன்று புல்வெளியை கடந்தது. அதனால் யானைகள் அவசரமாய் நெருங்கி நின்றன. வெகு அருகில், சிங்கத்தின் உறுமல் கேட்டு சால்வன் திகைத்துப்போய் நின்றான்.

கையில் கழிவேண்டும் என்று புல்வெளியில் அம்பை பரபரத்தாள். ஒரு மரம்கூட இல்லாத இடத்தில் எங்கிருந்து கழி எடுப்பது.

சால்வன் திகைத்தான். அவள் பதட்டம் பார்த்துவிட்டு பயந்தான். இடுப்பிலிருந்து சிறிய கத்தியை எடுத்து 'இது போதுமா' என்று கேட்டான்.

அவள் பாதுகாப்பில் தான் வனம் கடக்கவேண்டும் என்பது போல நெருங்கி நின்றான்.

அம்பை ஏதோ யோசித்தாள். சட்டென்று குனிந்து பூமியில் உள்ள பாறைக்கற்களைப் பிடுங்கி எடுத்தாள். தனது மேல் துணியை அவிழ்த்தாள். நுனியில் கல்லைக் கட்டி மேல் துணியை தோளில் போட்டுக் கொண்டாள். அவள் திரண்ட இளமை அந்த இருளிலும் மிகத் தெளிவாக சால்வன் கண்ணில் பட்டது.

“இது என்ன ஆயுதம். எதற்கு மேல்துணியை அவிழ்த்து விட்டாய்.”

“கழிக்கு பதிலாகத்தான் மேல்துணி.”

அவன் எப்படி' என்று கேட்க, அவள் அந்தத் துணியை கழற்றிக் காண்பித்தாள்

ஒரு பக்கம் கனமுள்ள அந்தத்துணி வேகமாகச் சுழன்று புதியதொரு சப்தத்தை ஏற்படுத்தியது. சிங்கங்கள் திகைத்துப் போய் நின்றன.

“நான் அப்போதே சொன்னேன். படகில் ஏறிப் போகலா மென்று நீ மறுத்து விட்டாய்.”

அவன் குற்றம் சொன்னான்.

“ஒருக்காலும் படகில் ஏறி போயிருக்க முடியாது. இரண்டு பேரும் அரண்டுபோய் படகில் துவண்டு விழுந்திருப்போம். படகு வெகுதூரம் போய் கரையேறும்படி ஆகியிருக்கும். அப்பொழுது இதைவிட மிக மோசமான முட்புதர்கள் நிறைந்த வனத்தைத் தாண்டும்படியாயிருக்கும்.”

“விடிவதற்குள் தாண்டிவிடலாமா.”

அவனுக்கு திசையே தெரியவில்லை.

“எதுவும் மறிக்கவில்லையெனில், இரண்டு நாழிகையில் தாண்டிவிடலாம்.”

அவள் தோளில் கல்லோடு கூடிய துணியை போர்த்திக் கொண்டு விரைவாக நடந்தாள். சிங்கக்கூட்டம் தாண்டிப் போயிற்று. மீண்டும் முனகலாய் ஒரு உறுமல் கேட்க, அம்பை நின்று கவனித்தாள்.

இரண்டு சிறுத்தைகள் புல்வெளியிலிருந்து எட்டிப் பார்த்தன.

அம்பை துணியை வீசி அவைகளைத் துரத்தினாள். அவைகள் பயந்து ஓடின. சட்டென்று வெகு அருகே இரண்டு அடி எடுத்து வைத்தால் தொட்டுவிடுகிற தூரத்தில் காண்டா மிருகம் நின்றிருந்தது.

இரட்டைக் கொம்புகளோடு சிறிய சிகப்பு விழிகளை உருட்டி, காதுகளை அசைத்து அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது. -

“ஓடுங்கள்… ஓடுங்கள்…” என்று சால்வனைப் பார்த்துக் கத்தினாள்.

சால்வன் திரும்பி தலைதெறிக்க ஓடினான்.

அவன் பின்னால் ஓடி வந்து கொண்டிருந்த அம்பை வெகு எளிதில் அவனைத் தாண்டினாள்.

அவர்கள் ஓடுவதைப் பார்த்து திகைத்து நின்றது காண்டா மிருகம். ஓடுவதைத் துரத்துவது எளிது என்ற நியதியின்படி அவர்களை நோக்கித் திரும்பி, மெல்ல சிறிய ஓட்டமாக தொடர்ந்து வந்தது. மெல்ல மெல்ல வேகத்தை அதிகரித்தது.

சட்டென்று பின்னால் வந்து கொண்டிருந்த, அம்பை, சால்வனின் மீது பாய்ந்து அவனை தரையோடு அழுத்திக் கொண்டாள். அவன் மீது படுத்துக் கொண்டாள்.

புற்கள் அவர்களை மறைத்தது.

காண்டாமிருகம் முகர்ந்து பார்த்தது.

அவன் உடம்பு நடுங்கிக் கொண்டிருக்க, அவன் மீது படுத்தபடி அசையாது அவள் கிடந்தாள். காண்டாமிருகம் பின்னடைந்து சிறிதுநேரம் நின்றுவிட்டு விலகி வேறுதிசை நோக்கி ஓடியது.

அவர்கள் இருவரும் எழுந்தார்கள்.

“ஏன் காண்டாமிருகம் ஒன்றும் செய்யவில்லை.” அவன் வியப்போடு கேட்டான்.

“இந்த மிருகம் மட்டும் - நின்றவர்களை, ஓடியவர்களைத் தான் தாக்கும். படுத்துக்கிடப்பதை காண்டாமிருகம் எதுவும் செய்வதில்லை. அது ஆபத்தில்லாத விஷயம்

என்று நினைத்து நகர்ந்து விடுகிறது. இந்த காண்டாமிருகம் தாக்க வருவதால்தான் சிறுத்தைகளும், சிங்கங்களும் சிதறி ஓடின.”

“எவ்வளவு பெரிய உருவம். ஆனால், இதை காட்டின் அரசன் என்று சொல்வதே இல்லையே.”

“காண்டாமிருகம் வலிவுமிக்கது. ஆனால், மூளையில்லாதது. காண்டாமிருகம் ஒரு தனிமை விரும்பி. அது திடீர் திடீரென்று தாக்கத் துவங்கும். சகலத்தையும் நாசம் செய்யும். வெறுமே மரங்களோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கும். இந்த காண்டாமிருகத்தின் தொல்லை தாங்காமல்தான் சிங்கமும், சிறுத்தைகளும், மற்ற பிராணிகளும் நகர்ந்து போகின்றன என்று நினைக்கிறேன்.”

“உனக்கு இவ்வளவு தூரம் மிருகங்களைப் பற்றித் தெரியுமா.”

“நன்றாகத் தெரியும். அடிக்கடி வனங்களுக்கு என் சகோதரிகளுடனும், படைவீரர்களுடனும் வருவது வழக்கம். நான் ஓரளவு யுத்தப்பயிற்சி பெற்றதே இம்மாதிரியான அடர்த்தியான காடுகளில் தான். மிருகங்களை உற்று கவனிப்பதில் நம்முடைய புலன்கள் கூர்மையடைகின்றன. காட்டில் வாழ்கின்ற போது எந்நேரமும் ஆபத்து வரும் என்று நினைத்து நம் உடம்பும், மனதும் பிரகாசமாக விழிப்பாக இருக்கும்.”

“அடேயப்பா... என்னவெல்லாம் பேசுகிறாய். உனக்கு தெரியாதது ஒன்றுமே இல்லை போலிருக்கிறதே.”

“இல்லை, எனக்குத் தெரியாதது ஒன்று உண்டு.”

“என்ன அது?”

“மனிதர்களை எனக்குப் புரிவதேயில்லை. அவர்களை என்னால் எந்த விதமாகவும் வகைப்படுத்த

முடியவில்லை. மிகமிக நல்லவர் என்பவர் அபத்தமான காரியம் செய்கிறார். மிக மிக மோசமானவன் என்பவன் மிக நல்ல காரியம் செய்து விடுகிறான். மனிதர்கள் எப்போது தவறு செய்வார்கள். எப்போது உண்மையாக இருப்பார்கள். எப்போது பொய் சொல்வார்கள் என்று எனக்குத் தெரிவதேயில்லை.”

“நீ சொல்வது உண்மை.”

“சரி. நாம் ஏன் மிருகங்களைப்பற்றியும், மனிதர்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறோம். நம்மைப்பற்றி பேசுவோமே.”

அவள் கொஞ்சலாக, அவன் கைகளை கோர்த்துக் கொண்டாள்.

அவன் இழுத்து அவளை அணைத்துக் கொண்டான்.

“என்ன பேசவேண்டுமென்று நினைக்கிறாய்.”

“கிட்டத்தட்ட காந்தர்வ விவாகம் போல நாம் இந்த நடுக்காட்டில் பழகிவிட்டோம். நான் அப்பாவிடம் என்ன பேசுவது, என்ன சொல்வது.”

“இளவரசன் சால்வனை நான் காதலிக்கிறேன் என்று சொல். இளவரசன் சால்வன் உன்னைக் காதலிப்பதாகவும் சொல். எப்பொழுது வேண்டுமானாலும் விவாகத்திற்கு தயாராக இருப்பதாகச் சொல்.”

அவன் சொன்ன மொழிகள் பிடித்திருந்தாலும், அது மிகப் பெரிய பாராட்டு என்று தெரிந்திருந்தாலும், அம்பையால் அதை நம்பமுடியவில்லை.

“ஏன் அப்படி வினோதமாகப் பார்க்கிறாய்.”

“நீ ஒரு அற்புதமான பெண். உன்னை மணக்கின்ற எந்த இளவரசனும் மிகச் சந்தோஷமாக வாழ்வான் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இந்த மிகச்சிறிய நேரத்திலேயே

நீ அதிகம் உதவிகள் செய்துவிட்டாய். அப்படிச் செய்ததை நீ முக்கியமாக வெளியில் சொல்லிக் கொள்ளவும் இல்லை. உன்னைப்பற்றி கர்வப்படவும் இல்லை. உன்னைப்பற்றி கர்வப்பட்டு என்னை இழிவுபடுத்தவும் இல்லை. நீ செய்வதை சாதாரணமாகச் செய்துவிட்டு அமைதியாக இருக்கிறாய். உன் உதவியும் அற்புதம். உன் அமைதியும் அற்புதம். எப்போது வேண்டுமானாலும் காசிராஜனிடம் என் தந்தையும், என் மந்திரிமார்களும் வந்து எனக்காக உன்னை வேண்டிப் பேசுவார்கள். நான் இன்று இரவு முழுவதும் உன்னோடு இருந்ததற்குச் சாட்சியாக எனக்கு வழங்கப்பட்ட, என்னை இளவரசன் என்று அங்கீகரித்து கொடுக்கப்பட்ட இந்தக் கேயூரத்தை கையில் மாட்டுகிறேன்.”

அவன் தன் புஜத்தில் மாட்டியிருந்த கேயூரத்தை மெல்ல விலக்கி இன்னும் விரித்து அவள் வலது முன்கையில் மாட்டி அழுத்தினான். அந்தக் கேயூரம் அவள் கையில் அழகாகப் பொருந்தியது. அவள், காதலும் நன்றியுமாய் அவனைப் பார்த்தாள். மெல்ல நிலம்பட விழுந்து வணங்கினாள். இன்னும் நெருங்கி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு உதடு பொருத்தி முத்தமிட்டாள். வெட்கப்பட்டாள். மெல்ல விலகி அரண்மனை நோக்கி நடக்கத் துவங்கினாள்.

அவன் அவளையே நின்று பார்த்துக் கொண்டிருந்தான். வலதுபக்கம் திரும்பி தன் கூடாரம் நோக்கி நடந்தான். மழை மறுபடியும் பெய்யத் துவங்கியது.

“என்னாயிற்று... அந்தப்புரத்திற்கு போனாயே.” இளவரசரின் நண்பர்கள் துள்ளி எழுந்து கேட்டார்கள்.

“நான் எதற்கு அந்தப்புரம் போக வேண்டும்."

“ஏன்... என்னாயிற்று.”

“அந்தப்புரமே என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது.”

“அப்படியா... அம்பையா வந்தாள்.”

“ஆமாம்.”

“திமிர்பிடித்த பெண்ணாயிற்றே.”

“இல்லை. அவளுக்கு என் திமிர் பிடித்திருக்கிறது.”

“என்ன சொன்னாள்.”

“முதலில் ஒன்றும் தெரியாதது போல் நடித்தாள். ஆனால், அவள் படகோட்டிய ஒயிலிலிருந்து அவள் படகோட்டி அல்ல. பெண் என்பதை புரிந்து கொண்டேன். முகத்தை விலக்கி யார் என்று பார்க்க முயற்சித்தபோது என்னைத் தள்ளிவிட்டாள்.”

அவன் நடந்தது அனைத்தையும் நண்பர்களிடம் சொல்ல நண்பர்கள் குதூகலித்தார்கள்.

“காசிதேசம் ஒரு அற்புதமான தேசம். அங்கே பெண் எடுப்பது என்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய விஷய மல்ல, நீ போய் பெண் எடுக்காமல், உன்னை நாடி அந்தப் பெண் வருகிறாள் என்றால் அது இன்னும் சிறப்பு. ஒன்று கேள்விப்பட்டாயா. ரகசியமான செய்தி. இப்பொழுதுதான் சற்று முன்புதான் வந்து சேர்ந்தது.”

“என்ன அது.”

“சுயம்வரம் நடக்கப் போகிறது.”

“யாருக்கு “

“அம்பை, அம்பிகை, அம்பாலிகை மூவருக்கும்.”

“அடேய்... கெடுத்தீர்களே... வேறு யாரேனும் அவர்களை எடுத்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது.”

“அடச்சே... என்ன அச்சான்யமாகப் பேசுகிறாய். இந்த சுயம்வரத்தில் அம்பை கலந்து கொள்ளாமலும் இருக்கலாம் அல்லவா.”

“அதெப்படி... காசிராஜன் மூன்று பெண்களையும் தான் சுயம்வரத்தில் நிறுத்துவான்.”

“சுயம்வரம் என்பது என்ன... தன் பெண்களுக்கு மாப்பிள்ளை தேடும் உரிமையை ஒரு தந்தை கொடுப்பது அவ்வளவுதானே. அவள் மாலையை எடுத்துக்கொண்டு வந்து நேரே உன் கழுத்தில் போட்டால் யார் தடை செய்ய முடியும். 'ஒரு பெண் ஒரு ஆடவனை விரும்புகிறாள்' என்று சொன்னால் எந்த க்ஷத்திரியனும் குறுக்கே வரமாட்டான். அவன் எப்பேர்பட்ட அழகனாக இருந்தாலும், 'வேறு ஒருவனை நேசிக்கிறாள் என்றால், உடனே விலகி விடுவார்கள். இதுவரை அந்த மரியாதைதானே நடந்திருக்கிறது.”

“இல்லை. மாறுபட்டும் நடத்திருக்கிறது. சுயம்வரம் என்பம் வெறுமே பெண்கள் தேர்ந்தெடுக்கின்ற விஷயமாகவு இல்லை. ஆண்கள் தங்கள் வலிமைகாட்டும் விஷயமாகவும் பல சுயம்வரங்கள் நடந்திருக்கின்றன. ஒருவேளை அம்பையின் கழுத்தில் மாலையிடப் போகும் போது, உங்களில் எவரேனும் ஒருவர் ‘நிறுத்து' என்று சொன்னால், அம்பை மாலையிடுவதை நிறுத்தியே ஆகவேண்டும். அவனுடைய நியாயத்தை கேட்டே ஆகவேண்டும். இப்பொழுது நீயே எழுந்து, 'என் கழுத்தில் மாலையைப் போடு, சால்வனைவிட நான்தான் உனக்குச் சிறந்த கணவன்' என்று சொன்னால் அப்போது யார் சிறந்தவர் என்ற தீர்மானத்துக்கு காசிராஜன் வரவேண்டியிருக்கும். நம்மில் சிறந்தவர் யார் என்று தேர்ந்தெடுக்க நாம் போர் செய்ய வேண்டியிருக்கும்.”

“போர் செய்யேன். போருக்கு ஏன் பயப்படுகிறாய்.”

நண்பன் கேட்டான்.

“போருக்கு பயப்படவில்லை உன்னோடு போர் புரிவது எளிது. உன்னை அடித்து எளிதாக சாய்த்துவிட முடியும்.

மன்னாதி மன்னர்கள் பலபேர் அந்த சுயம்வரத்தில் கலந்து கொண்டு 'அம்பை தனக்கு வேண்டும்' என்று கொக்கரித்தால் என்பாடு கஷ்டமாகிவிடுமல்லவா. எனவே சுயம்வரத்திற்கு முன்னரேயே நான் அம்பையை திருமணம் செய்து கொள்வதோ அல்லது அம்பையை திருடிக்கொண்டு ஓடுவதோ செய்யப் போகிறேன்."

"இல்லை. இது ஒரு நாளும் நன்றாக இருக்காது. காசிதேசத்து அரசன் மிக நம்பிக்கையோடு கோட்டைக்குள் கூடாரம் அமைத்துக் கொடுத்திருக்கிறான். இதை நீ தவறாக பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. அப்படிப் பயன்படுத்தினால் இருதேசத்து உறவுகளும் பாழ்படும்."

"முன் கூட்டியே அம்பையை நேசிக்கின்ற விஷயத்தைச் சொல்லிவிட்டால்..."

"இல்லை. இதுவும் தாமதமாகிவிட்டது. மூன்று பேருக்கும் சுயம்வரம் என்று, நேற்று இரவுதான் ஓலை எழுதி எல்லோருக்கும் அனுப்பிவிட்டான். இன்னும் நாற்பது நாளில் சுயம்வர மண்டபத்தில் எல்லா அரசர்களும் ஒன்று கூடி அம்பை அம்பிகை, அம்பாலிகையை மணந்து கொள்ள ஆசையோடு வருவார்கள். இப்போதுபோய் காசிராஜனிடம் கேட்டால், காசிராஜன் 'சுயம்வரத்திற்கு வந்து திருமணம் செய்துகொள்' என்று தான் சொல்வானேயொழிய, தான் மறுபடியும் இன்னும் ஒரு ஓலையை அனுப்பி அம்பிகை, அம்பாலிகைக்கு மட்டுமே சுயம்வரம் என்று சொல்ல மாட்டான். ஒரு சுயம்வரத்தில் கலந்துகொண்டு பெண்ணை அடைவதுதான் உனக்கு மரியாதை. வெறுமே நீ போய் காசிராஜனிடம் கெஞ்சி மணந்து கொண்டு வந்தால், உன் தேசத்திலும் மரியாதை இருக்காது உன் வீட்டிலும் மரியாதை இருக்காது. அது தவிர, அம்பைக்கும் அது இழுக்கான விஷயம். 'எனக்குத் தெரியாமல் காட்டில் கட்டிப்புரண்டு வந்தாயா' என்று

தகப்பன் கேட்பது நல்லதா... தன் மகள் தன்னை மீறி எதுவும் செய்யவில்லை என்றுதான் ஒவ்வொரு தகப்பனும் ஆசைப்படுகிறான். அப்படி தன் மகள் இருக்கவே பிரியப்படுகிறான். அம்பையினுடைய கௌரவத்தை வீணாக நீ கெடுத்துவிடாதே.”

சால்வன் உட்கார்ந்து யோசிக்கத் துவங்க, அவன் நண்பர்கள் அதற்கும் சிரித்தார்கள்.

“இது உன் வேலையல்ல. உனக்காக அம்பை யோசிப்பாள். நாளை காலை அனேகமாய் நம் எல்லோரையும், அம்பையின் குரல்தான் எழுப்பும் என்று நினைக்கிறேன். அவளுக்கு இந்த சுயம்வரம் விஷயம் தெரிந்ததும் விடியற்காலையில் ஓடோடி வருவாள் பார். எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது என்று அவளே உனக்குச் சொல்லித்தருவாள். போய் படுத்து உறங்கு.” என்று உபதேசம் செய்ய, அவன் மிகுந்த அலுப்போடு பருத்திப் படுக்கையில் தன்னை பொதித்துக் கொண்டு கம்பளியைச் சுற்றிக்கொண்டு ஆழ்ந்து உறங்கினான்.

சிறிது அசைவுகூட இல்லாமல் தூங்கினான்.

அம்பை அவன் நண்பர்கள் சொன்னதுபோல, விடியற் காலையில் கைதட்டி எழுப்பினாள்.

அவள் கலைந்த தலையும், சிவந்த கண்களும், இரவு முழுவதும் உறங்கவே இல்லை என்பதை வெகு எளிதாக அடுத்தவருக்கு உணர்த்தின.

“எதற்காக சுயம்வரம். ஏன் இந்த முட்டாள்தனம்.”

சால்வன் அம்பையை நோக்கிச் சீறினான்.

அவள் மெல்ல நடுங்கினாள்.

“நான் ஏற்பாடு செய்யவில்லை. என் தந்தை என்னைக் கேட்காது ஏற்பாடு செய்து விட்டார்.”

“இது என்ன கூத்து. நீங்களெல்லாம் படித்தவர்கள்தானா. படித்தவர்கள் வீட்டில் இப்படிச் செய்வார்களா. நீ வேடனுடைய பெண்ணா... நீங்களெல்லாம் காட்டுவாசிகளா. எப்படி திடீரென்று ஒரு பெண்ணிடம் கேட்காமல் சுயம்வரம் ஏற்பாடு செய்கிறார்.”

“நான் காதலிப்பேன் என்று அப்பா நினைத்திருக்கமாட்டார்.”

“ஹா... ஏன், மரக்கட்டையாக வளர்த்திருக்கிறோம் என்று அவர் நினைத்திருக்கிறாரா. உனக்கெல்லாம் காதலே வராது என்று அவருக்கு எண்ணமா... அல்லது நமது மகளைப் போய் எவனாவது காதலிப்பானா, அப்படியொரு பைத்தியக்காரன் பூமியிலேயே பிறக்கவில்லை என்று எண்ணமா."

“ஏன் இப்படி குத்தலாகப் பேசுகிறீர்கள். இனி என்ன செய்யவேண்டும் என்று யோசிக்க வேண்டாமா.” -

“இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது அம்பை. நன்கு விடிந்தபிறகு உனது அரண்மனைக்கு வந்து, உனது தந்தையைப் பார்த்து சில நொடிகள் பேசவேண்டும். உன் தந்தையிடம், 'நான் அம்பையை திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன். நானும் அம்பையும் ஒருவருக்கொருவர் விரும்புகின்றோம். அம்பையின் இடுப்புத்துணி தவிர மற்ற எல்லாவற்றையும் அவிழ்த்துப் பார்த்து விட்டேன்' என்று உரத்த குரலில் நாலுபேர் கேட்க சொல்ல வேண்டியது தவிர வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.”

“இது எனக்கு மரியாதை கொடுக்குமா என்று யோசிக்கவில்லையே நீங்கள்.”

“உனக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்றால் நான் சுயம்வரத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டும்.”

“ஆஹா... சரியாக யோசிக்கிறீர்கள். சுயம்வரத்திற்கு நீங்கள் ஒப்புக்கொண்டால் என்ன தவறு.”

“தவறு ஏதும் இல்லை. சுயம்வரம் என்று வரும்போது உன்னுடைய தேர்வு மட்டுமே முக்கியமல்ல. வேற்று நாட்டு இளவரசர் நீ எனக்கு மாலையிடும் போது, உன் செயலைத் தடுத்து நிறுத்தி, காசிராஜனிடம் 'உன்னுடைய மூத்த மகள் அம்பையை நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்று சொல்லி விட்டால், நீ மாலையை கீழே போட்டுவிட்டு நகம் கடித்துக்கொண்டு ஒரு ஓரமாய் உட்கார வேண்டியது தான்.”

“பிறகு என்ன ஆகும்.”

“யார் சிறந்தவர்கள் என்று காசிராஜன் ஏதேனும் ஒரு வகையில் தேர்ந்தெடுக்க வேண்டும். க்ஷத்திரியர்கள் தங்களை சிறந்தவர்கள் என்று நிரூபிக்க சண்டையிடுவதைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் ஈடுபடுவதில்லை.”

“வேறு எந்த விஷயத்தில் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று நினைக்கிறீர்கள்.”

“சொக்கட்டான் ஆடுவது ஒருவகை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பறவைகளை கூண்டு திறக்கவிட்டு அந்தப் பறவைகளில் எவை சீக்கிரம் போய் இரண்டு போட்டியாளர்களில் எவரின் மேல் முதலில் உட்காருகிறதோ அவரே சிறந்தவர் என்றும் தேர்ந்தெடுப்பார்களாம்.”

“இதெப்படி.”

“பறவைகள் நல்லவர்களை அடையாளம் கண்டு கொள்ளுமாம். ஆனால், காசிதேசத்து ராஜா இம்மாதிரியெல்லாம் செய்யமாட்டார். கத்தியை

எடுங்களடா... அடித்துக் கொள்ளுங்கள் என்று ஆனந்தமாக கட்டளையிடுவார்.”

“உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை உண்டா... உங்களுக்கு சண்டையிட விருப்பமில்லையா.”

“சண்டையிட விருப்பமில்லாத க்ஷத்திரியனாக நான் பிறக்கவில்லை. நான் மட்டுமே மிகச்சிறந்த வீரன் என்கிற இறுமாப்பும் என்னிடம் இல்லை. என்னிலும் சிறந்த வீரர்கள் உண்டு. எல்லா ஜாதியிலும் வீரர்கள் உண்டு. அந்தணர்கள் கூட இப்பொழுது போர்ப்பயிற்சியை மேற்கொள்கிறார்கள். பல வனங்களில் ரகசியமாகப் போய் வில்வித்தை பயிலுகிறார்கள். துரோணர் என்கிற ஒரு அந்தண இளைஞர் சகல அஸ்திரங்களிலும் வல்லவராக இருக்கிறார். ஒருவேளை அவர் உன்னுடைய சுயம்வரத்திற்கு வந்து, உன் பேரழகைக் கண்டு 'எனக்கு அம்பை வேண்டும்' என்று தீர்மானித்தால் நான் எதிர்த்து சண்டை போட முடியுமா.”

“பிறகு, இதற்கு என்னதான் வழி என்று சொல்கிறீர்கள்.”

அவள் கவலையோடு கேட்டாள். “

வா... நம் தேசத்திற்கு ஓடிப்போய் விடலாம். இப்பொழுதே வா.”

“இல்லை. என்னால் வர இயலாது.”

“ஏன்."

“என் தந்தைக்கு அவமானம் செய்ய நான் விரும்பவில்லை.”

“இதென்ன, நான் முக்கியமா... உன் தந்தை முக்கியமா...”

“என்ன கேள்வி இது. உங்களிடம் வரும் வரையில் எனக்கு என் தந்தை முக்கியம் என்று உங்களிடம் வந்துவிட்டேனோ, அப்பொழுது நீங்கள் முக்கியம். இது

எனக்கு மட்டுமில்லை. எல்லாப் பெண்களுக்கும் உண்டான விதி.”

“ஒருவேளை, உன் தந்தை சால்வனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று சொன்னால் என்ன செய்வாய்.”

“கெஞ்சுவேன்... 'எப்படியாவது சால்வனைத் திருமணம் செய்து வையுங்கள்' என்று கெஞ்சுவேன். இல்லையென்று எவரையாவது ஏற்பாடு செய்தால் உயிரை மாய்த்துக் கொள்வேன்.”

“எனக்கு ஒன்று புரிகிறது அம்பை.”

சால்வன் அவள் பேசி முடித்தபிறகு கோபமாக அவளைப் பார்த்தான். –

“என்ன... உனக்கு உன் தந்தையையும் பிடிக்கவில்லை. என் மீதும் மதிப்பு இல்லை. உனக்கு உன்மீதுதான் அக்கறை. உன் கௌரவத்தின் மீதுதான் அக்கறை. அதற்காகத்தான் நீ மும்முரமாக சிந்திக்கிறாயே தவிர, என்னுடைய நிலைமையை யோசிக்கமாட்டேன் என்கிறாய். நீ இறந்துபோனால் உன் தந்தை உன்னை மறந்து போவார். ஆனால், என் கதி என்ன ஆகும். நான் உன்னை எப்படி மறக்க முடியும் அம்பை.”

குரல் நெகிழ சால்வன் சொன்னான்.

அவன் நெகிழ்ச்சி கண்டு அம்பை ஆடிப்போனாள். அவனுக்கருகே நெருங்கி உட்கார்ந்து கொண்டு அவனை தழுவிக்கொண்டாள்.

கணவன், மனைவியைப்போல அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் தொட்டுக்கொண்டு தொடர்ந்து பேசினார்கள்.

“நான் சொல்லுகின்ற விஷயம் சரியாக இருக்குமா என்று பாருங்கள்.”

அம்பை புதிதாக ஒரு யோசனை சொன்னாள்.

“என் தந்தையிடம் போய் நான் உங்களை நேசிக்கிற விஷயத்தை சொல்லிவிடுவேன். அவர் என்ன செய்வது என்று கேட்டால், 'சுயம்வரத்தின் போது மாலையை எடுத்துக் கொண்டுபோய், முதல் வரிசையில் முதல் ஆளாக அமர்ந்திருக்கின்ற உங்களைப் பார்த்தவுடன் உங்கள் கழுத்தில் மாலையிட்டு வணங்கி விடுவேன். எப்பொழுது உங்கள் கழுத்தில் மாலையிடுகிறேனோ, அப்பொழுதே என் கழுத்தில் நீங்களும் மாலையிடுவீர்கள்', என்று சொல்லி விடுகிறேன். எப்பொழுது நாம் பரஸ்பரம் மாலை மாற்றிக் கொண்டோமோ அப்பொழுதே நாம் கணவன், மனைவி பலகோடி தேவர்கள் இதற்கு சாட்சி. இதற்குப்பிறகு நம்மை எவரும் பிரிக்க முடியாது. பிரிக்கவும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.”

“நீ சொல்வது புரிகிறது. இது ஒரு நல்ல விஷயமாக எனக்குத் தோன்றுகிறது. இது மட்டும் போதாது அம்பை. உன் தந்தை இப்படியொரு ஏற்பாட்டை செய்வதாக என்னிடம் நேரடியாக சொல்வது நல்லது. அதாவது நானும் உன் தந்தையும் ஒருமுறை சந்தித்து விட்டால் இந்தப் பிரச்சினை இன்னும் எளிதாகிவிடும். உனக்குத்தான் நான் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்துவிடும். எனவே, உன் தந்தையை நான் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்.”

“அடடா... அதற்கென்ன உடனே செய்கிறேன்.”

அவள் துள்ளி எழுந்தாள்.

“இரு. உன் தந்தையை நான் சந்திப்பதற்கு முன், என் கைகள் உன் உடம்பை சந்திக்க வேண்டாமா. என் உதடு உன் உதட்டை சந்திக்க வேண்டாமா. வெறுமே

கிளறிவிட்டுப் போய்விட்டாய். எனக்கு உறக்கம் வரவில்லையே.”

அவன் எழுந்து அவளை இறுக்க அணைத்துக் கொண்டான்.

எல்லா இடங்களையும் தொட்டான். அம்பை அவன் முன்னேற்றத்தை ரசித்தாள். அவன் உரிமையை விரும்பினாள். முற்றிலுமாய் அவளை அவன் அடைய முயற்சித்தபோது, அவள் மெல்ல தடுத்து அவன் நெற்றியில் முத்தமிட்டு இன்னொரு சூழ்நிலையில் தன்னை முழுவதுமாய் இழக்கத் தயாராக இருப்பதாய் உறுதி சொன்னாள்.

அம்பையின் மூலமாக செய்தி கேள்விப்பட்டதும், காசி தேசத்து அரசன் கவலையில் மூழ்கினான்.

“இதை முன்னரே சொல்லியிருக்கக் கூடாதா... ஏன் இப்படிச் செய்துவிட்டாய்.” என்று மென்மையாகக் கடிந்து கொண்டான்.

மந்திரிகளோடும், அந்தணர்களோடும் கலந்து ஆலோசித் தான். அம்பையின் மீது பிரியமும், வாத்சல்யமும் உள்ள ஒரு வயதான மந்திரி, “இந்தப் பிரச்சினை கடினமல்ல. இனிமேல் அம்பிகை, அம்பாலிகைக்கு மட்டும் சுயம்வரம் என்பது சரியாக வராது. சுயம்வரம் ஆரம்பிப்பதற்கு முன்பு அம்பை, சால்வனை வரித்ததாக அறிவித்துவிடலாம். அல்லது சுயம்வரத்திற்கு சால்வனை வரச்சொல்லி, அதற்கு முதல் இடம் கொடுத்து உள்ளே நுழைந்தவுடன், அம்பையை சால்வனுக்கு மாலையிடச்செய்து விடலாம். சேடிப் பெண்ணோ, காவலரோ சால்வனிடம் ஒரு மாலை கொடுக்க, சால்வனும் அந்த மாலையை அம்பைக்கு அணிவித்தால் அது திருமணமாக உறுதி செய்யப்படும். பிறகு

அம்பிகை, அம்பாலிகை மற்ற அரசர்களுள் எவரேனும் ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.”

“சரி. சுயம்வரத்திற்கான நேரம் எது.”

சால்வனையும், அம்பையையும் நன்கு அறிந்த அந்த அந்தணரை நோக்கி காசிதேசத்து அரசன் கேள்வி கேட்டான்.

அன்று வழக்கமாக வரவேண்டிய அமைதியான அந்தணர் வராததால், சற்று கோபமுள்ள, சால்வன் செய்தது தவறு என்று சுட்டிக்காட்டிய அந்த அந்தணர் சபைக்கு வந்திருந்தார். சட்டென்று அவர் மூளை வேகமாக வேலை செய்தது. ஒரு நேரம் குறிப்பிட்டு இதுதான் நல்லநேரம் என்று சொல்ல, அந்த நேரத்திலேயே சபை கூடட்டும் என்று அரசன் உத்தரவிட்டான். அந்த நேரம் செவ்வாயின் ஒரு பார்வை பலமாக ஊன்றியிருக்கின்ற நேரம். செவ்வாய் என்பது யுத்த கிரகம். ஒரு யுத்த கிரகம் ஆளுமையில் இருக்கும்போது அது முகூர்த்தமா... நல்லது செய்யலாமா... என்று மற்ற அந்தணர்கள் கேள்வி கேட்டபோது, அந்த அந்தணர் மௌனமாக இருந்து விட்டார். தலைமை அந்தணர் வேறு தேசம் போயிருந்த படியால், இந்த விஷயம் குறித்து மாற்றுக்கருத்து சொல்லக்கூட எவராலும் முடியவில்லை.

தான் நேசிக்கும் சால்வனைப்பற்றி அம்பை விவரமாக தந்தையிடம் எடுத்துச் சொல்ல, காசிதேசத்து அரசன் மனம் மகிழ்ந்தான்.

“அந்த இளைஞனைப் பார்த்திருக்கிறேனே... வீரமும், விவேகமும் மிக்கவனல்லவா. அவர்கள் நல்ல பரம்பரை. வெகுநாள் நாடாண்ட பரம்பரை. அந்த இடத்திலிருந்து வந்த ஒரு இளைஞன் இன்னும் பிரகாசமாக வேண்டும். அவனைப் பற்றி ஊர் முழுவதும் தெரிந்திருக்க வேண்டும். எதனாலேயோ குடத்திலிட்ட விளக்காய்

அவன் புகழ் இருக்கிறது. உழைப்புப் போதவில்லை என்று நினைக்கிறேன் என்னை வந்து பார்க்கச் சொல். உழைப்பினுடைய மகிமைப்பற்றி நான் அவனுக்கு விளக்குகிறேன்.” பழம் நழுவி தேனில் விழுந்ததுபோல், அம்பையின் செவிகள் தித்தித்தன.

அப்பாவை நமஸ்கரித்து விடைபெற்று ஓடிப்போய் சால்வனை இறுக்கத்தழுவிக் கொண்டாள். அவனோடு விளையாட்டுச் சண்டையிட்டாள். அவன் நகரமுடியாதபடி அழுத்தி அமர்ந்து கொண்டாள். முடிந்தால் என்னை புரட்டிப்போடு பார்க்கலாம் என்று கொக்கரித்தாள்.

அவன் முயன்று முனகி, சுருண்ட போது, 'இவ்வளவுதானா நீ...தூ...' என்று துப்பினாள்.

அவன் பலம் கொண்ட மட்டும் முயற்சி செய்தான். அவள் அவனை இறுக்கித் தழுவிக் கொள்ள கிளர்ச்சியால் வலுவுகுன்றி பின்னடைந்தான்.

தந்தை சொன்னது சரி... சால்வனுக்கு முனைப்பு போதவில்லை. அவனுக்கு அதிகம் முனைப்பு ஏற்படுத்துவது என்னுடைய வேலைகளில் ஒன்றாகிறது. போ. இன்னும் போராடு, இன்னும் தொடர்ந்து பயிற்சி செய் என்று விரட்ட வேண்டியிருக்கிறது.

அம்பை மெல்ல தன் பிடியை தளர்த்தினாள். அவன் பாய்ந்து அவளைப் புரட்டி இறுக்கத் தழுவிக் கொண்டான். மூச்சு திணறலோடே அவள் காசிதேசத்து அரசருடைய எண்ணத்தை வெளிப்படுத்த சட்டென்று நின்றான்.

“அப்படியா... உன் தந்தை அழைத்தாரா... இப்போதே வருகிறேன்.”

அவளை அழைத்துக்கொண்டு கூடாரத்திற்குப் போய் வேறு உடைகள் உடுத்திக்கொண்டு, மிகச்செம்மையாக தன்னை மாற்றிக்கொண்டு, அவன் தேசத்திற்குண்டான முத்திரை மோதிரங்களை அணிந்து கொண்டு, காசி தேசத்து அரசருக்கு பரிசுப் பொருட்களோடு அரண்மனை படிகளில் ஏறினான்.

அம்பையோடு அவன் வந்திருப்பது அரண்மனையில் கேள்விப்பட்டு சகலரும் வந்து எட்டிப்பார்த்தார்கள். மந்திரிகள் வந்து முகமன் சொன்னார்கள்.

அவனுக்கு கால் கழுவ நீர் கொடுத்து, ஆட்களை கழுவும்படி ஏவினார்கள். குடிப்பதற்கு தண்ணீர் தங்கள் கையாலேயே கொடுத்தார்கள். பழரசம் கொடுத்து தாகசாந்தி செய்து கொள்ளும்படி செய்தார்கள். பிறகு மெல்ல விசிறிவிட்டு உபசாரங்கள் செய்து அவனை அந்தப்புரத்திற்கு அழைத்துப் போய் காசிராஜன் முன் நிறுத்தினார்கள்.

காசிராஜன் எழுந்து வந்து அவனுக்கு அருகே நின்று, அவன் தோளில் கைவைத்து அவனை உற்றுப்பார்த்தார். இழுத்து அணைத்துக் கொண்டார். உடம்பிலுள்ள வடுக்களை தடவிப்பார்த்தார். இரண்டு பேரும் கைகோர்த்து முஷ்டி பலம் காட்டினார்கள்...

“அடடே... அற்புதம்... அற்புதம்..." என்று வியந்து சால்வனின் தோளில் கைபோட்டு, தனக்கருகே உட்காரவைத்துக் கொண்டார்.

“அம்பை சற்றுத் துடுக்கான பெண்ணாயிற்றே. உனக்கு சரி வருமா.” காதோரம் கேட்டார்.

“அதுதான் என் விருப்பம். அதுதான் என் காதலுக்குக் காரணம்.” அதே விதமாய், ரகசியமாய் சால்வன் பதில் சொல்ல, காசிதேசத்து அரசனிடமிருந்து ஒரு நிம்மதியான பெருமூச்சு வந்தது.

“நல்லது. அவள் ஜாதகம் பற்றி குறையாகவே சொல்வார்கள். இவ்வளவு நல்ல ஒரு கணவன் அவளுக்கு வாய்ப்பான் என்று நான் நினைக்கவே இல்லை. உன்னுடைய தாய் தந்தையர் நலமா. அவர்களுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் உண்டா என்று அறிவதையும் நான் கேட்க விரும்புகின்றேன். அவர்களுக்கு ஓலை எழுதட்டுமா. நீ விரும்புவதாய் அதில் குறிப்பிடவா.”

“நிச்சயம் குறிப்பிடலாம். ஒரு ஓலை நான் எழுதி நேற்று காலை அனுப்பிவிட்டேன். உங்களுடைய ஓலை போனால் இன்னும் தெளிவாக அவர்களுக்கு இருக்கும். உங்களை நான் தொந்தரவு, செய்வது கூடாது. உங்கள் விருப்பத்திற்கு மாறாக நடந்துவிடக்கூடாது என்றுதான் அவர்கள் பதட்டப்படுவார்கள். நீங்கள் துரிதமான ஒரு தூதுவனை அனுப்பினால் என் ஓலை போய் சேரும் நேரத்தில் அவனும் போய் சேர்ந்துவிடலாம். இரண்டு ஓலைகளையும் படித்தார்கள் என்றால் அவர்கள் நிம்மதியாக இருப்பார்கள்.”

“நல்லது. உடனே அதற்கு ஏற்பாடு செய்கிறேன். நீ நெருங்கிப் பழகியிருக்கிறாய் என்றும் அம்பை சொன்னாள். ஒரு பெண்ணைப் பெற்றதால் இந்தக் கேள்வியையும் நான் கேட்க விரும்புகிறேன். நீ நெருங்கி பழகியிருக்கிறாயல்லவா.”

“ஆமாம். நெருங்கிப் பழகியிருக்கிறேன்."

“ஒரு பொழுதும் அவளை கைவிடமாட்டாயல்லவா.”

“இல்லை. அவளை ஒருபொழுதும் கைவிடமாட்டேன்.”

சால்வன் காசிதேசத்து அரசன் கையை பற்றிக்கொண்டு சொன்னான்.

காசிதேசத்து அரசன் அவனை இழுத்து அணைத்துக் கொண்டார். நெற்றியில் முத்தமிட்டார். வாழ்க பல்லாண்டு என்று சொன்னார்.

“எதற்கு கூடாரத்தில் தங்க வேண்டும். இங்கே அரண்மனைக்குள்ளேயே தங்கலாமே.”

“இல்லை, நான் கோட்டைக்குள்தான் இருக்கிறேன். கூடாரத்தில் தங்குவது ஒரு புதுவித அனுபவமாக இருக்கிறது. போர் வீரர்களுக்கு கூடாரம்தான் கோயில். யுத்தம்தான் யாகம். ரத்தமும் வியர்வையும்தான் ஆகுதிகள், அந்தப்புர சுகத்திற்கு அதிகம் பழகிவிட்டால் யுத்தம் தடுமாறும். எனவே, குளிரும் வெய்யிலும் நிரம்பிய கூடாரத்தில் இருப்பதையே நான் நல்லது என்று நினைக்கிறேன்.”

இந்தப் பதிலும் காசி தேசத்து அரசனுக்குப் பிடித்திருந்தது. அவன் மந்திரிகளிடம் சொல்லி, அந்த கூடாரத்தின் மீது கூடாரம் கட்டச் சொன்னான். வெய்யில் குறைவாக இருக்கும். குளிர் மிதமாக இருக்கும் என்று விளக்கினான்.

அரண்மனையில் காசி தேசத்து ராஜாவோடு சால்வன் விருந்துண்டான். விடைபெற்றுக்கொண்டு அம்பையோடு வெளியேறினான்.

கூடாரத்திற்குப்போய் அமர்ந்து அம்பைக்கு தன் நண்பர்களை அறிமுகப்படுத்தினான்.

காசிதேசத்து அரசன் கொடுத்த மதுபானத்தை அவர்கள் மெல்ல உறிஞ்சிக் குடித்தார்கள்.

“எங்கேனும் வெளியே போகப் போகிறீர்களா.” என்று சால்வன் கேட்ட கேள்வியை, நண்பர்கள் புரிந்து கொண்டார்கள். 'ஆமாம்... ஆமாம்' என்று அவசரமாக வெளியேறினார்கள்.

சால்வனுடைய அணைப்பில் அம்பை சந்தோஷம் அனுபவித்தாள். அவனை எல்லை மீறாது இருக்கும்படி பணிவாகக் கேட்டுக் கொண்டாள். திருமணம் ஆனபிறகு சகலத்திற்கும் தான் ஒத்துழைப்பதாக வாக்குக் கொடுத்தாள்.

அவன் நன்றாக உண்டுவிட்டு அயர்ந்து தூங்கும்போது கால்பிடித்து விட்டாள்.

'நீரே என் புருஷன். நீரே எனக்கு சகலமும். உனையென்றும் நான் பிரியாதிருக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள்.

மெல்ல அவன் உறக்கம் கலைக்காமல் வெளியேறினாள்.

அவன் நண்பர்கள் தொலைவில் இருந்தவர்கள் அவள் வெளியேறுவதைப் பார்த்துவிட்டு, மெல்ல கூடாரத்திற்குள் நுழைந்து லேசான மதுபோதையில், அரைமயக்கத்தில் அவள் பேரை உளறியபடியே புரண்டு படுக்கின்ற, அவளைத் தேடுகின்ற சால்வனைப் பார்த்துச் சிரித்தார்கள். அவளுடைய மேலாடையை எடுத்து ஒரு இளைஞன் அணிந்து கொண்டு அவனுக்கு அருகே நின்று “நான் போய்வரவா” என்று கேட்க சால்வன் திடுக்கிட்டு விழித்தான்.

“எங்கே போகிறாய். போகக்கூடாது. இரு. என்னோடு இரு.” என்று சொல்லிப் பாய்ந்து, அவன் நண்பனை இறுக்கி முத்தமழை பொழிய, சால்வன் நெகிழ, அது தன் ஸ்நேகிதன் என்று தெரிந்து விக்கித்துப் போனான். மெல்ல ஒரு கோபம் அம்பை மீது அவனுக்கு ஏற்பட்டது.

'சொல்லிவிட்டுப் போயிருக்கலாமே. இப்படியொரு கேலிக்கு ஆளாயிருக்க வேண்டாமே.' என்று ஒரு ஆத்திரம் தோன்றியது.

ஒன்று இவர்கள் தேவையில்லாத பணிவு, இல்லையெனில் அதிகப்படியான அகங்காரம், இரண்டையும் காட்டுகிறார்கள். மெல்ல தோள் தட்டி நான் போய் வருகிறேன்' என்று சொல்லி விட்டுப்போக... யதார்த்தமாக இருக்க... எந்தப் பெண்ணுக்குமே தெரியவில்லை என்று அலுப்பானான்.

அம்பை சொல்லாமல் போனது ஒரு வெறுமையையும், வெறுப்பையும் கொடுத்தது.

நாம் அதிகம் வழிவதால்தானே அப்படியொரு உரிமை எடுத்துக்கொண்டு நகர்ந்து போயிருக்கிறாள் என்று ஒரு கோபம் வந்தது.

அவன் உறக்கத்தை கலைக்காமல் இருக்க, விலகிப் போனதை அவன் கடைசிவரை புரிந்துகொள்ளவே இல்லை.

அவன் உடனடியாக நண்பர்களோடு தன் தேசம் நோக்கித் திரும்பினான்.

ஒரேயொரு நண்பனை மட்டும் நிற்கச்சொல்லி அம்பையைப் பார்த்து தன் திருமண ஏற்பாடுகள் பற்றி தன் தந்தையிடம் விவாதிப்பதற்காக உடனே போவதாய் சொல்லச் சொன்னான்.

காசிராஜனுடைய தூதுவர்கள் வருவதற்கு முன்பு, அவன் தன் தேசம் போய் அதிகம் குடிக்கத் துவங்கினான். காரணமில்லாமல் ஒரு மன எரிச்சல். ஒரு மூளைக் கொதிப்பு. ஒரு ஆத்திரமான அலையல் அவனுக்குள் ஏற்பட்டது. மதுதான் அதை சமனப்படுத்தும் என்று அதிகம் அருந்த, இந்த உணர்வுகள் எல்லாம் மும்மடங்காகப் பெருகிகிளறின.

“சுயம்வரத்திற்கு உன்னை அழைத்திருக்கிறார்கள். நீ போகப்போகிறாயா.” என்று சால்வனை நோக்கி அவன்

தந்தை கேட்க, சால்வன் 'ஆமாம்' என்று பதில் சொன்னான்.

“ஜாக்கிரதையாகப் போய் வா... படைவீரர்களை கூட்டிக் கொள். நம் சேனாதிபதிகள் உனக்குத் துணையாக வரட்டும்” என்று சொல்ல, “நான் சுயம்வரத்திற்குத்தான் போகிறேன். போருக்கல்ல. அந்தப் பெண் என்னை விரும்புகிறாள். நானும் அவளை விரும்புகிறேன்.” என்று வேகமாகச் சொன்னான்.

“நீ பேசுவதைப் பார்த்தால் விரும்புவதைப் போல் தெரியவில்லை. விரும்பி, விரும்பியதை அடைந்து விட்டதைப் போலல்லவா தெரிகிறது. நான் காரணமில்லாமல் சொல்லவில்லை. சுயம்வரத்திற்கு அழைத்த விதமெல்லாம் சரிதான். ஆனால், சுயம்வரத்திற்கு கொடுத்த முகூர்த்தம் தவறு. அது யுத்த முகூர்த்தம். எந்த முட்டாள் அந்தணன் இப்படி குறித்துக் கொடுத்தான் என்று தெரியவில்லை” என்று அலுப்பாக சால்வனின் தந்தை சொன்னார்.

“மாற்றச் சொல்லலாமா.”

“இல்லை. அது நமது வேலையல்ல. ஆனால், நான் சொன்ன படி சேனாதிபதியோடு... வலிமைமிக்க ஒரு படையோடு நீ சுயம்வரத்திற்குப் போ. அதற்கு முன்பு என்ன காரணம் கொண்டும் காசி தேசத்திற்குப் போகவேண்டாம். அல்லது அம்பையை இங்கு வரச்செய்ய வேண்டாம்.” “ஏனப்பா...”

“முட்டாளே... நான் சொல்வதைக் கேள். இதை சுயம்வரமாக நடத்த காசிராஜன் முயற்சித்திருக்கும் போது, நீயும் அம்பையும் கைகோர்த்து வனங்களில் சுற்றித் திரிந்தால், மற்ற பெண்களைப் பற்றியும் தவறாகத்தானே அபிப்ராயம் ஏற்படும். அவளது இரண்டு தங்கைகளுக்கும் இதனால் ஆகாது போகலாம் அல்லவா.

எனவே, உங்களுடைய காதலை உள்ளுக்குள் புதைத்து வைத்துக் கொள்ளுங்கள். திருமணத்திற்குப்பிறகு எங்கு வேண்டுமானாலும் சுற்று. யார் உன்னை கேட்கப் போகிறார்கள். நான் சொல்வது புரிகிறதா உனக்கு.”

அவன் தந்தை உரத்துக் கேட்க, அவன் தலைகுனிந்து யோசித்து “சரி” என்று சொன்னான்.

நாட்கள் வெறுமையாக நகர்ந்தன. அவன் அடிக்கடி மதுபானம் குடித்தான். அவளை நினைத்து மெல்ல பாட்டுப் பாடினான். அம்பையினுடைய பேரழகு... இரவும், பகலும் பார்த்த விஷயங்கள் அவன் நெஞ்சில் நிழலாடி அவனை காமஜுரத்தில் தள்ளின. அவன் மெல்ல நலிந்து போனான். அவனை போர்ப்பயிற்சி செய்ய குருமார்கள் கூப்பிட்டபோதும் புறக்கணித்தான். நண்பர்கள் உற்சாகப்படுத்தியும் உதறித் தள்ளினான்.

பாடகர்களை அழைத்துப் பாடச் சொன்னான். நாட்டிய மங்கைகளை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டு கவிதைகள் எழுதினான். அவனுடைய மனோமயக்கம் அவனுக்கு மெல்லிய மிரட்சியைக் கொடுத்தாலும் ஆனந்தமாக இருந்தது.

என்னால் ஏன் அவளை புரட்டிப் போடமுடியவில்லை. அடுத்தமுறை அழுத்தி உட்காரச் சொல்லி புரட்டிப்போட வேண்டும். எனக்கு அவளை புரட்டிப்போட விருப்பமில்லை

அவள் மேலே உட்கார்ந்திருக்கின்ற சுகத்தில் நான் கிறங்கி விட்டேன். நான் என்னை சரிசெய்து கொள்ள வேண்டும். இன்னும் வலிமையுள்ளவனாக மாறவேண்டும்.

அவன் வாளெடுத்துப் பார்த்தான். தொடர்ந்து ஐந்து நாட்கள் மதுபானம் குடித்ததால் கை நடுங்கிற்று. அவன் வாளை மறுபடியும் உறையிலிட்டு தலைகுனிந்து

உட்கார்ந்திருந்தான். போர்ப்பயிற்சி அளிக்கின்ற தளபதிகளிடம் போய் தன் கை நடுங்குவதைச் சொன்னான்.

அவர்கள் சிரித்தார்கள்.

“காதல் வயப்பட்டிருக்கிறீர்களல்லவா. அப்படித்தான் இருக்கும். இப்போது ஏன் போர்ப்பயிற்சி. முழுமையாகக் காதலில் ஈடுபடுங்கள். இப்பொழுது யுத்தம் என்று எதுவும் இல்லை. அதற்கான ஆயத்தங்கள் எதுவும் இல்லை. எனவே நீங்கள் அமைதியாக கவிதை எழுதிக்கொண்டோ. பாடல் பாடிக் கொண்டோ, நந்தவனத்தில் திரிந்து கொண்டோ இருங்கள். வாழ்க்கையில் இந்த மாதிரி நேரம் எல்லோருக்கும் கிடைக்காது. கிடைத்ததை முழுமையாய் அனுபவியுங்கள். திருமணத்திற்குப்பிறகு இன்னும் ஆனந்தமாக இருங்கள். அதற்குப்பிறகு மெல்ல மெல்ல போர்ப்பயிற்சியை நோக்கித் திரும்பலாம்.” என்று அறிவுரை சொன்னார்கள்.

அவன் விதி அவனை சரி என்று தலையாட்ட வைத்தது. அவன் தன்னுடைய அரண்மனைக்குத் திரும்பினான்.

அம்பையைப்பற்றி கவிதைகள் எழுத ஆரம்பித்தான். மனதில் நிறுத்திய அம்பையை நினைத்து ஓவியம் வரையத் துவங்கினான்.

இரண்டு மூன்று முறை மோசமான கனவுகள் வந்தன. கையில் வாளோடு ஓடுகிறான். இடுப்பில் கோவனம் மட்டுமே இருக்கிறது. எல்லா திசையிலேயும் ஓடிப்போய் பார்க்கிறான். வெட்டவெளி, யாரும் இல்லை. ஆனால், எங்கிருந்தோ எதிரி தன்னை குறிபார்த்துக் கொண்டிருப்பது போல ஒரு பதட்டமும், பயமும் இருந்தன. சுற்றிச்சுற்றி ஓட, ஒரு வெட்டவெளி தொடர்ந்ததே தவிர எவருமே இல்லை. அயர்ந்துபோய்

நிற்கிறான். கால்கள் நடுங்குகின்றன. அவனைத்தாண்டி ஒரு தேர் போயிற்று. அந்தத் தேரிலிருந்து அம்பையின் குரல் பெரிதாக ஒலித்தது. எழுந்து நிற்பதற்குள் தேர் தொலைதூரம் போயிற்று. புழுதி கண்ணை மறைக்க, வாளை கீழே போட்டுவிட்டு அவனும் பெரிதாய், அலறத் துவங்கினான். திடுக்கிட்டு கண்விழிக்க விடியற்காலை நேரத்து பறவைகளின் சத்தம் அவன் காதை நிறைத்தன.

அவன் ஏனோ சோர்வானான். மறுபடியும் மதுவை நாடினான். அந்த மயக்கத்தில் அயர்ந்து தூங்கினான்.

“என்ன இது... ஏன் இப்படி இருக்கிறாய்...” நண்பர்கள் மறுபடியும் அவனை சுற்றிக் கொண்டார்கள்.

“மெல்லியதாய் தொப்பை போட்டுவிட்டது. வா... ஓட வா... மேல் வயிறு பெரிதாகி விட்டது. குனிந்து நிமிர்ந்து உடற்பயிற்சி செய்யலாம் வா” என்று அழைத்தார்கள். -

“உனக்கு மாலைபோட வேண்டும் என்று அம்பை துடித்துக் கொண்டிருக்கிறாள். இப்படியிருந்தால் எதற்காக இவனுக்கு மாலை போட்டாய் என்று நாலுபேர் அம்பையை கேலி செய்ய மாட்டார்களா. நன்றாக இருக்கிறது கதை. நீ எப்படி இருந்தவன். காதலுக்குப்பிறகு இப்படி ஆகிவிட்டாயே.”

அவனை வற்புறுத்தி உடற்பயிற்சிகள் செய்ய வைத்தார்கள்.

அவன் முகத்தில் மெல்ல பொலிவு கூடியது. இருப்பினும் முன் இருந்த பலம் குறைந்தது போல காணப்பட்டது.

“மிகவும் விரட்டாதீர்களப்பா... திருமணத்திற்குப் பிறகு சரியாகி விடுவான்.” என்று நண்பர்களே மெல்ல விட்டும் கொடுத்தார்கள். |

சுயம்வரத்திற்கு ஐந்து நாட்கள் முன்பு, அவன் குதிரை ஏறி காசிதேசம் நோக்கிப் போனான். குதிரை அதிகம்

சுணங்கியது. முன்னும், பின்னும் அலைந்தது. இடதும், வலதும் ஆடிற்று. குதிரைக்குச் சரியாக தீனி கொடுக்கவில்லையா. இல்லை, உடல்நலம் சரியில்லையா.

அவன் குதிரையை தடவிக் கொடுத்து சாமர்த்தியமாக காசிதேசம் நோக்கி விரட்டிக் கொண்டு போனான்.

அவன் தந்தை, அவனுக்குப்பின் ஒரு சிறு படை போக ஆணையிட்டார். அந்தச் சிறுபடை போனபிறகு இன்னொரு பெரும்படை காசிதேசம் போய் அதன் எல்லையில் நின்று கொண்டது.

காசிதேசத்தை நோக்கி மன்னர்கள் வந்துகொண்டே இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் மிகப்பெரிய இரட்டை கூடாரம் போட்டு தங்க வைத்தார்கள். எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுத்தார்கள். கங்கைக் கரையில் நீராட தனிப்படித்துறை செய்து கொடுத்தார்கள். அந்தணர்களை வைத்து உபசாரம் செய்தார்கள். பித்ருகடன் தீர்க்க வசதிகள் செய்து கொடுத்தார்கள். எல்லாக் கோயில்களிலும் சிறப்பான பூஜை நடத்தப்பட்டது. விருந்தினர்களுக்கு முதல் தரிசனம் என்று சலுகைகள் கொடுக்கப்பட்டன. இவர் இந்த தேசம், இவர் இந்த தேசம்' என்று பல்வேறு தேசத்து மன்னர்களை சுட்டிக் காட்டி ஜனங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வரும்போது மலர்தூவி வரவேற்றார்கள். கைய சைத்து வாழ்த்துச் சொன்னார்கள். ஜனங்களின் உற்சாகம் மன்னர்களையும் தொற்றிக் கொண்டது. மன்னர்கள் காசிதேசத் தின் பழம்பெருமையை உணர்ந்து சுற்றிச்சுற்றி வந்தார்கள்.

சுயம்வரத்திற்கு முதல் நாள் மாலை... 'அஸ்தினா புரத்திலிருந்து பீஷ்மர் கிளம்பி வருகிறார்' என்ற செய்தி

வந்தது.

“பீஷ்மரா... அவர் காசிதேசத்திற்கு ஏதாவது நேர்த்திக் கடனுக்கு வந்திருப்பார்.”

“இல்லை. சுயம்வரத்திற்கு வருவதாகச் சொன்னார்."

“அப்போது... கூடாரங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமா.”

“இதென்ன பேச்சு... காசிதேசம் நோக்கி வருகிறவருக்கு கூடாரம் தேவைப்படாதா, அல்லது காசிதேசம் வழியாக போவதாய் தீர்மானம் செய்திருக்கிறாரா.”

“இல்லை. படைவீரர்களை விசாரித்ததில் காசிதேசம் போவதாகத்தான் சொன்னார்கள். கொஞ்சம் யுத்த முஸ்தீபோடு போர் வீரர்கள் வருவதாகப்படுகிறது.”

“எப்படிச் சொல்கிறீர்கள்?”

“எல்லா வீரர்களும் கவசம் அணிந்திருக்கிறார்கள்."

“அது வழக்கம்தானே. சால்வன் அப்படித்தானே வந்திருக்கிறான். அவனைச்சுற்றி ஒரு சிறுபடை இருக்கிறது. அவர்கள் கவசம் அணிந்திருக்கிறார்கள். அந்த சிறுபடைக்குத் துணையாக இன்னொரு பெரும்படை காசிதேசத்து எல்லையில் நிற்கிறது. இதைப்போய் படையெடுப்பு என நாம் சொல்ல முடியுமா. ஒரு இளவரசன் வரும்பொழுது அப்படியொரு முஸ்தீபோடு வருகிறான் என்றால், பீஷ்மரைப் போன்ற வீரர்கள் தனியாகவா வருவார்கள். அவர்களும் ஆட்படையோடுதான் வருவார்கள். இது சாதாரணம் தான். நமக்கும் பீஷ்மருக்கும் எந்தச் சண்டையும் இல்லையே....” என்று காசிதேசத்து அரசன் விளக்கம் சொன்னான். மந்திரிகள் தலையாட்டினார்கள். ஆனால், எல்லோர் முகத்திலும் ஏனோ கவலைகள் இருந்தன.

எல்லா விருந்தினர்களும் நல்லபடியாக கவனிக்கப்பட்டு, நல்லபடியாக திரும்பிப்போக வேண்டுமே என்று

கவலையாய் அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

விடியற்காலை நேரம் மேகங்கள் வானத்தில் திரண்டன. இடி இடித்தது. ஒரு முறை மழை பெய்தது.

இது மழைக்காலமில்லை, இந்த நேரத்தில் ஏன் மழை பெய்கிறது என்று கவலைப்பட்டார்கள். அவர்களின் பல கவலைகளோடு இயற்கை பற்றிய கவலையும் சேர்ந்து கொண்டது.

விடிந்து நல்ல வெளிச்சம் பரவிய நேரத்தில், மன்னர்கள் அரண்மனைக்குள் நுழைந்தார்கள். அவர்கள் வரவேற்கப் பட்டார்கள். அவரவர்க்கென்று எழுதப்பட்ட ஆசனத்தில் அமர்த்தப்பட்டார்கள்.

சால்வன் இடத்தில் யாரோ ஒரு இளவரசன் போய் நிற்க, அவன் அங்கிருந்து மெல்ல அப்புறப்படுத்தப்பட்டு சால்வன் அந்த இடத்தில் அமர்த்தப்பட்டான்.

'இங்கே எந்தப் பெண்ணும் வருவதற்கு நூறு இளவரசர்களைத் தாண்ட வேண்டும். எனக்கு முதல் இடம் கொடுத்தால் என்ன' என்றும் வேண்டினான்.

சால்வன் வரவேண்டுமே என்று எல்லோரும் கவலைப்பட்டார்கள்.

சால்வன் அமர்க்களமான உடையலங்காரத்தோடு சபையில் ஏறி சகலருக்கும் வணக்கம் சொல்லி, அருகே போய் காசிராஜனை கட்டித்தழுவிக் கெண்டு, பிறகு தன்னுடைய முதல் இடத்திற்கு வந்து அமர்ந்து கொண்டான். மன்னர்கள் அவனுக்கு கொடுக்கப்பட்ட இடத்தைப் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள்.

அம்பைக்கு எதனாலேயோ உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சிறிது நாழிகையில் சால்வனுக்கு மாலையிட்டு விடலாம். மாலையிட்ட பிறகு

இன்று மதியமே சால்வனோடு வனம் நோக்கிப் போய்விடலாம் என்றெல்லாம் அவள் கற்பனை செய்து கொண்டிருந்தாள். அந்தக் கற்பனைப் பாதியும், மெல்ல மெல்ல நேரம் ஊர்ந்து கொண்டிருக்கிறதே என்ற வேதனை பாதியுமாய் அவள் பேரவஸ்தை பட்டுக் கொண்டிருந்தாள்.

சகல அரசர்களும் அமர்ந்ததும் காசிராஜன் எழுந்து நின்று எல்லோரையும் சம்பிரதாயமாக வரவேற்றான். தன்னுடைய மகள்களான அம்பை, அம்பிகை, அம்பாலிகை மூவரும் நல்ல படிப்பு படித்திருக்கிறார்கள் என்றும், சகல வித்தைகளும் தெரிந்தவர்கள் என்றும், அவர்களுக்கு புருஷனைத் தேர்ந் தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், இது காசிதேசத்தின் நாகரீகம் என்றும், சுருக்கமாகச் சொல்லி அவர்களை சபைக்கு அழைத்தான்.

அம்பை மெல்ல சபைக்கு வந்தாள். சபையை நமஸ்கரித்தாள். தந்தையை குனிந்து வணங்கினாள். அந்தணர்களையும், முனிவர்களையும் அருகே போய் மண்டியிட்டு நமஸ்கரித்தாள். மெல்ல சபைக்கு வந்து தலைகுனிந்து நின்றிருந்தாள். அவளிடம் காசிராஜன் கைகாட்ட ஒரு மாலை கொடுக்கப்பட்டது. அந்த மாலையை எடுத்துக்கொண்டு அவள் சால்வனை நோக்கித் திரும்பினாள்.

சால்வன் முதல் ஆளாக உட்கார்ந்து கொண்டிருக்க, அவள் பிரதட்சணமாக ஒரு வலம் வருவாள் என்று, மன்னர்கள் சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். அம்பை மிகுந்த அழகோடு விளங்கினாள். தந்தையை நோக்கி ஒருமுறை பார்த்துவிட்டு கண்களால் அவரிடம் அனுமதி கேட்க, காசிராஜன் ‘செய்... உன் விருப்பம் போல நடத்து' என்பதாக சைகை செய்ய, அம்பை சால்வனை நோக்கி

நடக்க அரசவைக்குள்ளே இருபது குதிரை வீரர்கள் நுழைந்தார்கள். அதற்கு முதன்மையாய் பீஷ்மர் அமர்ந்திருந்தார். பீஷ்மரின் வெள்ளை குதிரை சபையைச் சுற்றிவந்தது. வெள்ளை உடைதரித்து, வெள்ளிக்கிரீடம் தரித்து, வெள்ளை தாடியோடு, கூர்மையான பார்வையோடு, கட்டுடலோடு, சிவந்த கண்களோடு, பீஷ்மர் சுற்றி வருவதைப் பார்த்து மற்ற அரசர்கள் திகைத்தார்கள்.

“இவருக்கென்ன சுயம்வரத்தில் வேலை. திருமண ஆசை வந்துவிட்டதா.”

யாரோ ஒருவன் உரக்கச் சொல்ல, பீஷ்மர் அவனை திரும்பிப் பார்த்தார்.

“நான் ஆண்மகன். உன்னைப் போல் பேடி இல்லை.” என்று உரக்கக் கத்தினார்.

அந்த அரசன் வாள் உருவினான். பீஷ்மர் அவனை முறைத்துப் பார்க்க, அவன் பயந்துபோய் மறுபடியும் உறையில் சொருகிக் கொண்டான். அவர் குதிரை அரசன் அருகே போய் நின்றது. காசிதேசத்து அரசன் எழுந்து நின்று கைகூப்பினான்.

“என்ன இது. எனக்குச் சொல்லியிருந்தால் உங்களை வாசலில் நின்று வரவேற்பேனே. ஒரு அரச சபையில் எதற்கு குதிரையோடு நுழைகிறீர்.” என்று உரக்கக் கேட்டார்.

“உம்முடைய வரவேற்பு எனக்குத் தேவையில்லை. நீர் இந்த சுயம்வரம் நடத்துவதை நான் விரும்பவில்லை. எங்கள் தேசத்து இளவரசரான விசித்ரவீர்யனுக்கு உங்கள் மூன்று பெண்களையும் நான் எடுத்துப் போகிறேன். பெண்களைக் கவர்ந்துபோய் திருமணம் செய்து கொள்வது என்ற மரபு இந்தப் பரதகண்டத்திலே உண்டு. உங்கள் மகள் மூவரும் என்னுடைய வம்சமான

விசித்ரவீர்யனுக்கு மனைவியராகப் போகிறவர்கள். எனவே, முடிந்தால் இங்குள்ள வீரர்கள் எவரேனும் தடுத்துப் பார்க்கட்டும்.” என்று சொல்ல, அம்பை திடுக்கிட்டு அவரைப் பார்த்தாள். கையில் மாலையோடு நிற்கிற அம்பையின் அருகே பீஷ்மரின் குதிரை போயிற்று. வாளால் அவள் மாலையை கொத்தி எடுத்து விசிறி எறிந்தார். அந்த மாலை உயரே இருந்த ஒரு சிங்க சிலையின் கழுத்திலே போய் விழுந்து ஆடிற்று. அதிலுள்ள மலர்கள் தரையில் உதிர்ந்தன.

அம்பை பீஷ்மரை நோக்கி கைகூப்பினாள். அம்பிகையும், அம்பாலிகையும் ஓடிப்போய் காசிதேச அரசனுக்கெதிரே நின்று கொண்டார்கள். குதிரை, சிம்மாசனத்தை நோக்கி நகர்ந்து படிக்கட்டுகளில் ஏறி, அந்த இரண்டு பெண்களையும் கத்தி முனையில் விலக்கி சபைக்கு நடுவே கொண்டு வந்தார். அங்குள்ள அரசர்கள் வாள் உருவினார்கள். வாள் உருவியவர் களையெல்லாம் உற்றுப்பார்த்து கேலியாகச் சிரித்தார். ஒரு அரசனுக்கு அருகே போய் தனது வாளால் அவன் வாளை ஓங்கி அடித்தார். அவன் வாள் மூன்று துண்டாக உடைந்தது.

அவன் பயந்து ஆசனத்தில் உட்கார ஆசனம் மல்லாக்கக் கவிழ்ந்தது. அடுத்திருப்பவனை நோக்கி குதிரையைத் திருப்ப, குதிரை இடித்து அந்த ஆசனமும் கவிழ்ந்தது. அந்த அரசனும் சுருண்டு விழுந்தான். வாளின் கூரற்ற பகுதியால் அம்பையின் முதுகை நோக்கி வாள் அழுத்தித் தள்ள, அம்பை முன்னுக்கு ஓடினாள். கம்புகளினால் தள்ளப்பட்டு கயிறுகளால் போட்டு இழுக்கப்பட்டு அம்பையும், அம்பாலிகையும், அம்பிகையும் வாசலில் வந்து நின்ற தேரில் ஏற்றப்பட்டார்கள்.

தேர்நோக்கி வந்த சால்வனை, பீஷ்மர் தடுத்து நிறுத்தினார். அவன் தாக்குதல்களை மிக விளையாட்டாகத் தடுத்து நிறுத்தினார். சற்று அயர்ந்த

சாலவன் தள்ளாடிப் பின்னடைந்து பிறகு மறுபடியும் வெறிகொண்டு அவரை அடித்தான்.

பீஷ்மர் மீது ஒரு அடிகூட படவில்லை. அவர் வாளினால் அத்தனையையும் தாங்கினார். சிறிது நேரத்தில் பதிலுக்குத் தாக்கத் துவங்கினார். தேர் நகர, அவரை விட்டுவிட்டு சால்வன் தேர் நோக்கி ஓடினான். தேர் நகர்ந்து ஓட, அவன் ஓடிப்போய் தேரின் படிகளில் கால்வைத்து, சாரதியை நோக்கி ஓடுகின்ற தேரில் மெல்ல நகர்ந்தான். அந்த சாரதி வேண்டுமென்றே படிகள் இருக்கும் பக்கம், படிகளில் மோதுமாறு தேர் ஓட்ட சால்வன் இன்னும் எகிறிகுதித்து தேர்த்தூண் பிடித்து ஏறி சாரதியை நோக்கி நகர, பீஷ்மர் அவர் குதிரையை வேகமாக செலுத்திக் கொண்டு தேருக்கு அருகே போய் தேரில் ஏறி சால்வன் வருவதற்கு முன்பு அவனை எட்டிக் காலால் உதைத்தார்.

சால்வன் தடுமாறி சுழன்று நின்றான். இந்தமுறை சால்வனுக்கு அருகே போய் அவன முகத்தில் அடித்தார். சால்வன் பதிலுக்கு அவர் கழுத்தைப் பிடித்து நெறித்தான். பீஷ்மர் முழங்காலால் அவன் வயிற்றில் உதைத்தார். குனிந்து சுருண்ட அவன் முதுகில் ஓங்கி அடித்தார். நிமிர்த்தி முகத்தில் அடித்தார். கையை மடக்கி முகத்தில் குத்தினார். விலா எலும்பு, தோள்பட்டை, கழுத்து எல்லா இடங்களிலும் உள்ளங்கை விரித்து பலமாக வெட்டினார்.

சால்வன் பிடித்த பிடியை விடாமல் வலியில் அலறினான். குதிரையை இன்னும் வேகமாகப் போகக் கட்டளையிட்டார். 'இறங்கிவிடு' என்று கர்ஜித்து எச்சரித்தார். சால்வன் மறுபடியும் பாய்ந்து அவர் முகத்தில் அடிக்க... மிக வேகமாக சால்வனை எட்டி உதைக்க... சால்வன் பிடி தவறி எகிறி மண்ணில்

விழுந்தான். அவன் மீது மூன்று குதிரைகள் ஏறி மிதித்து ஓடின.

அம்பை வாய்ப்பொத்திக் கொண்டு அலறமுடியாமல் திகைத்தபடி சால்வன் இருக்கும் திசை பார்த்தாள்.

தேர் காசிதேசம்விட்டு வெகுவேகமாக ஓடிற்று. காசி தேசத்து வெளியே நிற்கும் சால்வன் படைகளுக்கும், பீஷ்மருக்கும் சண்டை நடந்தது.

பீஷ்மர் சராமாரியாக பாணங்கள் விட, அந்த சாதாரணப் படை சிதறி ஓடிற்று. குதிரைகளையும், யானைகளையும் துன்புறுத்த, அவை மிரண்டு நாலாதிசையும் ஓடி, ஓடுகின்ற வீரர்களை மிதித்துத் தள்ளின. பீஷ்மரின் படை எந்தச் சேதமும் இல்லாமல் கைப்பற்றிய மூன்று பெண்களோடு நிதானமாக, கம்பீரமாக நடைபோட்டு அஸ்தினாபுரம் நோக்கிப் போயிற்று.

ஒரு இடத்தில் இளைப்பாறுவதற்காக நிறுத்தப்பட்ட அம்பை தேரிலிருந்து குதித்து தொலைதூரத்தில் குதிரையில் உட்கார்ந்திருந்த பீஷ்மரை நோக்கிப் போனாள். வீரர்கள் தடுக்க முயல... பீஷ்மர் விடுமாறு சைகை காட்ட வீரர்கள் விலகிப் போனார்கள்.

அம்பை அருகே போய், “எதற்காக என்னை இப்படி பலவந்தமாக எடுத்து வந்திருக்கிறீர்கள்.”

“எங்கள் தேசத்து இளவரசர் விசித்ரவீர்யன் என்பவனுக்கு திருமணம் செய்து வைக்க உங்களை கவர்ந்து வந்திருக்கிறேன்.”

“விசித்ரவீர்யனுக்கு சண்டையிடத் தெரியாதா... அவர் வீரமற்றவரா...”

“இந்தக் கேள்வி உனக்குத் தேவையில்லாதது. முடிந்தால் யாரும் சண்டையிட்டு உன்னைக் காப்பாற்றலாம்.”

“அரசர்கள் வேட்டைக்குப் போவதற்கு முன்பு நாய்கள் போகும். அந்த நாய்கள் குழி முயல்களையும், எலிகளையும் கடித்து வீழ்த்தும். எஜமானர்கள் அதை அறுத்து சுட்டுத் தின்பார்கள். நாய் வாலை ஆட்டிக்கொண்டு தொலைவில் நின்றிருக்கும். நீங்கள் அப்படித்தான் செயல் பட்டிருக்கிறீர்கள்.”

அம்பை உரக்கச் சொல்ல, பலர் அங்கு வாள் உருவினார்கள். அம்பிகையும், அம்பாலிகையும் வாய் பொத்திக் கொண்டார்கள். பீஷ்மர் சகலரையும் அடக்கினார்.

“சும்மாயிருங்கள். ஒருபெண்ணுக்கு எதிரே ஏன் வாள் உருவுகிறீர்கள். இவள் பாதிக்கப்பட்டப் பெண். இவள் வேதனைப்பட்டிருக்கிறாள். அதனாலேயே இவள் கோபமாகப் பேசுகிறாள். சொல்லுக்கு பதில், சொல்தான். கோபமான சொல்லுக்கு பதிலுக்கு கோபமாகவும் பேசலாம். முற்றிலும் புறக்கணிக்கவும் செய்யலாம். இவளை புறக்கணியுங்கள்.”

அம்பையைச்சுற்றி கவசத்தோடு உள்ள வீரர்கள் நின்று கொண்டார்கள்.

பீஷ்மர் உறங்கப் போனார்.

அம்பை தனியே கத்தி கத்திப் பேசிக் கெண்டிருந்தாள். பிறகு, தானாக ஓய்ந்து போனாள். பார்த்த அத்தனை பேருக்கும் அது மிகப்பரிதாபமான ஒரு காட்சியாக இருந்தது. அடுத்த நாள் பகல் முழுவதும் பிரயாணம் செய்து அஸ்தினாபுரத்தின் எல்லையில் நின்றார்கள்.

யுத்தத்திற்கு போன எந்தப் படையும் போன வேகத்தோடு ஊருக்குள் போகாது. போகவும் கூடாது.

யுத்தம் என்பது கோபமான தொழில். அந்தக் கோபமான தொழிலில் ஈடுபட்ட பிறகு, அந்தக் கோபத்தோடேயே

வீட்டிற்குள் நுழைவது, ஊருக்குள் நுழைவது நல்லதல்ல. எல்லையில் அமர்ந்து மனதையும், உடம்பையும் ஆற்றிக்கொண்டு போவது தான் சிறப்பு. எல்லையில் அவர்கள் வந்துவிட்டார்கள் என்றதும் ஆடல் கலைஞர்களும், பாடல் கலைஞர்களும், விதூஷகர்களும், கழைக்கூத்தாடிகளும் வந்து தீப்பந்தங்கள் சொருகி, பாட்டுப்பாடி நடனமாடி, குடிப்பதற்கு மதுபானம் கொடுத்து, வீரர்களை சிரிக்க வைத்து உல்லாசமாக்கினார்கள். வீரர்களை கௌரவிக்க பீஷ்மரும் அந்த ஆட்டபாட்டங்களில் கலந்து கொண்டார்.

வீரர்கள் தன்னிலை மறக்க ஆரம்பித்தபோது மெல்ல நகர்ந்து ஆற்றங்கரை பக்கம் போனார். தேர் மறைவிலிருந்து அம்பை வெளிப்பட்டாள். பீஷ்மருடைய கை சட்டென்று உடைவாளுக்குப் போயிற்று. ஆனால், அம்பை கூப்பிய கரங்களோடு நிற்பதைப் பார்த்து அவரும் தளர்வானார்.

“என்ன அம்பை. இன்னும் கோபம் அடங்கவில்லையா. விசித்ரவீர்யன் நல்லவன். இனிமையானவன். எங்கள் வம்சம் பெருக்குவதற்கு உன்னைப் போன்ற ஆரோக்கியமான, அறிவார்ந்த பெண்கள் தேவை என்றுதான், உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டுத்தான் நான் கவர்ந்து வந்தேன். நான் கவர்ந்து வந்த முறை கொடுமையானது என்று நீ நினைக்கிறாய். அப்படியல்ல. இந்த முறையில் நமது மரபு இருக்கிறது. இந்த முறையை நமது மரபு ஏற்கிறது. பெண்ணினுடைய விருப்பம் என்பது அவளுடைய நலன் சார்ந்தது தானே. அஸ்தினாபுரத்தில் நீ சகல மரியாதைகளுடனும் பட்டமகிஷியாக இருப்பாய். இந்த தேசத்தினுடைய சேனாதிபதிகளும், மந்திரிப்பிரதானிகளும், மக்கள் அனைவரும் உனக்கு அடிபணிவார்கள். ஏன், நீ அரியணை ஏறியபிறகு, இந்த பீஷ்மரும் உன்னை

வணங்கத்தான் வேண்டும். அரசி என்கிற முறையில் உனக்கு முன்பு கைகூப்பி பணியத்தான் வேண்டும். அவ்வளவு பெரிய சிறப்பு உனக்கு கிடைக்கப் போகிறது. எனவே வருத்தங்களை துடைத்துவிட்டு இளவரசனுக்கு நல்ல மனைவியாக இருப் பதைப்பற்றி யோசி." –

மிருதுவாக பீஷ்மர் பேசினார்.

அம்பை சிரித்தாள்.

“நமது மரபுபற்றி உங்கள் விளக்கங்கள் அற்புதமாக இருக்கின்றன. பெண் சக உயிர் என்பதை நமது மரபு மறந்துவிட்டது போல எனக்குத் தோன்றுகிறது. பெண் வெறும் பிள்ளை பெறும் பாத்திரம். வெறும் துணை. அலங்கார பொம்மை என்றுதான் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உனக்கு எல்லா மரியாதையும் கிடைக்கும். சகலரும் வணங்குவார்கள் என்று சொல்லி மயக்கப் பார்க்கிறீர்கள். இவை உங்கள் பார்வையில் சரியாக இருக்கலாம். ஆனால் என் நிலைமை வேறு. நான் சால்வன் என்ற இளவரசனை மனமாரக் காதலிக்கிறேன். அவரும், நானும் வனங்களில் சுற்றித்திரிந்து ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொண்டிருக்கிறோம். சால்வனும் என் மீது உயிரையே வைத்திருந்தார்."

'யாரது. தேரில் ஏறி சாரதியை தடுக்க முயன்றானே... அந்த இளைஞனா...”

“ஆமாம்.”

“ஹா... வீரமாகச் சண்டை போட்டான். மற்ற எல்லா அரசர்களும் பின்னடைய, அவன் மட்டும்தான் குதிரை ஏறி தொடர்ந்து வந்தான். போரே இல்லாமல் கொண்டு போகிறோமோ என்ற வருத்தத்தை அவன்தான் துடைத்தெறிந்தான். வாழ்க அவன். ஆனால், அவனது கைவீச்சில் வலுவில்லை. உன் சால்வன் குடிப்பவன் போலிருக்கிறது. அவன் வியர்வையில் மது நெடி

இருந்தது. கண்களில் கூர்மையில்லை. ஒரு கலக்கம் இருந்தது. அதிகம் குடிப்பவன் கண்களில் தெளிவு இருக்காது. பார்வையில் உறுதி இருக்காது. இதையெல்லாம் சாலவனுக்கு கற்று கொடுக்கக் கூடாதா.”

“உங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் சால்வன் நொய்மையானவர் என்பதை அறிவேன். எல்லோரும் பீஷ்மர் ஆகிவிட முடியாது. அவர் நொய்மையாக இருந்தாலும் என் காதலர். நான் திருமணம் செய்து கொள்ளப் போகும் புருஷர். என்னை இறுக்கி அணைத்தவர். முத்தமிட்டவர். என் எச்சில் உண்டவர். என் உடலின் வனப்பை தடவிப் பார்த்தவர். அவர் இல்லாமல் என்னால் வாழ முடியாது. வெகு நிச்சயமாய் உங்கள் தேசத்து இளவரசனோடு நான் வாழ தகுதியில்லாதவள். அதையும் மீறி என்னை அழைத்துப் போவீர்கள் என்றால் இது கற்பழிப்புக்கு சமம். பெண்ணின் விருப்பமின்றி பெண்மீது கைவைப்பது பிணத்தை தழுவுவது போல் என்று வேதநூல்கள் சொல்கின் றன. விருப்பமில்லாத பெண்ணை எந்த விவேகியும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான். உங்கள் விசித்ரவீர்யனுக்கு எச்சில் பண்டத்தை கொடுப்பதில் உங்களுக்கு என்ன ஆர்வம்.”

பீஷ்மர், அவள் பேச தலையைக் குனிந்து ஆழ்ந்து யோசித்தார். நிமிர்ந்து பார்த்தார்.

“சரி... போ.” என்று ஒற்றை வார்த்தையில் சொன்னார்.

அம்பை தயங்கி நிற்க, “இப்போதே, இந்த க்ஷணமே, இந்த இடத்தை விட்டுப் போகலாம். உனக்கு விடுதலை அளிக்கிறேன். பிறர் விரும்பிய பண்டம் எங்கள் இளவரசனுக்குத் தேவையில்லை. நீ சால்வனை நோக்கியோ அல்லது காசிதேசம் நோக்கியோ போகலாம். உன்னுடைய தகுதிக்கு சால்வன்தான்

சரி என்று நீ நினைக்கிறாய். உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டுத் தான் நான் காசிதேசம் வந்தேன். நீ குதிரையில் தாவி ஏறுவதும், யானையேற்றம் கற்றதும், பன்மொழிப் புலவர்களோடு உட்கார்ந்து உரையாடுவதும் பார்த்துவிட்டு, அஸ்தினாபுரத்து பரம்பரை இன்னும் வீர்யமாக இருக்க வேண்டும் என்ற ஆவலில் தான் உன்னை எடுத்துவர வேண்டும் என்று விரும்பினேன். காசிதேசத்து அரசன் சுயம்வரம் ஏற்பாடு செய்து விட்டான் என்பது பிறகுதான் தெரிந்தது. இந்தத் தீர்மானத்தை முன்னரே அறிந்திருந்தால் நான் காசிதேசத்து அரசனின் மூலமாக உன்னை அஸ்தினாபுரம் அழைத்து வந்திருப்பேன். சுயம்வரம் என்பதில் சில சமயம் பலப்பரிட்சையும் உண்டு. நான் பலத்தோடு கவர்ந்து போகிறேன் என்பதால் தான், உன் தந்தை, காசிதேசத்து அரசன் என்னை பின்தொடரவில்லை. என் வலிவு தெரிந்ததால் மட்டுமல்ல. நீ நல்ல இடத்திற்குப் போகிறாய் என்பதும் காசிதேசத்து அரசனுக்குத் தெரிந்துதான் அமைதியாக இருந்தான். ஆனால், இப்படியொரு கதை சொல்லுவாய் என்று நான் நினைக்கவில்லை. இது உன் துரதிர்ஷ்டமா அல்லது என் துரதிர்ஷ்டமா... தெரியவில்லை. அஸ்தினாபுரத்திற்கு அருமையான வாரிசு உன் மூலம் பிறக்கும் என்று நான் நினைத்திருந்தேன். இது பிசகிவிட்டது. பிறர் விரும்பிய பெண்ணை, பிறரை மனதுக்குள் வைத்துக் கொண்டு வாழ்கின்ற பெண்ணை, எங்கள் இளவரசருக்குத் தருவது தகாது. ஆகவே நீ போகலாம்.”

“இருட்டிய பிறகு எங்கே போக...”

“இருட்டிய பிறகுதானே இதை வந்து பேசினாய். இந்தத் துணிச்சல் இருக்கும்போது பயணப்படுகின்ற துணிச்சல் இருக்காதா. நீ இப்பொழுதே போகலாம். உனக்கு

மட்டும்தான் இந்தக்கதையா அல்லது அம்பிகை, அம்பாலிகைக்கும் இம்மாதிரி காதல் கதைகள் உண்டா...”

குரலில் வெறுப்பு குழைய பீஷ்மர் கேட்டார்.

“இல்லை. நான் மட்டும்தான் சால்வனைக் காதலிக்கிறேன். அவர்கள் அந்தப்புரம் விட்டு வெளியே நகரத் தெரியாத வர்கள்.”

“ஹும்... நீ நகரத் தெரிந்தவள். அப்படியா... சரி. நகர்ந்து போ.”

கட்டளைபோல பீஷ்மர் சொல்ல, அம்பை திரும்பி, வந்த பாதையில் வேகமாக நடக்கத் துவங்கினாள். இருட்டினில் அந்தப் பெண் போவதைப் பார்த்துவிட்டு வேகமாக படைவீரர்களை நோக்கித் திரும்பி, ரகசியமாக இரண்டு வீரர்களை அழைத்து அம்பைக்குப் பாதுகாப்பாய் பின் தொடரும்படி கட்டளையிட்டார்.

அவர்கள் நகர, “குதிரைகள் எடுத்துக் கொண்டு போங்கள்.” என்று இன்னொரு உத்தரவு கொடுத்தார்.

அந்த வீரர்கள், படையிலிருந்து மூன்று குதிரைகள் தேர்ந்தெடுத்து அதன்மீது தாவி ஏறினார்கள். ஒரு குதிரையை கொண்டுபோய் முன்னே நடந்து கொண்டிருக்கின்ற அம்பைக்கு அருகே செலுத்தினார்கள். அம்பை திரும்பி அந்த வீரர்களைப் பார்த்தாள். குதிரையில் தாவி ஏறிக் கொண்டாள்.

அவள் குதிரை காசிதேசம் நோக்கிப் போயிற்று.

இரண்டு வீரர்களும் மௌனமாய் அவளை பின் தொடர்ந்தார்கள்.

சால்வன் எங்கேயிருப்பான். அவன் தேசத்திலா... இல்லை, காசியிலா.

அம்பை குழம்பினாள்.

சால்வன் சும்மா இருக்கமாட்டான். மறுபடியும் ஒரு படை திரட்டி, பீஷ்மரை நோக்கி தன்னை மீட்க நிச்சயம் வருவான்.

அம்பை நம்பினாள்.

இதற்கு தந்தையும் உதவி செய்வார். தந்தை கொண்டாடிய வரல்லவா சால்வன். தந்தையும், சால்வனும் திட்டமிட்டு பெரும்படையோடு நிச்சயம் அஸ்தினாபுரம் நோக்கி வருவார்கள். என்னை வெறுமே விடமாட்டார்கள் என்று யோசித்தாள்.

வந்து பீஷ்மரை எதிர்த்துப் போரிடமுடியுமா. அவர்கள் வரட்டும் என்று காத்திருக்காமல் நான் வந்தது பிசகோ. இது சால்வனுக்கும், தந்தைக்கும் அவமானமோ.

அவள் சிந்தித்தபடி குதிரை ஓட்டினாள்.

இரண்டு நாள் பயணத்தில் தொலைதூரம் எவரேனும் எதிர்ப்படுவார்கள் என்று ஆசை ஆசையாய் எதிர்பார்த்தாள்.

காசிதேசம் வரும்வரையில் எதிரே ஒரு புழு, பூச்சி கூட நகரவில்லை. காசிதேசம் சுருண்டு கிடந்தது. அம்பை தன்னைச் சுற்றி கருப்புத் துணியைப் போர்த்திக் கொண்டு அடையாளம் தெரியாதபடி மாற்றிக் கொண்டு அரண்மனை நோக்கிப் போனாள். அரண்மனையில் ரகசிய வார்த்தையைச் சொல்ல கதவு திறந்தது. உள்ளே போக அம்பை வந்துவிட்டாள் என்பது சகலருக்கும் தெரிந்தது.

அவள் இறங்கி அப்பாவை நோக்கிப் போக, அப்பா சால்வனோடு அரண்மனையின் வேறொரு பகுதியில் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கு ஓடினாள். அங்கு சால்வன் படுத்துக் கிடந்தான். அவன் இடதுகை மூட்டு பிசகியிருந்தது. அதற்கு கட்டுப் போட்டுக்

கொண்டிருந்தார்கள். வலிக்க வலிக்க ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

சால்வன் அலறல் கேட்டது. அவள் போய் நின்றதும், சால்வன் அலறலை நிறுத்தினான். அவளை வெறித்துப் பார்த்தான்.

காசிதேசத்து அரசன் ஓடிவந்து அம்பையை அணைத்துக் கொண்டார்.

“கண்ணே... என்ன ஆயிற்று” என்று கேட்டார்.

தான் பீஷ்மரிடம் பேசியதையும், பீஷ்மர் விளக்கியதையும் சொன்னாள். அருகே போய் சால்வனிடம் நின்று கைகூப்பி னாள்.

“என்னை பீஷ்மர் விடுவித்து விட்டார். நான் உங்களை நேசிப்பதாகச் சொன்னதும், 'சரி போ' என்று நகர்த்தி விட்டார். நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்.” என்று சொல்ல சால்வன் முகம் திருப்பிக் கொண்டான்.

அம்பைக்கு 'சொரேர்' என்று பயம் வயிற்றைத் தாக்கியது.

“ஏன் முகம் திருப்பிக் கொள்கிறீர்கள். பீஷ்மரால் நான் தீண்டப்படக்கூட இல்லை. வேறு எவரும் என்னை எதுவும் செய்யவில்லை. நீங்கள் தொட்டது போலவே முழுமையாய் இருக்கிறேன். இது பூமியின் மீது சத்தியம். வானத்தின் மீது சத்தியம். நீரின் மீதும், காற்றின் மீதும், வெளியின் மீதும் அனைத்தின் மீதும் சத்தியம்” என்று சொல்ல, சால்வன் உரக்க கை தூக்கினான்.

“உன் கற்பு பற்றிய எந்தக் கேள்வியும் எனக்கு இல்லை. உன்னை மீறி உன்னை யாரும் தீண்டமுடியாது என்பதையும் நான் அறிவேன். ஆனால், போரில் என்னை அடித்து அவமானப்படுத்தி உன்னை எடுத்துக் கொண்டு போன பீஷ்மனை எதிர்த்து நான் சாய்க்காமல் உன்னை ஏற்றுக் கொண்டால் அது எனக்கு மரியாதை இல்லை. நீ

பீஷ்மர் போட்ட பிச்சையாக என்னிடம் வரவேண்டாம். நீ இங்கு வந்தது பிசகு. உன்னோடு பேசுவதும் பிசகு. எப்போது உன்னை பலவந்தமாக கவர்ந்து போனார்களோ அப்போழுதே நீ அன்னியனுக்கு சொந்தமாகி விட்டாய். அன்னியனுக்கு சொந்தமான ஒரு பெண்ணை, நான் போய் எந்த விதத்திலும் ஏற்கமுடியாது. நீயாக வந்ததாலும், அன்னியன் புறக்கணித்தாலும் அது ஏற்றுக் கொள்ளத் தகுதியான விஷயம் அல்ல. புலி அடித்த பசுவை சிங்கம் உண்ணாது. நரிகள்தான் தின்னும். நான் தோற்றது உண்மைதான். ஆனால் போராடித்தான் தோற்றேன். உன்னை அடைய வேண்டுமெனில் போராடி ஜெயித்தபிறகுதான் அடைவேன்.”

“பிறகு என்கதி என்ன.”

“நீ போ... இது உன் இடமல்ல.”

“இது என்தேசம். இந்த காசி என்தேசம்.”

அம்பை அலறலாய் கத்தினாள்.

“இல்லை. இது உன் தேசமல்ல. நீ இங்கிருப்பது உன் தேசத்திற்கு அவமானம். பீஷ்மர் பிச்சையிட்ட பெண் நீ. இந்த தேசத்தின் இளவரசியாக இருப்பவர், வெளியூரிலிருந்து வந்தவர் என்று சொன்னால் இந்த தேசத்து மக்களுக்கு தலை குனிவதைத்தவிர வேறுவழியில்லை. அன்னியரின் வசம் இரண்டுநாள் இருந்த பெண் என்றுதான் எல்லோரும் சொல்வார்களே தவிர, உன்னுடைய உயர்ந்த குணங்கள் பற்றி எவரும் பாராட்ட மாட்டார்கள். குதிரை ஏற்றமும், யானை ஏற்றமும், வில்வித்தையும் படிப்பும் பாட்டும் முக்கியமாகாது. எனவே, யாராலே கவர்ந்து எடுத்துப் போகப்பட்டாயோ அவரிடமே போ. எதற்காக நீ கவர்ந்து எடுத்துப் போகப்பட்டாயோ அதுவே செய்.

விசித்ரவீர்யனுக்காக எடுத்துப் போகப்பட்ட நீ, விசித்ரவீர்யனுக்கு பட்ட மகிஷியாக இருந்து அங்கே பிள்ளைகள் பெற்று, அவர்களை பெரும் வீரர்களாக மாற்று. இது உன் இடமல்ல. இங்குதான் நீ இருப்பாய் எனில், இந்த தேசத்தை விட்டு உடனடியாய் நான் வெளியேறுவேன்.”

சால்வன் புறக்கணிக்க, தகப்பனை நோக்கி “அப்பா” என்றபடி ஓடினாள்.

தந்தையும் முகம் திருப்பிக் கொண்டார்.

“சால்வன் சொல்வது சரி. நீ கவர்ந்து எடுத்துப் போகப்பட்ட பெண். உனக்கு காசிதேசத்தில் இனி எந்தத் தகுதியும் இல்லை. எனவே பீஷ்மருக்கு தொண்டு செய்து வாழ்ந்து கொண்டிரு. அவர் மகாவீரர். உத்தமமான புருஷர். அவருக்கு தொண்டு செய்ய நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும். காசிதேசம் விட்டு விரைவில் நீ விலகுவது நல்லது.”

அம்பை திகைத்தாள். என்ன செய்வது என்று தெரியாமல் முன்னும், பின்னும் அலைந்தாள்.

இரண்டு வீரர்களை கைதட்டி அழைத்து “வேறு குதிரைகளை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டுபோய் அஸ்தினாபுரத்து எல்லையில் விட்டு விட்டு வாருங்கள்.” காசிதேசத்து இளவரசர் கட்டளையிட்டார்.

அம்பை நொந்துபோய் அஸ்தினாபுரம் நோக்கிப் பயணப் பட்டாள்.

விசித்ரவீர்யனோடு எப்படி வாழ்வது.

வேண்டாம் அம்பிகையும், அம்பாலிகையும் வாழட்டும். நான் யாரால் கவரப்பட்டேனோ அவருக்கே அடிமையாக

இருக்கிறேன். என்னை நீங்கள்தானே கவர்ந்து போனீர்கள். எனக்கு நீங்கள் வாழ்வு கொடுங்கள் என்று பீஷ்மரைக் கேட்கலாம்.

ஆனால், பீஷ்மர் சத்தியம் செய்திருக்கிறாரே. எந்தப் பெண்ணையும் மனதால் நினைக்க மாட்டேன் என்று வாக்குறுதி அளித்திருக்கிறாரே... அதை எப்படி மீறுவார்...

வாக்குறுதி அளித்தவர் சபைக்குள் நுழைந்து பெண்களை தேரில் ஏற்றிக் கொண்டு போகலாமா. அது சரி என்றால், அந்த வாக்குறுதியை மீறுவதும் சரி அல்லவா. பீஷ்மருக்கு தொண்டு செய்வது சிறந்த விஷயம்தான். சால்வன் அசிங்கப்படுத்தி விட்டான். அலட்சியப்படுத்தி விட்டான். சால்வனின் அலட் சியத்தில் கூட ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால், தந்தையின் புறக்கணிப்புத்தான் வயிற்றெரிச்சலாக இருக்கிறது. ஒருபெண் கிணற்றில் விழுந்துவிட்டால் இவர்களெல்லாம் கல்லைப் போட்டுக் கொல்வார்கள். கைதூக்கி விடமாட்டார்கள். பெண் என்றால் இவர்களுக்கு அத்தனை கேவலம். இதைவிட பெண்ணை மதித்து 'நீ விசித்ரவீர்யனுக்கு வேண்டாம் விலகிப் போ' என்று சொன்ன பீஷ்மர் உத்தமம். அவரிடம் போய் நான் உமக்குத் தொண்டு செய்கிறேன் என்று இருக்கலாமோ. நல்ல புருஷனுக்கு வேலைக்காரியாக வாழலாம். அவள் குதிரையை வேகமாக வேகமாகச் செலுத்தி அஸ்தினாபுரத்திற்குள் நுழைந்தாள்.

அவள் வந்த கதையையும், போன கதையையும் வீரர்களால் சொல்லப்பட மக்கள் அவளைப் பார்த்து விட்டு ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். அவளைப் பின்தொடர்ந்து வந்தார்கள். அஸ்தினாபுரம் பெரிய கட்டிடங்களோடும், அகலமான வீதிகளோடும், அழகான பெண்களோடும் கம்பீரமான வீரர்களோடும், பசுமை பான தோற்றங்களோடும் இருந்தது.

பீஷ்மர் அவள் வருகையைத் தெரிந்து கொண்டு வெளியே வந்தார். வாசலில் நிற்கவைத்து குடிக்க ஜலம் கொடுத்தார்.

இது ஒரு உபசாரம்.

குடித்தபிறகு படியேறி பீஷ்மருக்கு முன்பு பணிவாக நின்றாள்.

“என்னை சால்வன் ஏற்க மறுத்து விட்டார். என் தந்தையும் நீ காசிதேசத்தில் இருக்கத் தகாது என்று சொல்லி விட்டார். உங்களால் கவர்ந்து போகப்பட்டதால் நான் அவர்களால் புறக்கணிக்கப்பட்டேன். நீங்கள் நல்லபடியாக திருப்பி அனுப்பினீர்கள் என்று சொல்லியும், அவர்கள் என் கற்பு பற்றி சந்தேகமில்லாமல் நீங்கள் பிச்சை போடுவதாக நினைத்து என்னை திரும்ப அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் போர் செய்து தான், உங்களை வென்றுதான் என்னைக் கவர்ந்து போக வேண்டும் என்ற விதியைச் சொல்கிறார்கள். அதே நேரம் உங்களை வெல்ல முடியாது என்பதிலும் தெளிவாக இருக்கிறார்கள். எனவே, அந்த இடத்தில் எனக்கு மரியாதை இல்லை. நான் விசித்ரவீர்யனுக்கும் மனைவியாக முடியாது. ஆனால், எந்த வீரத்தால் என் வாழ்க்கையின் திசையை மாற்றி என்னைக் கவர்ந்து வந்தீர்களோ, உங்களுக்கு வேலைக்காரியாக இருக்க நான் விருப்பப்படுகிறேன். எனவே உங்களோடு நான் இருக்க என்னை அனுமதியுங்கள்.”

அவள் கைகூப்பினாள்.

“நான் விரதம் இருக்கிறேன் என்பது உலகமறிந்த செய்தி. இந்த விரதத்திற்கு பங்கம் ஏற்படுகின்ற எதையும் நான் மனதாலும் நினையேன். நீ ஒரு பெண். அழகிய பெண். ராஜகுமாரி. நீயும், நானும் ஒரே மாளிகையில் தங்கியிருந்தால் அதற்கு வேறு அர்த்தம்தான் மக்கள்

சொல்வார்கள். உன்னை மகளாகவோ, சகோதரியாகவோ நினைக்கிறேன் என்று சொன் னாலும் அது எடுபடாது. நான் உன்னை கடிமணத்திற்காக கவர்ந்து வந்தேன். விசித்ரவீர்யன் உன்னை ஏற்க மறுத்து விட்டான். 'வேறு ஒருவர் விரும்பிய பெண்ணை, வேறு ஒருவரால் நேசிக்கப்பட்ட பெண்ணை நான் ஏற்க இயலாது.

அந்தப் பெண்ணே என்னைப் புறக்கணித்துத் திரும்பிப் போகிறபோது, மறுபடி வந்தால் அவள் எதன் பொருட்டும் என் மனைவியாக முடியாது' என்று தெளிவாகச் சொல்லி விட்டான். அவன் சொல்வதிலும் உண்மை இருக்கிறது. தனக்கு வேண்டாம் என்று ஒரு பெண் சொல்லிவிட அந்தப் பெண்ணை எந்தக் காரணம் கொண்டும் தொடுவதற்கு ஒரு ஆண்மகனுக்கு விருப்பம் இராது. நான் உன்னை வேலைக்காரியாகக்கூட அல்ல. என் தேசத்துப் பிரஜையாகக் கூட ஏற்க முடியாது. உனக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை. எந்தப் பெண்ணோடும் எனக்கு எந்த உறவும் இல்லை. உன்னுடைய இடம் அஸ்தினாபுரமல்ல. அஸ்தினாபுரத்தில் இருக்கமுடியாது என்று சொல்லித்தான் நீ வெளியேறினாய். அஸ்தினாபுரத்தில் இருக்க சம்மதிக்கப்பட்ட அம்பிகைக்கும், அம்பாலிகைக்கு மிகப் பெரிய மரியாதைகள் நடக்கின்றன. இங்கு அனைவரும் அவருக்கு முன்பு பணிந்து மிக பவ்யமாக நடந்து கொள்கிறார்கள். திருமணம் விரைவில் நடக்க - இருக்கிறது. எனவே, அந்த விழாவிற்கு குந்தகம் வராமல் அந்தச் திருமணத்திற்கு இடையே உன்னைப் பற்றி எவரும் பேசாம உன்னை முற்றிலும் மறந்திருப்பதுதான் நல்லது. உன் தங்கைகளுக்கு நடக்கின்ற நல்ல விஷயத்தை உன் வருகை, உன் இருப்பு கெடுக்கும். எனவே, அஸ்தினாபுரம் விட்டு உடனடியாக வெளியேறு.

போ மறுபடியும் சால்வனிடம் போ. அதுதான் சரி. உன்னைத் தொட்டவன் உன்னை அனுபவித்தவன். உன்னை போரிலிருந்து காப்பாற்ற முடியாவிட்டாலும் உனக்கு உரியவனாகிறான். ஒரு பெண்ணை தழுவியவன், முத்தமிட்டவன் அவளை எல்லா இடத்திலும் காப்பாற்ற வேண்டும். உன்னை நீ காப்பாற்றிக் கொண்டு வந்தாய் என்றால் உன்னை அவர் ஏற்றுக் கொள்வதுதான் மரியாதை. எந்த இடத்திலும் நீ தவறாக கையாளப்படவில்லை என்பதை எந்தச் சபையிலும் சொல்வேன். என்னை வென்று உன்னை அடைவது என்பது இந்த யுகத்தில் முடியாத காரியம். அப்படி யொருவன் இந்த பூமியில் இதுவரை பிறக்கவில்லை, இனி பிறக்கலாம். மகத்தான வீரர்கள் பிறக்கப் போகிறார்கள் என்பதற்கான கிரக சூட்சுமங்கள் இருக்கினறன. மகத்தான வீரர்கள் பிறந்தால் மகத்தான போரும் நடக்கத்தானே இருக்கும்.”

“என்னைச் சால்வன் ஏற்க மாட்டாரே. நான் என்ன செய்வேன்.”

“உன்னை வேறு யார் ஏற்பார்களோ அவர்களோடு போ.” சொல்லிவிட்டு பீஷ்மர் சிரித்தார்.

அடிபட்ட பாம்பு போல அம்பை சீறினாள்.

“விளையாடுகிறீர்களா, என்னை வேசி என்று நினைத்தீர்களா.”

“நான் எதுவும் நினைக்கவில்லை. அது என் வேலையுமில்லை. நான் உன்னை கவர்ந்தது உண்மை. நீ மௌனமாக வந்திருந்தால், இந்நேரம் இந்த அஸ்தினாபுரத்தில் முதன்மையான இடம் உனக்குக் கிடைத்திருக்கும். நீயாக உதறிக் கொண்டு இந்த இடம் விட்டு நகர்ந்தாய். உனக்குக் கிடைக்க வேண்டிய மிகப்பெரிய மரியாதையை அழித்துக் கொண்டாய். நான்

உன்னுடைய வார்த்தைகளுக்கும், உணர்வுகளுக்கும் மரியாதை கொடுத்து உன்னை சால்வனிடம் அனுப்பினேன். நீ என்னைக் கோபித்துக் கொள்வதில் எந்த லாபமும் இல்லை. நீ உண்மையில் சால்வனைக் கோபித்துக் கொள்ளவேண்டும். சால்வனிடம் அடம் பிடித்திருக்க வேண்டும். 'என்னைத் தொட்டுத் தழுவி விட்டு என்னைப் புறக்கணிக்கிறாயே... இது நியாயமா. எதற்காக என்னைத் தொட்டாய். ஏன் என்னைக் காதலித்தாய். என்னைக் காதலித்தது பொய்யா' என்று அவனை நீ கேட்டிருக்க வேண்டும். அதைக் கேட்காமல் அவசரப்பட்டு இங்கு வந்து எனக்கு வேலைக்காரியாக இருக்கிறேன் என்று சொல்வது ஒரு பேதமை. எப்பொழுது இப்படி ஒரு எண்ணம் இருக்கிறதோ அப்பொழுது அஸ்தினாபுரத்திற்குள்ளேயே நீ வரக்கூடாது என்று நான் தடை சொல்கிறேன். வெளியேறு. உடனே நீ வெளியேறு. பீஷ்மருக்கு அருகில் நிற்கக்கூட உனக்கு தகுதியில்லை. நகர்ந்து போ.”

கோபமாக கட்டளையிட அம்பை பின்னடைந்தாள். வீரர்கள் அவளை குதிரையில் ஏற்றி அஸ்தினாபுரத்தின் எல்லையில் கொண்டுபோய் விட்டு, அவளை திரும்பி வரவேண்டாம் என்று எச்சரித்தார்கள்.

அந்தக் குதிரை சோகமாய் அம்பையை சுமந்து கொண்டு காசிதேசம் நோக்கி நடந்தது.

அம்பை அழுதாள். அரற்றினாள். வழியிலுள்ள புதர்களோடும், மரங்களோடும், செடிகளோடும் பறவைகளோடும், மிருகங்களோடும் பேசிப் புலம்பினாள். பிச்சியைப் போல காசிதேசம் வந்து சேர்ந்தாள்.

சால்வனின் ரத்தக்காயமும், மூட்டு விலகலும் சரியாயிற்று. அவன் மணல் மூட்டைகளைத் தூக்கி

கைகளுக்கு உரமேற்றிக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் வலி நிவாரணம் ஏற்படும் என்று வைத்தியர்கள் சொல்ல, கைகளுக்கு எண்ணெய் தடவி சூடு காட்டப்பட்டபோது, அவன் புஜங்களை விரித்து மடக்கி மூட்டுக்கு வலுவேற்றிக் கொண்டிருந்தான். வலி அதிகம் இருந்ததால் கூவிக் கொண்டே தொடர்ந்து அந்தப் பயிற்சியை செய்து கொண்டிருந்தான்.

அம்பை துவண்டு போய் அவன் அருகே விழுந்தாள். அவன் எழுந்து விலகி நின்று கொண்டான். பணிப்பெண்கள் அவளுக்கு குடிக்க நீரும், உடம்பில் சக்தி ஏறுவதற்காக இனிப்புப் பாயாஸமும் கொடுத்தார்கள்.

அம்பை. சக்தி வரப்பெற்றவளாக சால்வனை நோக்கிப் பேசினாள்.

“என்னை வைத்து நீங்கள் எல்லோரும் விளையாடுகிறீர்கள். நான் ஒரு பெண் என்பதே உங்களுக்கு மறந்து போயிற்றா. என்னைத் தொட்டுத் தழுவிய போது நான் இனிப்பாக இருந்தேன். இப்பொழுது கசந்து விட்டேனா. சரி என்னை பீஷ்மர் கவரவில்லை. உங்களோடு சண்டையிட்டு அடித்துத் துரத்தினார். நீங்கள் ரத்த காயங்களோடு வந்தீர்கள் என்றால் உங்களை நான் ஏற்க மாட்டேனா. நீங்கள் பீஷ்மரால் தோற்கடிக்கப்பட்டீர்கள். அவரை ஜெயித்துவிட்டு வாருங்கள்.

அப்பொழுதுதான் உங்களை சேர்த்துக் கொள்வேன் என்று நான் சொல்வேனா. தோற்றுப்போன அரசரின் மனைவிகள் அப்படிப் பேசியிருக்கிறார்களா. ஒரு புருஷன் ஜெயித்தாலும், தோற்றாலும் அந்தப் பெண்ணுக்கு புருஷன்தான் என்கையில், என்னை ஒருவன் கவர்ந்து போனான் என்பதற்காக என்னைப் புறக்கணிப்பதில் என்ன நியாயம். அரசன் இறந்தால்

மனைவியர் தீக்குளித்திருக்கிறார்களே தவிர, அரசன் தோற்றால் எந்த மனைவியும் தீக்குளித்ததில்லை. தோல்வியை ஏற்றுக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருக்கிறார்கள். மனைவியோடு தொடர்ந்து குடித்தனம் நடத்துகிறார்கள். பிள்ளை பெறுகிறார்கள். நீங்கள் தோற்றுப் போனால் என்ன. பீஷ்மரை உங்களால் ஜெயிக்க முடியாது. அப்படியிருக்க உங்கள் தோல்வியை மிக முக்கியமாக நினைத்து என்னைப் புறக்கணிக் கிறீர்களே. அலைய விடுகிறீர்களே. இது நியாயம்தானா. நான் என்ன பாபம் செய்தேன். உங்களுக்கு என்ன துரோகம் செய்தேன். மறுபடியும் சொல்கிறேன். இந்தக் காற்று, இந்த நீர், இந்த அக்னி, இந்த வெளி எல்லாம் சாட்சியாகச் சொல்கிறேன். நான் கற்பிழந்தவள் இல்லை. எவரையும் உங்களைத் தவிர நான் மனதாலும் ஏற்றதில்லை” என்று உரக்கச் சொன்னாள்.

“உனக்கு ஏன் எல்லாமும் மறந்து போகிறது. சுயம்வரம் என்று சொன்னதுமே நான் பயந்தேன். என் அச்சத்தை வெளியிட்டேன். அதற்கு முன்பு உன் தந்தையிடம் நம் காதலைப் பற்றி நீ சொல்லியிருக்க வேண்டாமா என்று கேட்டேன். பிறகு சொல்கிறேன் என்று சொன்னாய். நீ சொன்ன பிறகு உன் தந்தை அந்த சுயம்வரத்திலிருந்து உன்னை விலக்கவில்லை. அதுவும் தவறு. இந்த சுயம்வரத்தில் நீ இல்லை என்று சொல்லியிருந்தால் உன்னை எவரும் சிறை பிடித்துப் போயிருக்க மாட்டார்கள். சுயம்வரத்தில் நீ தேர்ந்தெடுப்பது மட்டுமல்லாமல், ஒரு அரசன் தன் வலிமையைக் காட்டி தேர்ந்தெடுப்பது நடக்கக்கூடும் என்றுதான் நான் பயந்தேன். இந்த அச்சம் ஆரம்பம் முதற்கொண்டே இருந்தது. ஆனால், பீஷ்மர் வருவார் என்று நான் நினைக்கவேயில்லை. வேறு எந்த அரசர் வந்தாலும் நான் மடக்கி உன்னை மீட்டிருக்க முடியும். நீ சொன்னது போல்

பீஷ்மரை ஜெயிக்க இங்கு எவரும் பிறக்கவில்லை. இனி பிறப்பான். எல்லா வீரனுக்கும் தோல்வியும், மரணமும் நிச்சயம் உண்டு. மரணம்தான் தோல்வியெனில், பீஷ்மருக்கும் மரணம் உண்டு. அவர் சாகாவரம் பெற்றவர் அல்ல. ஒரு பொருளை பலவந்தமாக கவர்ந்து போனவர் அந்தப் பொருளை உபயோகப்படுத்த வேண்டும். வீசி எறிந்தாலும் அல்லது கொண்டு போய் எடுத்த இடத்தில் வைத்தாலும் எவரும் அதை உத்தமம் என்று ஏற்க மாட்டார்கள்.

பீஷ்மர் செய்த தவறுகள் இரண்டு. உன்னை ராட்சசத்தனமாய் கவர்ந்து போனது முதல் தவறு. இது மனித நாகரீகத்தின் அவமானம். அப்படி கவர்ந்து போன் உன்னை அந்த தேசத்தின் பட்டமகிஷியாக மாற்றாது இப்படி திருப்பி அனுப்புவது இரண்டாவது தவறு. இப்போது அம்பிகையும், அம்பாலிகையும் யாரையாவது நேசித்திருந்தால் அந்த விசித்ரவீர்யன் என்ன செய்வான். வேண்டாம் இன்னொரு யுத்தம் செய்யலாம் என்று சொல்வானா. வேறு தேசத்துப் பெண்களை சிறைபிடித்து வாருங்கள் என்று கேட்பானா. ஒரு வலுவில்லாத இளவரசனுக்காக மிகுந்த அரக்கத்தனமுடைய ஒரு கிழவன் ஆடிய ஆட்டம் அது. இதில் நீ சிக்கிக் கொண்டாய். உன்நிலைமை பரிதாபமாக இருக்கிறது. ஆனால், உன்னை ஏற்க இயலாது. உன்மீது நான் எவ்வளவு பிரியம் வைத்திருந்தேன் என்பதை என்னுடைய தொடல்கள் உனக்கு உணர்த்தியிருக்கும். கங்கையினுடைய வேகம் பற்றியோ, சுழல்கள் பற்றியோ எதுவும் தெரியாமல் உன் அந்தப்புரத்திற்கு நடுவில் தனி ஆளாய் படகோட்டி வந்தவன் நான். அதில் என் காதல் உனக்குப் புரிந்திருக்கும். என் காதல் உண்மையானது. நான் அம்பையை நேசித்தது சத்தியம். ஆனால், அந்த அம்பை இப்போது இல்லை. உன்னைத் தொடும்

பொழுதெல்லாம் என் நெகிழ்ந்த மூட்டும், ரத்தக்காயங்களும், வீங்கிய உதடும்தான் எனக்கு நினைவுக்கு வரும். பீஷ்மர் ஓடுகிற தேரில் என்னை அடித்துப் புடைத்ததுதான் ஞாபகம் வரும். உன்னை தொடர்ந்து தொடமுடியுமா. உன்னோடு வாழ முடியுமா, இல்லை. எந்நேரமும் உன் இருப்பு என் தோல்வியைக் தான் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். பிறகு, அது வாழ்க்கையாக இருக்குமா."

உலகத்தில் மிகச்சிறந்த பெண்ணை நான் மனைவியாக அடையப் போகிறேன் என்ற நினைப்பு பீஷ்மரால் நொறுக்கப்பட்டது. நீ என்னைக் கோபித்து என்னை கேலி செய்து எந்தப் புண்ணியமும் இல்லை. இன்னொன்றும் புரிந்து கொள். நான் உன் காதலன். ஆனால், உன் தந்தை உன்னை ஏற்பாரா. உன் தந்தையே உன்னை மறுதலிக்கிறபோது என்னை ஏற்றுக் கொள்ளும்படி நீ வற்புறுத்துவது எவ்வகையில் நியாயம். காசிதேசமே உன்னை புறக்கணித்தபோது என் தேசம் என்னை ஏற்றுக் கொள்ளுமா. அது உனக்கு இழிவில்லையா, எனக்கு வேலைக்காரியாக இருக்கிறேன் என்று பீஷ்மரிடம் பேசியது போல என்னிடம் பேசிவிடாதே. நீ வேலைக்காரியாக இருப்பதற்குப் பிறக்கவில்லை. வேறு எதற்காகவோ பிறந்திருக்கிறாய் என்று உன்னைப் பார்க்கிறபோது எனக்குத் தோன்றுகிறது. உன்னைக் குறித்து ஒரு அச்சம் பரவுகிறது. அப்போது உன்னிடம் நான் பார்த்த கனிவு, காதல் எல்லாம் இப்போது என்னிடம் இல்லை. தயவு செய்து என்னை நிம்மதியாக இருக்கவிடு. என்னைவிட்டு விலகு. நான் எந்தத் தவறும் என் வாழ்க்கையில் செய்யவில்லை. என்னால் முடிந்தவரை உன்னைக் காப்பாற்றப் போராடினேன். நான் ஓடி ஒளியவில்லை. நின்று சண்டையிட்டேன். தோற்றேன். பீஷ்மரிடம் போ. எந்த புருஷனாவது, கவர்ந்துபோன

பெண்ணை ஏற்பானா என்று கேள். அப்படி ஏற்பான் எனில், விசித்ரவீர்யனையே உனக்குத் திருமணம் செய்து வைக்கச் சொல். நான் உன்னை திருமணம் செய்து கொள்வது சரியெனில் விசித்ரவீர்யன் உன்னை ஏற்பதும் சரிதானே. அந்த விசித்ரவீர்யனே உன்னை மறுக்கும் போது, விவேகமும், அறிவும், வீரமும் இல்லாத விசித்ரவீர்யனே உன்னை வேண்டாம் என்று சொல்லும்போது. உன்னை வேறு யார் ஏற்பார். பீஷ்மரைத் தவிர. போ. பீஷ்மரிடம் போ. பிடிவாதம் பிடி. விடாமல் கேள். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். உனக்கு வெற்றிகள் உண்டாகட்டும். உனக்காக நான் நிச்சயம் பிரார்த்தனை செய்வேன். என் அம்பை இறந்து விட்டாள். என் அம்பை என்றோ மடிந்து விட்டாள். என் எதிரே இருப்பது வேறு யாரோ, அம்பையல்ல. இந்த அம்பை என் நினைவுகளில் மட்டுமே இருக்கிறாள்." சொல்லி விட்டு மெல்ல நடந்து சால்வன் வெளியேறினான்.

அம்பை திகைத்தாள். அவளை காசிதேசம் விட்டு உடனடியாக வெளியேறும்படி மந்திரிகள் மூலம் காசிதேச அரசன் சொல்ல, அவள் மறுபடியும் குதிரை ஏறி அஸ்தினாபுரம் நோக்கி போனாள்.

அதன் எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்பட்டாள். பீஷ்மரை பார்க்க முடியாது என்று விரட்டப்பட்டாள். உணவின்றி, நல்ல உடைகளின்றி சிக்குப்பிடித்த தலையோடு வெய்யிலிலும், மழையிலும் காய்ந்து, கருத்த உடம்போடு, ஒட்டிய வயிறோடு முன்னும், பின்னும் அலைந்து ஏதேனும் ஒரு வழியில் நகரத்துக்குள் புகுந்துவிட வேண்டுமென்று முயற்சித்தாள். அவளை அலையவிட்டு, நகரத்திற்குள் நுழைய விட்டு பிறகு கல்லாலும், சொல்லாலும் அடித்துத் துரத்தினார்கள்.

“சால்வன் வைத்துக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி விட்டானா...வா... நான் வைத்துக் கொள்கிறேன். வா. ஆனால், உன்னை வைத்துக் கொள்ள காசிதேசத்து அரசன் காசு தரவேண்டும்.”

எவனோ தொடைவரை வழித்துக்கொண்டு கூப்பிட மற்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். பெண்கள் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

அம்பிகையும், அம்பாலிகையும் தொலைவிலிருந்து பார்த்துக் கண்ணீர் விட்டார்கள். 'அம்பையை எப்படியாவது நல்ல வார்த்தைகளைச் சொல்லி அஸ்தினாபுரத்தை விட்டு அப்புறப்படுத்துங்களேன்' என்று அந்தணர்களுக்கு சன்மானம் கொடுத்தார்கள். ஆனால், அம்பை யாருக்கும் சிக்காமல் தனியே அலைந்தாள். தனக்குத்தானே உரத்த குரலில் பேசினாள்.

அவள் கனவுகளில் வேலேந்திய உருவம் வந்தது. அவளைப் பார்த்துச் சிரித்தது.

கந்தவேளே... கந்தவேளே... என் நிலைமை ஏன் இப்படி' என்று அவள் அரற்ற, இன்னும் அருகே நெருங்கி வந்தது.

ஒருநாள் கங்கைக் கரைக்குப் போய் சிறுபடையோடு திரும்பிக் கொண்டிருக்கின்ற பீஷ்மரை, அம்பை பார்த்து விட்டு, தெருவில் வழியோடு போகிற ஒரு குதிரையை அவள் எடுத்துக் கொண்டு போய், பீஷ்மரை பின் தொடர்ந்து அவரைச் சுற்றி வந்து. “எனக்கு பதில் சொல்லுங்கள். என் வாழ்க்கையை ஏன் நிர்மூலமாக்கினீர்கள். என்னுடைய இடத்தை ஏன் இத்தனை அசிங்கமாக்கினீர்கள். என் உருவத்தை ஏன் இப்படி கோரமாக்கி னீர்கள். நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன். என் என்னை இப்படி அபலையாய் அலைய விட்டீர்கள். என்னை என் காதலனிடமிருந்து பிரித்து, நீங்களும் ஏற்க மறுத்து, என்னை ஏன் நடை

பிணமாய் மாற்றினீர்கள். மறுபடியும் கேட்கிறேன். கடைசி முறையாய் கேட்கிறேன். உங்களுடைய அந்தப்புரத் தில் எனக்கு இடம் உண்டா இல்லையா.” என்று கேட்க, பீஷ்மர் கடும் கோபமடைந்தார்.

“நானும் கடைசி முறையாய் சொல்கிறேன். இதுவரை பெண் என்று மரியாதை கொடுத்துப் பேசினேன். இந்த அரண்மனையில் மட்டுமல்ல. அஸ்தினாபுரத்தைச் சுற்றியுள்ள வனங்களில் கூட உனக்கு இடம் இல்லை. போ. இந்த இடம் விட்டு தொலை தூரம் போ.” என்று கோபமாகச் சீறினார்.

அவர் கோபத்தைக் கண்டு அவர் படைவீரர்கள் சுறுசுறுப் பானார்கள். சவுக்கால் அவளை அடித்து குதிரையிலிருந்து கீழே தள்ளினார்கள். வனங்களூடே அவளை ஓட ஓட விரட்டினார்கள்.

அஸ்தினாபுரத்திலிருந்து வெகுதொலைவே அவளை விட்டுவிட்டு வந்தார்கள். பெரும் புல்வெளியில் உடம்பெல்லாம் காயங்களூடே பலநாட்கள் சுயநினைவின்றி அம்பை படுத்துக் கிடந்தாள். அஸ்தினாபுரத்தில் மிக விமரிசையாக அம்பிகைக்கும், அம்பாலிகைக்கும் விசித்ரவீர்யனோடு திருமணம் நடந்தேறியது.

அம்பிகையும், அம்பாலிகையும் அனுப்பிய அந்தணர்கள் அவள் காயங்களுக்கு கட்டுப்போட்டு, அவளை பரசுராமரிடம் போகும்படி வழிப்படுத்தினார்கள். பரசுராமர் அவள் கதையைக் கேட்டு கோபமானார்.

க்ஷத்திரியனுக்கு என்ன கர்வம். இதைக் கேட்பார் இல்லையா என்று வில்வளைத்து நாண் ஏற்றினார்.

அம்பையை அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரம் போனார். சங்கு ஒலித்து பீஷ்மரை வெளியே வந்த சண்டை செய்யுமாறு உரக்கக் கூவினார்.

பீஷ்மர் கோட்டைக் கதவு திறந்து வெளியே வந்து பரசுராமரை பலமாகத் தாக்க, பரசுராமர் வில் உடைந்து விழுந்தது. பரசுராமர் தோற்றோடினார்.

க்ஷத்திரியர்களை சார்ந்து அந்தணர்கள் இருப்பது தவறு. க்ஷத்திரியர்களுக்கு வில்வித்தை கற்றுக் கொடுப்பது தவறு. இனி ஒருக்காலும் நான் க்ஷத்திரியர்களுக்கு வில்வித்தை கற்றுத்தரமாட்டேன் என்று சொல்லி விட்டு காடுகளில் மறைந்து கொண்டார்.

அம்பை தனியே அலைந்தாள். வேதனையிலும், துக்கத்திலும், அவமானத்திலும் துடித்தாள். மறுபடியும் முருகப் பெருமான் உருவம் அவள் கண்ணில் வர, திரும்பத் திரும்ப அவர் பெயரை உரக்கக்கூவி கடுமையாய் தவம் செய்தாள். வெகு நாள் தவத்திற்குப் பிறகு, அவள் கைகளில் ஒருமலர்மாலை தோன்றியது. கந்தபெருமானின் உருவம் எதிரே வந்தது. இந்த மலர் மாலையை அணிந்து கொண்டு யார் போரிடுகிறாரோ, அவர் பீஷ்மரைக் கொல்வார் என்று உத்தரவாதம் முருகப் பெருமான் கொடுக்க அம்பை வணங்கி நன்றி சொன்னாள்.

அந்த மாலையை எடுத்துக் கொண்டு பலபேரிடம் போய், அணிந்து கொண்டு பீஷ்மரோடு சண்டையிடச் சொன்னாள்.

அம்பையையோ, அம்பையின் கனவுகளையோ, அவள் மலர் மாலையையோ யாரும் நம்பவில்லை. பீஷ்மரின் பராக்கிரமத்தை மட்டும் எல்லோரும் நம்பினார்கள். அதைப் பார்த்திருந்தவர்கள் வியந்து சொல்ல, இந்த மாலையை ஏற்கப் பயந்தார்கள்.

துருபதன் என்ற அரசனிடம் போய் இந்த மாலையை ஏற்கும்படி அம்பை மன்றாடினாள். பீஷ்மரின் மீதுள்ள பயத்தால் அவன் அம்பையை நகரத்தை விட்டு வெளியே

தள்ளி விட்டான். அம்பைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. துருபதனின் கோட்டை வாசலில் அந்த மாலையைப் போட் டாள். மெல்ல தீமுட்டினாள். தீயை வலம் வந்தாள்.

இனி நான் உயிரோடு இருந்து பயனில்லை. நான் மறுபடியும் பீஷ்மரைக் கொல்லுகின்ற வலிவோடு பிறக்கவேண்டுமென்று தீயில் பாய்ந்தாள். உயிர்விட்டாள். அவள் உயிர் அங்கிருந்து கிளம்பி துருபதனின் மனைவியின் வயிற்றில் சேர்ந்தது. துருபதனுக்கு அழகிய பெண்ணாகப் பிறந்தாள். துருபதன் அந்தப் பெண்ணுக்கு சிகண்டினி என்று பெயர் வைத்தான். அந்த சிகண்டினி வயது வந்ததும் குதிரை ஏறி கோட்டை வாசலில் இருந்த அந்த மாலையை எடுத்து கழுத்தில் போட்டுக் கொண்டாள்.

அவளுக்கு சகலமும் நினைவுக்கு வந்தது.

துருபதனும், பீஷ்மரின் பகையைக் கண்டு அஞ்சி சிகண்டினியை நாட்டைவிட்டு துரத்தி விட்டான். அந்த சிகண்டினியால் தனக்கு மரணம் நேரும் என்பதும் பீஷ்மருக் குத் தெரிந்து விட்டது. சிகண்டினி மலைகள் ஏறி எங்கு கங்கை உற்பத்தியாகிறதோ அந்த இடத்திற்குச் சென்று, அங்குள்ள இஷிகர் என்ற முனிவரிடம் பணிவிடை செய்து வந்தாள். கந்தர்வர்கள் அங்கு வந்து விளையாட. அதில் ஒரு கந்தர்வன் தன்னுடைய ஆண் வடிவத்தை அவளிடம் கொடுத்துவிட்டு அவளிடமுள்ள பெண் வடிவத்தை தான் ஏற்க விரும்புவதாகத் தெரிவித்தான்.

அவர்கள் மனமுவந்து தங்கள் வடிவங்களை பரஸ்பரம் மாற்றிக் கொண்டார்கள். சிகண்டினியின் உயிர் கந்தர்வனிடம் போய், கந்தர்வனின் உயிர் சிகண்டியினிடம் வர அவர்கள் உடம்பு வேறுவிதமாக

மாறியது. இஷிகர் அவள் ஆணாக வடிவம் பெற்றதைக் கண்டு ஆசிர்வதித்தார்.

“உன்னால் மிகப்பெரிய விஷயமொன்று நடைபெறப் போகிறது. எனவே, உன்னுடைய உக்கிரம் குறையாமல் வளரட்டும்.” என்று ஆசிர்வதித்தார்.

சகலமும் யோசித்தபடி துருபதனிடம் திரும்பினாள்.

துருபதன் அவள் கதையைக் கேட்டுத் திகைத்தான். “ஏன் இப்படி உயிரை வேறு ஒரு உடம்பில் செலுத்திக் கொண்டாய்” என்று வேதனையோடு சொன்னான்.

“பீஷ்மரை பழிவாங்கப் போகிறேன்” என்று உரத்த குரலில் சிகண்டினி பதில் சொன்னாள்.

ஆணால், பெண்ணுக்கு ஏற்பட்ட அவமானத்தை எவ்வளவு வெஞ்சினம் கொண்டாலும் தீர்க்க முடியாது. பெண் ஆணாக மாறினால்தான், ஆணின் அகங்காரத்தை அடக்க முடியும். இந்தக் கலியுகத்தில் பெண் ஆணை வஞ்சம் தீர்ப்பாள். ஆணாக உருமாறி வஞ்சம் தீர்ப்பாள். பெண் மென்மையான இயல்புடையவள். புருஷன் மீது விசுவாசம் உள்ளவள். அவள் மெல்லிய இயல்பை, அவள் விசுவாசத்தை யார் கேள்வி கேட்கிறார்களோ... கேலி செய்கிறார்களோ... அவர்களை பெண்ணின் வெஞ்சினம் எதிர்க்கத் துவங்கும் தன்னுடைய விசுவாசமே தனக்கு எதிராக இருப்பதைத் தெரிந்து கொண்டு அவள் மனம் கடுமையாகி... உடம்பு உறுதியாகி அவள் வெகு எளிதாய் ஆணாக மாறுவாள். ஆணாக வாழ்க்கை நடத்துவாள். ஆணாக உட்காருவாள். சாப்பிடுவாள். உறங்குவாள், அப்படி ஆணாக இருக்கிற பெண்தான் ஆணின் கர்வத்தை அழிப்பாள்.

“நான் சிகண்டினி அல்ல... சிகண்டி, நான் பீஷ்மரின் கர்வத்தை... யாருக்காகவோ பெண்களைக் கவர்ந்து வந்து திருமணம் செய்கின்ற அயோக்கியத்தனத்தை...

ஒரு காதலைப் பிரித்து பிறகு தனக்குத் தெரியாது என்று துரத்திய கேவலத்தை... அவரிடம் சொல்லிச் சொல்லி அவரைக் கொல்வேன். பீஷ்மரின் மரணம் என்னால் நேரும். இது சத்தியம்.” என்று உரக்கச் சொன்னாள்.

துருபதன் அவளைக் கண்டு பயந்தான்.

சிகண்டி குதிரையில் விரைந்து போகும்போது இந்தக்கதை முழுவதும் சொல்ல துருபதன் தேசத்து ஜனங்கள் எழுந்து நிற்பார்கள். சிகண்டியைப் பார்த்து கையசைப்பார்கள். மிகப் பெரிய யுத்தம் நடத்துகின்ற சபதம் மேற்கொண்ட எவரையும் மக்கள் மரியாதையுடன்தான் பார்க்கிறார்கள்.

அம்பை என்கிற பெண்ணுக்கு ஆண் வடிவம் கிடைத்துவிட்டது. அம்பையைப்போல இந்த தேசத்தில் எந்தப் பெண் அலைக்கழிந்தாலும், அவமானப்படுத்தப்பட்டாலும், அவள் ரௌத்திரமும் அவளை ஆணாக்கும். ஆண்களைப் பழி வாங்கும்.

சுபம்